# லைக்கதி

ரி 1-4 மாத வெளியீடு பங்குனி



அணா 8

PSG

① விவசாயக் கருவிகள் ② செனிடிரிப்யூகல் பம்புகள் ③ எலக்டிரிக் மோட்டார்கள்
④ ஆயில் மில்லிங் மெஷினரி ⑤ டெக்ஸ்டைல் மெஷினரி ⑥ மெஷின் டூல்ஸ்




பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்

பூளைமேடு கோயமுத்தூர் (தென் இந்தியா)

தந்தி: CHARITY. டெலிபோன் நெ { தலைமை ஆபீஸ் ... 58

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAR 1949
MADRAS

கலங்கல்

**K. N. திருமலைசாமி**

ஆச்சாரி & பிரதர்ஸ்,

ஷராப்பு வியாபாரம்,

பெரியகடை வீதி,

கோயமுத்தூர்.

குறித்த காலத்தில் வைரம், தங்க
நகைகள் ஆர்டர்படி மிகவும்
நேர்த்தியான வேலைப்
பாடுடன் செய்து
கொடுக்கப்படும்

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்.

K. ராமச்சந்திரன்

**பித்தளைப் பாத்திரக்கடை**

பெரியகடை வீதி

கோவை

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள்
மில் காண்டின்கள்
ஆஸ்பத்திரிகள்
இன்னும் இதர
ஸ்தல ஸ்தாபனங்களுக்கும்
சப்ளை செய்பவர்கள்.

## A. P. Venkatesalu Naidu,

Mill Stores Supplier,
Manufacturers Representatives and
Direct Importer,

PAPPANAICKENPALAYAM. COIMBATORE.

★

Dealing in Bobbins, Machinery
Spare Parts,
Roller Skins, and in all Textiles,
Spinning & Weaving Accessories at
Competitive Rates.

தந்தி: "சுப்ரமணியா"

டெலிபோன் { ஆபீஸ் 176 / பங்களா 146

# ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

★

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் தறிகளுக்கும் உகந்த 30-நெ. முதல் 60-நெ. வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

## *12,096 கதிர்கள் தொழில் செய்கின்றன.*

★

தேசிய மூலதனம்

தேசிய தொழிலாளர்

தேசிய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

**தேசிய தொழில் ஸ்தாபனமாகும்.**

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

## Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

*Managing Agents & Secretaries:*

**K. Krishnaswamy Naidu & Brother.**



தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
211706.
சென்னை-600 008

# புது வருஷத்தில்

# பொது மக்களுக்கோர்

# நற்செய்தி

உங்களுக்குத் தேவையான ஜவுளி
வகையருக்கள் எல்லா (பிரைமரி) கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

பலரக வாயில்கள், காடா, மல்,
லாங்கிளாத், ஷர்டிங், கோட்டிங் தினுசுகள்,
வேஷ்டிகள், புடவைகள், சீட்டி ரகங்கள் முதலியவை
கண்ட்ரோல் விலையில் எல்லா பொது மக்களுமெந்த (பிரைமரி)
கோவாபரேடிவ் ஸ்டோரிலும் வாங்கிக்கொள்ளலாம்.
(பிரைமரி) ஸ்டோரில் மெம்பராயிருக்க
வேண்டுமென்ற அவசியமில்லை.

—: INSERTED BY :—

சென்ட்ரல் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்

கோயமுத்தூர்.

# *Available for immediate delivery*

100 H. P. Crompton Parkinson Motor slipring 710 R. P. M. three phase 400/440 V 50 cycles with oil immersed starter, slide rails & pulley.

## *Also we can supply*

Crompton Parkinson 1 H P, 2 H. P, 3 H. P, 5 H. P. & 6 H. P, Totaly enclosed motors 930 R. P. M. & 1430 R. P. M D. C. C. wires, of all sizes B. 60 & B. 68 'V' Belts and all kinds of wiring accessories.

**Apply to:**

**RADHAKRISHNA & COMPANY,**
5-127 AVANASI ROAD, COIMBATORE



கோயமுத்தூர்

# பிரிமியர் கார்பொரேஷன் லிமிடெட்

8/2 மால் மில் ரோடு, **P. B. 210,** கோயமுத்தூர்.




எங்களிடம்
இங்கிலீஷ் பம்பு
செட்டுகள், DPF பம்பு செட்டு
கள், GEC, BTH, AEI, BBC,
புரூக், கிராம்டன் மோட்
டார்கள் MEM ஸ்டாடர்
கூட்சுகள் ரெடி
டெலிவரிக்கு குறைந்த விலைகளில் கிடைக்கும்.
$\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ & 1 HP வீட்டு பம்பு செட்டுகள், எலக்ட்ரிக்
சாமான்களும் சப்ளை செய்கிறோம்.

தேவைக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது லெட்டர் எழுதுங்கள்.

# குமரன் மில்ஸ் லிமிடெட்,

**புதுப்பாளையம், கோயமுத்தூர்.**

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மெண்டு தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்.

**20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது**

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

*Managing Agents:—*

**N. APPUSWAMY NAIDU & CO.,**

*Managing Director:—*

**G. V. MUTHUSWAMY, B. Sc.,**

# கலைக்கதிர்

1312

ஆசிரியர்: திரு. ஜி. ஆர். தாமோதரன்,
[ B. Sc., Elec., B. Sc. Mech. (Durham). A. M. I. E. E. (London.) ]

மலர் – க சர்வதாரி : பங்குனி இதழ் – ச

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சஞ்சீவி ஆகாதோ? ... | திரு. டி. வி. சுவாமிநாதன் ... | 3 |
| ஒப்பாரிக் கலை ... | திரு. ம. பொ. சி. ... | 4 |
| டால்ஸ்டாய் குறள் பயின்றவர் ... | ... | 8 |
| வரலாறு : காவியம் ... | டாக்டர் மு. வ. ... | 9 |
| சாகுபடி முறைகள் ... | திரு. மு. அருணாசலம் ... | 13 |
| சங்க காலச் சோழர்கள் ... | திரு. தி. வை. சொக்கப்பா ... | 20 |
| காண்பது கனவு தானா? ... | திரு. தி. கோயில் பிள்ளை ... | 25 |
| பழங்காலத்தில் இளந்தமிழன் | திரு. ஜி. பெருமாள் ... | 30 |
| வீண் கனவா? ... | திரு. சா. பூமிநாதன் ... | 36 |
| பூகோளமும் வரலாறும் ... | திரு. ஜியார்ஜ் குரியன் ... | 39 |
| திருக்குறளும் உரைகளும் ... | திரு. அ. இராமசாமிக் கவுண்டர் | 43 |
| பரிணாமக் காரணம் ... | திரு. சி. வேலாயுதம் ... | 46 |
| மனிதனும் சூழ்நிலையும் ... | திரு. தா. ஏ. சண்முகம் ... | 51 |
| நூல் அரங்கு ... | ... | 57 |
| வினாக்களும் விடைகளும் | ... | 59 |


'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

அட்டைப் படம்

தமிழினத்தவருக்கு நன்கு அறிமுகமான அமரகவியின் திரு வருவத்தை வெளியிடுவதில் '**கலைக் கதிர்**' பெருமை கொள்கிறது.

தமிழ் என்னும் வளம் கொழிக்கும் ஆறு மாறு ஓட்டத்தை உடையது. அந்த மாறு ஓட்டமும் இடைக் காலத்திலே தடுக்கப்பட்டுத் தேங்கிக் கிடந்தது.

தேக்கத்தை நீக்கி, ஆக்க நெறியிலே ஆறு தடையின்றி ஓடுமாறு செய்த கவிஞர் பாரதியாராவார்.

தமிழின் தொன்மைச் சிறப்பை மறவாமல் எதிர்காலச் சிறப்புக்கு ஏற்ற வழிகாட்டியாயுள்ள பாரதியாரை '**கலைக் கதிர்**' தன்னுடைய வழிகாட்டியாகக் கொள் கிறது.

புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
...... ...... ...... ......

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"
என்ற கவிஞன் குரல் நமக்கு வழி காட்டுகிறது.

தமிழ்நாடு ... சங்

# விஞ்ஞானம் சஞ்சீவி ஆகாதோ?

டி. வி. சுவாமிநாதன்

வியன்விண்ணை ஓரடியில்
    விரிந்துள்ள பாருலகம்
அயனபடைப்பை ஓரடியில்
    அளந்து’விட்டுச் சிறுவன் அரி

"நிலமெங்கே? மூன்றடிக்கு
    நீதந்தாய் வாக்"கெனவே
தலைதனிந்தான் மாபலியும்;
    தலைமுறையாய்க் கதைதொடரும்.

வியன்விண்ணை நீணிலத்தை
    விளங்குமொளி நீர்காற்றை
இயற்கைநிறை மர்மமெலாம்
    இவ்வளவே தானென்று

விஞ்ஞானம் ஆராய்ந்து
    விளம்பி‘இனி என்ன’வெனும்;
அஞ்ஞானம் அகற்றமிக
    அறிவொளியைப் பரப்புதற்காய்க்

காலத்தை அளந்துவிடும்
    ககனத்தை ஊடுருவும்
பாலமில்லாப் பெருநதியைப்
    படகின்றிக் கடந்துவரும்

ஞாலத்தின் அணுச்சக்தி
    ஞாயிறின்விண் ணியற்கதிர்கள்
சாலத்திறன் வாய்த்தவற்றைச்
    சமர்களிலே செலுத்தாது

மேவுமிவை ஒருதிரட்டி
    மேதினியில் செலவிட்டால்
சாவுமிடி துயர்தீர்க்கும்
    சஞ்சீவி ஆகாதோ?

# ஒப்பாரிக் கலை

திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்.

•

தலைப்பைக் கண்டவுடனே, "என்ன, ஒப்பாரியையும் கலைவரிசையில் வைத்துக் கணக்கெடுப்பதா?" என்று கலையுணர்வில் தலைசிறந்த அறிஞர்கள் அங்கலாய்க்கலாம். ஆனால், ஒப்பாரிப் பாடலின் வளத்தையும் வரலாற்றையும் ஆராய்ந்தால் மங்கையரின் கண்ணீரிலே கலந்துவரும் அந்தக் கவிதையும் கலையுலகம் மதிக்கத் தக்கதே என்பது புலனாகும்.

இறந்தாருக்கு இரங்கி, இருப்பார் அழுவது மனிதவர்க்கம் முழுவதுக்குமான பொதுப் பண்பு. என்றாலும், இறந்தாரைப் பற்றித் தம்முடைய இதயத்தே எழும் எண்ணங்களை இசையோடு கலந்து வெளியிட்டு அழுவது தமிழகத்தைத் தவிர வேறு நாடுகளில் இல்லை. அதனால்தான் தமிழினத்தின் பெருமை கூறவந்த நாமக்கல் கவிஞர்

இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோடு டழுவது கண்கூடு

என்று ஒப்பாரிக் கலையை உவமை கூறினார்.

இறந்தவரின் பிணத்தை நடுவே கிடத்தி அதன் இரு மருங்கிலும் பெண்கள் வரிசையாக அமர்ந்து எதுகை இடறாமல் மோனை முறியாமல் கவிபாடி அழுவதை இன்றும் தமிழகத்தில் கண்டுவருகிறோம். நின்றவண்ணம் தம் இரு கைகளாலும் மார்பில் அறைந்து கொண்டு அழுவதும் அல்லது வட்டமாக நின்று கைகளைக் கோத்துக் கொண்டு இடைவிடாது சுற்றிக் கொண்டே சாய்ந்தாடி அழுவதும் ஒப்பாரிக் கலையின் மற்றொருவகையாகும்.

ஒப்பாரிக் கலை தமிழகத்தில் தொன்றுதொட்டே இருந்து வருவதாகத் தெரிகிறது. புறநானூறு 25-ம் பாடலிலே போர்க்களத்தே ஆடவரைப் பலிகொடுத்த மங்கையர்,

'முலைபொலி யாகம் உருப்ப நூறி

[முலை விளங்கும் மார்பில் அனலெழும்படியாகத் தம் கைகளால் அறைந்துகொண்டு] அழுததாகக் கூறப்படுகிறது. பண்டைப் புலவர்கள் தாம் இயற்றிய காவியங்களிலும் இந்த ஒப்பாரிக் கலைக்கு இடமளித்துள்ளனர். சிலப்பதிகாரத்துள் கொலைக்களத்தே வெட்டுண்டு கிடந்த கோவலன் பிணத்தின்மீது விழுந்து அழுகின்ற கண்ணகி,

மன்பதை அலர்தூற்ற
மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான்
அவலங்கொண் டழிவலோ

பார்மிகு பழிதூற்றப்
பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா
இதுவென உரையாரோ

என்றெல்லாம் பாடுகிறாள். இந்த வரிகள் தற்காலப் பெண்கள் பாடும் ஒப்பாரிப் பாவனையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். கவியரசர் கம்பரும் தாம் இயற்றிய இராம காவியத்தில் மைந்தன் இந்திரசித்தும் மன்னன் இராவணனும் இறந்துபட்ட காலையில் அவர்களுடைய உடலருகே அமர்ந்து மண்டோதரி அழுகின்ற இடங்களில் ஒப்பாரிக் கலையின் அழகை வெகு அருமையாகக் கையாண்டிருக்கிறார்.

சாதாரணப் பெண்கள் பாடும் ஒப்பாரிப் பாட்டில் உள்ள கருத்துச் செறிவும் கற்பனை அழகும் கவிச் சக்கரவர்த்திகளைக் கூட மயங்க வைத்ததுண்டு என்பதற்குக் கம்பரைப் பற்றிக் கர்ண பரம்பரையாக வழங்கிவரும் கதையொன்று சான்று கூறுகிறது. அந்தக் கதை வருமாறு:

ஒரு சமயத்தில் கம்பர் ஒரு கிராமத்தில் தங்க நேரிட்டது. அப்போது ஒரு நாள் அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்து வெளியே சென்றார். வழியில் ஒரு வீட்டினின்று இளம் பெண்ணின் அழுகுரல் கேட்டது. அவ்வழுகையினூடே ஒப்பாரியாகச் "சில்லென்று பூத்த" என்ற வார்த்தைகள் அவள் வாயினின்றும் வெளிக் கிளம்பியதும் அடுத்த வார்த்தைகள் வெளிவராதவாறு அவள் வாயை யாரோ பொத்தி அழுகையை அடக்கியதாகத் தெரிந்தது. அதை அறிந்த கவிச் சக்கரவர்த்தி கம்பர், "சில்லென்று பூத்த" என்ற சொற்றொடர் கவிச் சுவை வாய்ந்ததா யிருந்தமையால் அதன் பின்னர் அவள் சொல்ல விரும்பியது எதுவாக இருக்கலாம் என்பதை அறிய ஆவல் கொண்டார். ஆனால், அவரது கற்பனைக்கு அது எட்டவில்லை. அக்கம்பக்கத்து வீட்டார்களை அணுகித் தமது மனநிலையைத் தெரிவித்து அதைத் தெரிந்துகொள்ள என்ன செய்யலாமென்று கேட்டார். அவர்கள் அந்த அழுகுரல் சமீபத்தில் தன் நாயகனை இழந்த இளம் விதவையினுடைய தெனவும், நாயகனை நினைந்து அதிகாலையில் விழித்தெழுந்து அழுவது வழக்கமெனவும், அங்ஙனம் அழுவதை நிறுத்துவது பக்கத்திலிருக்கும் வயதான பெண்களின் கடமையெனவும் தெரிவித்தனர். கவிச்சுவையில் ஆர்வங்கொண்ட கம்பர் மறுநாளும் அங்கே சென்று அந்த வீட்டின் தெருத்திண்ணையில் தங்கியிருந்தார். வழக்கம் போல அழுகைக் குரல் ஒப்பாரியுடன் வெளிக் கிளம்பிற்று. இவரது அதிர்ஷ்டவசமாக அவள் வாயைப் பொத்த ஆட்கள் சற்றுப் பின் தங்கிவர நேரிட்டது. அவ் விதவைப் பெண்,

சில்லென்று பூத்த சிறுநெருஞ்சில் காட்டினுள்ளே
நில்லென்று சொல்லி நிறுத்திவைத்துப் போனீரே

என்று பெருமூச்செறிந்து புலம்பியழுதாள்.

படித்தறியாப் பாமரப் பெண்கள் கூட இந்த ஒப்பாரிக் கலையில் மிகப் பண்பட்டு விளங்குகிறார்கள். இறந்தவரின் வாழ்க்கை வரலாற்றுக்கேற்பத் தமக்கு அவரோடிருந்த தொடர்புக்குப் பொருந்தப் பாடியழும் திறமை கல்வியறிவற்ற பெண்களுக்கும் அமைந்திருப்பதைக் கண்டு நாம் அதிசயிக்கிறோம். ஆம்; அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பெதற்கு என்று ஆணினம் நீதியற்ற வகையில் பெண்ணினத்தை அடுப்பங்கரையளவில் அடக்கி வைத்தது. ஆனால், அவ்வையின் வழி வந்த பெண்குலம் தம் கலைத் திறத்தை

இன்னும் அடியோடு இழந்து விட வில்லை.

இக்காலப் பெண்களின் ஒப்பாரிப் புலமைக்குச் சில எடுத்துக் காட்டுகள் கூறுகின்றேன். ஓர் அம்மையாரின் மருமகள் திருமணமாகி மாமி வீடு வந்த மறு வாரத்திலேயே இறந்துவிட்டாள். உயிர் நீப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர்க்கூட அம்மங்கை இறந்து விடுவாளென்று எவரும் எண்ணியதில்லை. ஆனால், எதிர்பாராது மருமகளைப் பறிகொடுத்த அவ்வம்மையார் தன் உள்ளத்தில் தோன்றிய எல்லையற்ற துக்கத்தை ஒப்பாரியில் பாடியழக் கேட்டேன். இறந்தவளின் திருமணத்துக்கு நட்ட பந்தற் கால்கள் இருந்த குழிகள்கூட மூடப்படா முன்னமே அப்பெண்ணின் வாழ்க்கை முடிந்துவிட்டது. திருமணப் பந்தலில் மண மக்கள் மாற்றிக் கொண்ட பூமாலைகள் வீட்டின் ஒரு புறத்தே தொங்கிய வண்ணம் காட்சியளித்தன பலவித வண்ணங்களால் சித்திரம் எழுதப்பட்டு மணப்பந்தலில் வைக்கப்பட்ட கூறைப் பானைகள் வீட்டின் மூலையில் அடுக்கி வைக்கப்பட் டிருந்தன. இந்தக் காட்சிகளை யெல்லாம் கல்லையும் உருக்கும் வண்ணம் அவ்வம்மையார் கவிதை தீட்டிப் பாடினர்.

பந்தக்கால் நட்ட இடம் — அங்கே
பள்ளம் மறையலையே

முகூர்த்தக்கால் நட்டஇடம் — அங்கே
மே (ா) டு உயரலையே

பூமாலை சூட்டியல்லோ - உன்பெற்றர்
புண்ணியனைத் தேடிவைத்தார் – அந்தப்
பூமாலை வாடுமுன்னே — நீ
பொன்னுலகம் போனதென்ன ?

மணவறையில் கைப்பிடித்த கணவனுடன் பள்ளியறை புகுந்த பத்தாம் நாளுக்குள் பிணமான நிலைகண்டு இரங்கியழும் அவ்வம்மையார் பழிகூறிப் பாடும் பகுதியைப் பார்ப்போம்.

கூறைசால் கொண்டுவந்த — அந்தக்
குயவனும் கண்குருடா ?

சேலை நெசவுசெய்த — அந்தச்
சேணியனும் கண்குருடா ?

என்று, நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்துத் தொழில் புரியும் குயவரையும் சேணியரையும் குறைகூறி அழுத மறுகணமே, 'வேதம் ஓதி வேள்வி பெருக்கிச் சித்துகள் புரியும் வித்தைகளறிவோம்' என்று பேசும் வேதியரின் சாஸ்திர ஞானத்தையும் சாடிப் பாடுங்கால்,

பஞ்சாங்கம் பார்க்கவந்த — அந்தப்
பார்ப்பானும் கண்குருடா ?

என்று பதறியழுதார்.

அவ்வம்மையாரின் பேத்தி ஒருத்தி இறந்துவிட்டது. பல மாதம் பாடுபட்டு மருத்துவம் செய்தும் பலனற்றுப் போன நிலைமையைப் பாட்டாகத் தீட்டுவதைப் பாருங்கள்.

*பாடி வைத்தியன் - அவன்
பஸ்பத்தால் தீருமென்றன்

§ஓசை வைத்தியன் – அவன்
ஒரு நாளில் தீருமென்றன்

சூளை வைத்தியன் – அவன்
சூரணத்தால் தீருமென்றன்

மலையாளத்து மாந்திரிகன் – அவன்
மந்திரத்தால் தீருமென்றன்.

அத்தனைக்கும் தீராமல் – நீ
அரன்பதிக்கு ஏகிவிட்டாய்

பெண்கள் இறந்தாருக்கு ஏங்கியழுவதோடல்லாமல், இருந்தாரைத் தாக்கிப் பாடுவதும் உண்டு. இதை மேற்சொன்ன அம்மையாரைக் கொண்டே அறிந்தேன். அவ்வம்மையாரின் அண்ணன்

---

* ஓர் ஊர். § ஒரு சாதி.

பரம சாது. அண்ணியாரோ வாய்ப்பட்டி. கணவனையும் நடுங்க வைக்கும் காளிதேவி என்றாலும் தகும். எனவே, தமது அண்ணியாரை இழவு இல்லங்களில் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம் இவ்வம்மையார் அவரைத் தாக்கிப் பாடி அழுவதுண்டு. அதில் பின் வரும் பாட்டு ஓர் எடுத்துக் காட்டு:

காரை முள்ளு கீரை முள்ளு – உனக்குக்
கை நிறைந்த ஊவா முள்ளு – அந்த
ஊவா முள்ளுப் பாவியண்டை – நீ
ஊடாட வல்லவளே

இவ்வம்மையார் தற்குறியல்ல; நல்ல தமிழ் ஞானம் உடையவர். தேவாரம், திருவாசகம் போன்ற சமயத் தமிழ் நூல்களைப் பழுதின்றிப் பாடும் பண்புடையவர். அப்படியிருந்தும் குடும்பக் கலைகளான ஒப்பாரி, தாலாட்டுப் போன்ற கலைகளையும் நன்கு மதிப்பவர்.

ஒப்பாரி பாடியழும் வழக்கம் பொதுவாகத் தமிழ்ப் பெண்கள் எல்லோரிடமும் இருந்து வருகிறது. என்றாலும், பழங்குடித் தமிழ் மக்களிடமே இது ஒரு கலை என்று கூறக்கூடிய அளவுக்கு விளங்கி வருகிறது. பெண் பிறப்பே பாவப் பிறப்பு என்ற எண்ணம் வளர்ந்து வந்ததன் விளைவாகப் பெண்கள் சம்பந்தப்பட்ட எல்லாக் கலைகளும் ஏளனத்துக்கும் இழிவுக்கும் உள்ளாகிவிட்டன. மேலும், நாகரிக வளர்ச்சி காரணமாக ஒப்பாரி தாலாட்டு ஆகிய இசையோடியைந்த குடும்பக் கலைகள் தமிழகத்தில் மறைந்துவருகின்றன. ஆனால், பண்டை நாள் குடும்ப கலைகளுக்கு மதிப்புத் தரும் பெண்கள் மேற்சொன்ன அம்மையாரைப் போன்று ஒரு சிலரேனும் இருந்து வருகின்றனர். அவ்வம்மையார் வேறு யாருமில்லை; என்னை ஈன்ற அன்னையார்தான். மணப்பந்தலில் அணிந்துகொண்ட மாலை வாடா முன்னர் மனைவியை இழந்தவன், பந்தக்கால் நட்ட பள்ளம் மறையுமுன் பத்தினியை இழந்தவன் நானேதான்!

●

## சாவு

துன்பத்துள் எல்லாம் பெருந் துன்பம் சாவுதான் என்று உறுதியாக நம்பித்தான் அதை எண்ணி மனிதன் அஞ்சுகிறான். ஆனால், அதுவே நன்மைகளுள் மிகப் பெரிய நன்மையாகக்கூட இருக்கலாம். யார்கண்டார்கள்?

— மிட்ஃபோர்டு

எந்தக் கணமும் சாகத் தயாராய் இரு. அப்படியிருந்தால், செத்தாலும் முன்னைவிட இன்பம்தான்; வாழ்ந்தாலும் முன்னைவிட இன்பம்தான்.

— ஷேக்ஸ்பியர்

சாவு என்பது இறுதித் தூக்கமா? இல்லை. அதுதான் இறுதியாக, முடிவிலே கிட்டும் புத்தெழுச்சி.

— வால்ட்டர் ஸ்காட்

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு.

— தமிழ் மறை

# டால்ஸ்டாய் குறள் பயின்றவர்.

"வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியார் தற்புகழ்ச்சிக்காகப் பாடவில்லை. அண்ணல் காந்தியடிகளின் ஆசான் என்று கூறப்படும் டால்ஸ்டாய் ஆறு குறட்பாக்களை மேற்கோளாகக் கொள்கிறார். அவை வருமாறு:

The aim of the sinless One consists in acting without causing sorrow to others, although he could attain to great power by ignoring their feelings.

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (311)

The aim of the sinless One lies in not doing evil unto those who have done evil unto him.

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள் (312)

If a man causes suffering even to those who hate him without any reason, he will ultimately have grief not to be overcome.

செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செயதபின்
உய்யா விழுமம் தரும். (313)

The punishment of evil doers consists in making them feel ashamed of themselves by doing them a great kindness.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314)

Of what use is superior knowledge in the one, if he does not endeavour to relieve his neighbour's want as much as his own?

அறிவினான் ஆகுவது உண்டோ பிறதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. (315)

If, in the morning, a man wishes to do evil unto another, in the evening the evil will return to him.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (316)

— THE HINDU KURAL.

— தமிழ் மறை.

"நிழற் படத்திற்கும் ஓவியத்திற்கும் உள்ள வேறுபாடுதான் வரலாற்றுக்கும் காவியத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும்"

# வரலாறு: காவியம்

ஓவியம் தீட்டுதல் ஒரு கலை; நிழற்படம் (Photo) எடுத்தலும் ஒரு கலையே. இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன? நிழற்படம் எடுப்பவன் உலகத்தில் நிகழ்வதையே படம் பிடிக்கமுடியும்; நிகழக்கூடியதைப் படம் பிடிக்க முடியாது; நிகழ முடியாததையும் படம் பிடிக்க முடியாது. ஆனால், ஓவியக் கலைஞன் உலகில் நிகழ்வது, நிகழக்கூடியது, நிகழ முடியாதது ஆகிய மூவகைப்பட்டவற்றையும் கலையுருவாக்கிக் காட்ட முடியும். எடுத்துக்காட்டாக: வேங்கை மரத்தில் மயில்கள் இயற்கையாக இருந்து மகிழ்வது உண்டு. அந்த இயற்கைக் காட்சியை நிழற்படம் எடுத்துக்காட்ட முடியும். ஆனால், ஓவியக் கலைஞன் விரும்பினால், வேங்கை மரத்தில் மயில் மகிழ்வதையும் காட்ட முடியும்; அன்றித் தென்னை மரத்தில் மயில் ஆடுவதாகத் தீட்டவும் முடியும். அவ்வாறு தென்னை மரத்தில் மயில் ஆடுவதாகக் காட்ட முயலும் போது, அந்தக் கலைஞன் வாழ்க்கையோடு ஒட்டிய கற்பனைக் கலையைப் போற்றும் செம்மை மனம் உடையவனானால், அந்தத் தென்னை மரத்தையே குட்டையாக்கியோ முடமாக்கி வளைத்தோ மயில் ஏறி ஆடக் கூடியதாகச் செய்வான். வாழ்க்கையோடு ஒட்டாத போலிக் கற்பனையைப் போற்றும் மனம் உடையவனானால் அவன் நெடுக வளர்ந்த உயர்ந்த தென்னை மரத்திலும் மயில் ஏறி ஆடுவதாகப் படம் வரைய முனைவான்.

நிழற்படத்திற்கும் ஓவியத்திற்கும் உள்ள இந்த வேறுபாடுதான் வரலாற்றுக்கும் காவியத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

வரலாறு உள்ளதைக் கூற ஏற்பட்டது. காவியமோ உள்ளதைக் கூறுவதும் உண்டு; உள்ளதைப் புனைவதும் உண்டு; இல்லதைப் புனைவதும் உண்டு. கற்பனை யுலகில் பறக்காமல் உணர்ச்சி மிகாமல் ஒரு பற்றுமில்லாமல் எழுத வல்லவரே வரலாறு எழுத முடியும். கற்பனையுள்ளம் படைத்தவர் வரலாறு எழுதப் புகுந்தாலும் அது காவியமாக மாறும்; கலையுணர்ச்சி யில்லாதவர் காவியமே எழுதப் புகுந்தாலும் அது வரலாறு போல் நிற்கும்.

பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த பெரியோர்கள் வரலாறுகள் எழுதி வைக்காதது பெருங்குறை என்று இன்று பேசப்படுகின்றது. அது

டாக்டர் மு. வரதராசன், M.O.L., P.H.D.

உண்மைதான். ஆனால், அவர்கள் என்ன செய்திருக்க முடியும்? அணியும் அணிகலன், உடுக்கும் உடை, ஆளும் பாத்திரம், கட்டும் வீடு, உண்ணும் உணவு, செய்யும் தொழில் எல்லாவற்றிலும் கலையையே கண்டு கலையையே வாழ்வித்த பழந்தமிழ் மக்கள் வரலாற்றுத் திறன் இல்லாமல் வாழ்ந்ததில் வியப்பில்லை. பழந்தமிழ் மக்களின் மனம் கலையுலகில் பறக்கும் பறவையாக இருந்தது; உலகநிகழ்ச்சிகளிலேயே ஊன்றி வேர்கொண்டு நிற்கவில்லை. பல நூற்றாண்டுகள் கழித்துத் தமிழ் நாட்டு அரசியலில் களேபரம் நிகழ்ந்து, வாழ்க்கையில் கலக்கம் ஏற்பட்ட பிற்காலத்தில் தான் கலையுலகப் பறவை தன் வானத்தை விட்டு நிலம் நோக்கி வரத் தலைப்பட்டது; சிற்றூர்களின் நடைமுறைகளையும் கல்லில் பொறித்து வைக்கும் வழக்கம் ஏற்பட்டது; அவ்வாறு அமைந்துள்ள கல்வெட்டுக்களே தமிழ் நாட்டு வரலாற்றுப் பகுதிகளாகக் கூறத் தக்கவை.

தமிழ் நாட்டுக்கு மட்டும் அல்லாமல், இவ்வுண்மை எல்லா நாட்டுக்கும் ஓரளவு பொருந்தும். பிறரோடு பழகுவதில் மிக வல்லவராய் உள்ளத்தில் உள்ளதை மறைத்து உணர்த்தத் தக்கதை மட்டுமே பேச வல்லவராய், ஆளும் வகையில் தேர்ந்தவராய் விளங்கும் ஆங்கிலேயர்க்கும் இது ஓரளவு பொருந்துகின்றது. ஏன்? அவர்களாலும் கலையுள்ளத்தை அடியோடு துறக்க முடியவில்லை. மெகாலே என்னும் ஆங்கிலேய அறிஞர் எழுதிய ஆங்கில நாட்டு வரலாறு பெயர் பெற்ற வரலாற்று நூலாகும். அதைப் பற்றியே ஒருவர், "படிக்கத் தக்க புனைகதை ஒன்று வேண்டுமென்று கேட்டால், மெக்காலே எழுதிய வரலாறு படிக்கலாம்" என்றார்.

வரலாறு என்று எழுதப்பட்ட இக்காலத்து நூலின் நிலைமையே இது என்றால், அறிவு வளர்ச்சியைப் பெரிதாகப் போற்றாமல் உள்ளப் பண்பாட்டையே பெரிதாகப் போற்றிய பழந்தமிழ்க் கலைஞர்கள் தமிழ் நாட்டு வரலாறு எழுதியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? வரலாறாக நிற்காமல் காவியமாக மாறியமைந்திருக்கும் அன்றோ?

இதற்கு ஒரு சான்றும் வேண்டுமோ? புறநானூறு என்னும் சங்ககாலத் தொகை நூலில் உள்ள பாடல்களில் பெரும்பாலானவை வரலாற்றுப் பகுதிகளே. அவை இன்று வரலாறாக நின்றுள்ளனவா? இல்லை; சிறந்த பாடல்களாக வாழ்கின்றன.

நீண்டுயர்ந்த தென்னைமரத்தின் மேல் மயில் ஆடுதல் போன்ற இல்லது புனைதல் புறநானூற்றில் இல்லை. முடத்தெங்கு அல்லது குறுகிய தென்னையின்மேல் மயில் ஆடுதல்போன்ற உள்ளது புனைதல் புறநானூற்றில் உண்டு. வேங்கை மரத்தின்மேல் மயில் மகிழ்ந்திருத்தல் போன்ற உண்மை நிகழ்ச்சிகளும் புறநானூற்றில் பல உள்ளன. ஆகையால் தமிழ்நாட்டுப் பழைய வரலாறு இல்லையே என்று வருந்துவோர், உண்மையை உள்ளவாறு அல்லது புனைந்து கூறும் பாடல்கள் உள்ளன என்பதை எண்ணி மகிழலாம்.

அப்போதும் ஒரு குறை தோன்றும். இந்தப் பாண்டியன் இன்ன ஆண்டில் பிறந்தான், இத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தான், இன்ன ஆண்டில் உயிர்நீத்தான் என்னும் குறிப்புக்கள் இல்லாதபோது அது வரலாற்றுக்கு உதவுமோ என்று வாடலாம். வரலாறு என்பது தனிமனிதன்

ஒருவனுடைய பிறப்பு வாழ்வு இறப்பைப் பற்றிக் கூறுவது என்னும் கருத்துடையவரின் போக்கே அது. அரசனே ஆயினும் தனிமனிதனுடைய வாழ்வைவிட, அவனுடைய ஆட்சியில இருந்த நாட்டின் நிலைமையைத் தெரிவிப்பதே வரலாறு என்று புத்துணர்வு பெற்றவர் புறநானூற்றைக் கற்று மகிழமுடியும்.

ஆம், வரலாறு என்பது நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் கூறுவது; புறநானூற்றில் அவ்வாறு இல்லையே, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிற்சில நிகழ்ச்சிகளையே பாடியுள்ளனரே, இது குறையன்றோ எனக் கேட்கலாம். இதுவும் ஒரு குறையே! ஆனால், மிகச் சிறு குறை. நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் பிற்காலத்தார் அறிவதால் பயனில்லை; நிகழ்ச்சிகளுள் புதியன சிறந்தன மாறியன மட்டும் அறிந்தால் போதும். எல்லாவற்றையும் காட்டுவது நிழற்படம்; வேண்டியவற்றை மட்டும் காட்டுவது ஓவியம். வேங்கைமரத்தையும் மயிலையும் பசும்புல் தரையையும் பின்னணியான மலையையும் மட்டும் தீட்டுவர் ஓவியக் கலைஞர்; அவர் உயிரும் உணர்வும் உள்ளவர்; வேண்டியது வேண்டாதது எனப் பகுத்துணர்ந்து அழகுறுத்தும் ஆற்றல் உள்ளவர். நிழற்படம் உயிரும் உணர்வும் அற்றது; உள்ள எல்லாவற்றையும் காட்டுவது; வேங்கைமரத்தின் கீழ் எப்படியோ வந்துசேர்ந்துள்ள மாட்டெலும்பையும் படமெடுக்கும்; மற்றவற்றையும் படமெடுத்துவிடும். ஓவியக் கலைஞரோ, தாம் உணர்த்தவேண்டிய கருத்திற்கு அந்த மாட்டெலும்பும் பிறவும் வேண்டியிருந்தால்தான் தீட்டுவார். ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்ஸனுடைய வரலாற்றை ஒருவர் விடாமல் முழுதுமாகக் கூறியிருந்தால் அவர் நாள்தோறும் பல் துலக்கியது முதல் குளித்தல் உண்ணல் பருகல் வரையில் எல்லாவற்றையும் விடாமல் எழுதியிருக்கவேண்டும். அப்படி ஒரு நூல் எழுதியிருந்தால் அந்த நூல் இன்றுவரையில் உயிரோடு வாழ்ந்திருக்க முடியாது; வாழ்ந்திருந்தாலும் சிறந்ததாகப் போற்றிப் படிக்கப்படாமல் ஒதுங்கியிருக்கவே நேரும். அவருடைய வரலாறாகப் பாஸ்வெல் (Boswel) என்பார் எழுதிய 'வாழ்க்கை' என்னும் நூல் சிறப்போடு வாழ்கின்றது; வாழ்க்கை வரலாற்று நூல்களில் தலைசிறந்ததாகப் போற்றப்படுகின்றது. காரணம் என்ன? அந் நூலில் வேண்டாத பகுதிகள் இல்லை; வேண்டியவை மட்டுமே உள்ளன. அறிஞர் ராபர்ட் லிண்ட் என்பவர் கூறுவதுபோல் ஜான்ஸனுடைய வாழ்க்கையை எழுதிய பாஸ்வெல் அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளில் சுவையற்றவைகளை விட்டுச் சுவையானவற்றை மட்டும் அழகுபடத் தொகுத்திருப்பதாலேயே சிறந்ததாக விளங்குகின்றது. புறநானூறும் அத்தகையதுதான்.

உண்மையாக வருந்தவேண்டிய காரணம் வேறு சில உள்ளன. பழந்தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளாகப் புலவர்கள் பாடியவை புறநானூற்றில் உள்ள நானூறு பாடல்கள் மட்டும் அல்ல. ஆயிரக்கணக்கான பாடல்களைக் கண்டு, அவற்றுள் மிகப் பலவற்றை வேண்டா என விட்டு நான்கு நூறு பாடல்களையே தொகுத்த புலவர் எடுத்துச் சேர்த்தார். அவ்வாறு தொகுத்த போது அவருடைய கைக்கும் செவிக்கும் எட்டாமல் நாட்டு மூலை முடுக்குகளில் ஒதுங்கியிருந்து பிறகு கேட்பாரற்ற காலத்தில் காவிரி வெள்ளத்திற்கும் வையைப் பெருக்கிற்கும் பொருநை நதிப்

பிற்கும் சென்றுவிட்டவை எத்தனையோ என்று எண்ணி வருந்தவேண்டியுள்ளது. தொகுத்தவர் காலத்தில் பயன் குறைந்தவை என்று அவர் தொகுக்காமல் தள்ளிவிட்டவை ஒருகால் இக்காலத்தினர்க்குப் பயன்படும் பாடல்களாக இருக்கக்கூடுமே, ஆகையால் அவர் அவற்றையும் வாழ வைத்திருந்தால் நலமாக இருக்குமே என்று மற்றொரு வகையாகவும் வருந்தவேண்டியுள்ளது. தொகுத்த அந்த நானூறு பாடல்களிலும் சில காணோமே, வேறு சிலவற்றில் இடையிடையே சில அடிகளைக் காணோமே என்று காப்பாற்றுக் கழிந்த காலத்தை நினைந்து வருந்தவேண்டியும் உள்ளது. முழுமையாக உள்ள முந்நூற்றுச் சில பாடல்களையும் இன்றுள்ள தமிழர் பலரும் கற்றுப் போற்றவில்லையே என்பதை நினைக்கும்போது வருந்த நேர்கின்றது.

இவ்வாறு வருந்துவதே அல்லாமல், நிழற்படம்போல் தமிழ்நாட்டு வரலாற்றை விடாமல் காட்டும் வரலாற்று நூல் இல்லையே என்று வருந்திப் பயன் என்ன? நிழற்படம் என்பது ஒரு கருவி; அது தோன்றாத பழங்காலத்தில் ஓவியக்கலை ஒன்றே இருந்தது. அதனால்தான், இப்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, கோவை முதலிய ஊர்களில் பற்பல பகுதிகளைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல், பழந்தமிழ் நாட்டு மதுரை, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் போன்ற நகரங்களையும் அவற்றின் அரிய உட்பகுதிகளையும் இன்றுள்ள நாம் எல்லோரும் காணுமாறு படங்கள் இல்லை. அத்தகைய படங்கள் இல்லையே என்று இன்று வருந்துவதில் பயன் உண்டா?

காட்சிகளைக் காத்து வைக்க நிழற்படம் உதவுவதுபோல், நிகழ்ச்சிகளைக் குறித்து வைக்க ஒரு கருவி இருந்தால் நலமாகும். நிழற்படம் குறித்த இடத்தில் உள்ளவற்றை விடாமல் பொறித்துக் காட்டுவது போல், குறித்த காலத்தில் நிகழ்ந்தவற்றை விடாமல் எழுதிக் காக்கும் கருவி வேண்டும். செய்தித்தாள் இத்தகையது என்று கூறத்தகும். ஆனால், அது நிழற்படம் போன்ற கருவி அன்று; அந்தச் செய்தித்தாள் எழுதும் அறிஞரின் உள்ளத்து உணர்வையும் கூட்டியே வெளிவருகின்றது. நிகழ்ச்சிகளோடு ஆசிரியர் கருத்தும் கலக்க, சிறிது வேறுபட்ட வடிவமே பெறுகின்றது. 1942-ல் கல்கத்தாத் தெருக்களில் நானூறு மக்கள் நாள்தோறும் பட்டினியால் மடிந்ததாக அங்கிருந்து வந்த மக்கள் கூறினர்; நாற்பது பேர் நாள்தோறும் சாவதாகப் பத்திரிகைகள் எழுதின; நாலைந்து பேர் மெலிந்து சோர்ந்து உயிர் துறப்பதாக அரசாங்கம் தெரிவித்தது. பத்திரிகைகள் பயந்து எழுதுகின்றன என்றனர் பொதுமக்கள். எதிர்கட்சிப் பத்திரிகைகள் வேண்டுமென்றே மிகைபட எழுதுவதாக அரசாங்கத்தார் குறை கூறினர். எது உண்மை? இன்றும் காணலாம்: ஓர் ஊரில் நடந்த கலகத்தைப் பற்றி ஒரு கட்சிப் பத்திரிகை ஒருவகையாக எழுதுகின்றது; அதையே மற்றொரு கட்சித் தாள் வேறு வகையாக எழுதுகின்றது. ஆகையால் நிழற்படம் போன்ற உணர்வற்ற கருவியாகப் பத்திரிகையைக் கருத முடியாது. அத்தகைய கருவி வாய்க்கும் வரையில் வரலாறு குறைபாடு உடையதாகவே விளங்கும். ஆனால் காவியம் அத்தகைய குறை உடையதன்று; அதைக் கற்று உணர முடியாதவர்களின் குறையே குறையாக உள்ளது.

*இராசயன எருவும் இயந்திரக் கலப்பையும் சாகுபடிக்கு உண்மையி லேயே உதவுகின்றனவா? 'இல்லை' என்று கூறுவதோடு நிற்காமல், 'இடரும் தருகின்றன' என்று கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்.*

# சாகுபடி முறைகள்

திரு. மு. அருணசலம், M. A.

இந்திய மக்கள் வாழ்க்கையின் சிறப்பெல்லாம், இவர்கள் உலகத்தி லேயே மிகவும் உயர்ந்த தொழிலாகிய பயிர்த்தொழில் செய்யும் சமூகத்தார் என்பதே. அதிகமான ஜனத்தொகை யும், நிலப்பரப்பும், சாகுபடி வசதியும் உள்ள இந்த நாடு, வேறெந்த நாட்டை யும் போலன்றிப் பயிர்த்தொழிலையே தன் ஜீவாதாரத் தொழிலாகக் கொண் டிருப்பதில் வியப்பில்லை.

பொதுவாக நம் மக்களுடைய வாழ்க்கை முழுமையிலும், சிறப்பாக நம் கிராம வாழ்க்கையாகிய உழவுத் தொழில் வாழ்க்கையில், நான்கு கூறு கள் ஒன்றோடொன்று பின்னி யிருக்கக் காண்கிறோம். அவையாவன: மண், மரஞ்செடி கொடி, மாடுவகை, மனிதன். இந்த நான்கினுள் நாகரிகம் முழுமையும் அடக்கம் என்று கூறுவது பொருந்தும்.

முதல் அம்சம், மண்; பூமா தேவி என்று நாம் கூறுகிறோம். உலகனைத்தை யும் காக்கும் கடவுளாகிய திருமாலுக் குப் பூதேவியும் சிதேவியும் தேவியர் என நம் பெரியோர் சொல்வார்கள். செல்வமாகிய சிதேவி அல்லது இலட் சுமியின் வாழ்க்கை எல்லாம், பூதேவி யாகிய மண்ணால் வருவது. நாட்டின் உண்மையான செல்வம் விளைபொரு ளாகிய செல்வமே தவிர வேறில்லை; சுரங்கச் செல்வங்கூட, பூதேவி தருவதுதான்.

அடுத்தபடி, மரம் செடி கொடி களான பயிர்கள். விளைபொருள் என் ருலே பயிர்தான். உணவுப் பொரு ளான நெல், கோதுமை, பழம், காய்கறி யாயினும் சரி, உடைக்கான பருத்தி யாயினும் சரி, நம் வாழ்க்கை பயிர் களுடன் பின்னிக் கிடக்கிறது.

மூன்றாவது, மாட்டுவகை; காளை, பசு முதலியன. இவை நாம் உண்ணப் பால் தருகின்றன. நமக்கு வண்டி இழுக் கின்றன, ஏர் உழுகின்றன; இவற்றி னும் மேலாக, மண்ணில் பயிர்கள் நன் ருய் விளைந்து பலன் தருவதற்கான உரமாகிய சாணமும் மூத்திரமும் தரு கின்றன. பயிர் செய்யக் கற்கும் முன் னமே மனிதன் ஆடுமாடு மேய்த்தே வாழ்ந்தான். ஆகவே, மனித வாழ்க்கை ஆடுமாடுகளோடு பலவகையிலும் நெருங்கிப் பிணைந்தே கிடக்கின்றது.

நான்காவது அம்சம் மனிதன். இவன் மற்ற மூன்றையும் கருவியாய்க் கொண்டு தன் உழைப்பை இவற்றுட் செலுத்தி, தான் உயிர் வாழ்கிறான்; மற்றவற்றையும் வாழ்விக்கிறான். இவன் உயிர் வாழ்வதால் மற்ற மூன்றுக்கும் அழிவு ஏற்படக்கூடாது. ஒன்றின் அழிவு, நிச்சயம் மற்றொன்றின் அழிவு தான். இந்த நான்கினுள் ஒன்றுக் கொன்று பூரண ஒப்புரவு வேண்டும். ஒன்று வாழ்வதற்காக மற்றொன்றை அழிப்பது இயற்கை நியதிக்குத் துரோ கம் செய்வதாகும். மண்ணிலிருந்து

எத்தனையோ செடி கொடிகள் பயிரா கின்றன. அவற்றையும் புல் பூண்டு முதலியவற்றையும் தின்று ஆடுமாடுகள் உயிர் வாழ்கின்றன. ஆனல், பதிலுக்கு இவை அப்பயிர்களும் புல்லும் உண் பதற்குத் தங்கள் சாணத்தையும், மூத் திரத்தையும், உரமாய்த் தருகின்றன. பயிரிடமிருந்து தனக்கு வேண்டிய காய் கறி, தானியம் முதலியவற்றைப் பெறு கின்ற மனிதன் மீண்டும் மீண்டும் விதை போட்டு, முயற்சி எடுத்து அம் மரஞ்செடி கொடிகளைப் பயிராக்கவும் கடமைப்பட் டிருக்கிருன். அப்படியே மாட்டின் சேவையையும், மாட்டின் பாலையும் உபயோகித்துக்கொள்கிற மனிதன், அந்த மாட்டுக்கு இருக்க நிழல் முதலியன தந்து, தனக்குத் தேவையில்லாதனவாகிய வைக்கோல், பிண்ணுக்கு முதலியவற்றை உணவாக அதற்கு அளிக்கவும் கடமைப்பட் டிருக்கிருன். இவ்விதமாக, மண்ணும் பயிரும் மாடும் மனிதனும் ஒருவர் சேவையைத் தான் பெறுவதும் பதிலுக் குத் தான் சேவை செய்வதுமாக, இயற் கையின் நியதி அமைந்திருக்கிறது. எந்தச் சமயம் நாம் தலையிட்டு இந்த அழகான நியதியைக் குலைக்கிருேமோ, அந்தச் சமயம் எல்லோருக்கும் ஆபத்து விளைகிறது என்பதை நாம் உணர வேண்டும்.

உண்மையான விஞ்ஞானம் அல்லது அறிவியல் என்பது, இந்த இயற்கையின் நியதியை ஒட்டி நம்மைச் செலுத்து வதாகும். ஞானத்தினும் சிறப்பானது விஞ்ஞானம். இயற்கையின் போக்கை மனிதன் வெகு நாள் கூர்ந்து கவ னித்து, அதுபற்றிய சில பொது விதி களை அறிந்து, அவற்றை ஒரு சாஸ்திர மாகத் தொகுத்து வைக்கிருன். இதையே நாம் விஞ்ஞானம் என்றும், அறிவியற் கலை என்றும் சொல்கிருேம். எந்த அளவுக்கு நாம் இயற்கையின் போக்கை விட்டு மாருமல் போகிருேமோ, அந்த அளவுக்கு நாம் விஞ்ஞான அறிவுடைய வர்கள். இயற்கையின் போக்கைவிட்டு நாம் மாறுபட்டால், அப்போதே நாம் அறிவுக்குப் பொருத்தமில்லாத செய் கையைச் செய்பவர்கள். விவசாயம் மட்டுமல்லாமல் எந்தத் தொழிலை நாம் செய்வதாயிருந்தாலும், இதை நினைவில் வைக்க வேண்டும்.

அன்றியும், இக்காலமெல்லாம் 'சயன்ஸ்' யுகம்-விஞ்ஞான யுகம் என்று சொல்வார்கள். எவ்வளவோ விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதன் பயனக, மக்களுக்கு மேலும் மேலும் நல்வாழ்வு ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி இன்றி, எங்குப் பார்த்தாலும் உணவுப் பஞ்சம் என்ற செய்தி காதில் விழுகிறது. நம் நாட் டில் மட்டுமல்ல, உலகில் அனேக நாடு களில் உணவுப் பஞ்சம்; போதுமான அளவு உணவு விளையவும் இல்லை, என் இந்த நிலைமை என்று நாம் ஆராய வேண்டாமா?

மேலும், இக்காலம் நோய்கள் அள வின்றிப் பெருகி இருக்கக் காண்கி ருேம். ஏன் இப்படி? விஞ்ஞான வளர்ச்சியால் மக்களுக்கு ஆரோக்கிய மல்லவா பெருகவேண்டும்? அப்படி யிருக்க, எங்கும் நோய்கள் பெருகு வானேன்? நோய்கள் யாவும் உணவு மூலம் வருவன; ஆகவே, உணவில் ஏதோ கேடு ஏற்பட்டிருக்கிறது என்று நாம் முடிவு செய்வதில் தவறுண்டா? உணவுப் பஞ்சமும் உணவில் ஒருகால் ஏற்பட்டிருக்கக் கூடிய குறைபாடுமே இன்றைய திருப்தியற்ற உணவு நிலைமைக்குக் காரணங்கள் ஆகும்.

இனி, உணவு உற்பத்தியாகிய பயிர்த் தொழிலைப் பார்ப்போம். பயிர்த்தொழி லானது தனி மனிதர் தம்முடைய சொந்த லாபத்திற்காக மட்டும் செய்வ தல்ல. உயிர் வாழ்க்கை என்பது உண வினுல்தான். ஆகவே, உணவு உற்பத் தித் தொழிலாகிய விவசாயத்தில் எல் லோருக்கும் மிக்க அக்கறையுண்டு. யார் என்ன பயிரிடுகிருர்கள், எப்படிப்

பயிரிடுகிறார்கள் என்பது பொதுவாக எல்லா மக்களுடைய கவனத்துக்கும் இடமான விஷயம். மற்றத் தொழில்கள் சம்பந்தமாய், அவரவர் தம் விருப்பம்போல் செய்வதுபோல, விவசாயத்திலும் செய்துகொள்ள முடியாது; தேச நலத்துக்காகவே பயிர்த்தொழில் செய்தாகவேண்டும். இன்று இந்த நிலைமை இல்லை; காரணம், பொதுமக்கள் தங்கள் கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து செய்யாமையால், தங்கள் உரிமையை இழந்து வாழ்வதோடு, உரிமையை அறியாமலுமிருக்கிறார்கள். இந்த நிலைமையே என்றைக்குமிருப்பதாக நாம் எண்ணமுடியாது. இது மாறவேண்டும், நிச்சயம் மாறும். அப்போது ஒருவரைச் சமூகமோ அல்லது அரசாங்கமோ, "நீ இப்பயிர் சாகுபடி செய்யலாகாது, இன்னதுதான் சாகுபடி செய்ய வேண்டும்; இப்படித்தான் சாகுபடி செய்யவேண்டும்." என்று திட்டமான கட்டளை பிறப்பிக்கும்.

இந்தப் பொறுப்பை ஒட்டிய ஓர் உதாரணத்தை இங்குக் குறிப்பிடலாம். பணக்காரர் ஆவதற்காக எல்லோரும் குறுக்கு வழி தேடுவது போல, அதிக மாசூல் உற்பத்தி செய்வதற்கு எல்லோரும் குறுக்கு வழி தேடுகிறார்கள். உண்மையில் அப்படி ஒரு குறுக்குவழி இயற்கையில் தெரியவில்லை ஆயினும், குறுக்கு வழியில் தேர்ந்தவர்களான மேலை நாட்டார், இதற்கு ஒரு குறுக்கு வழி கண்டிருக்கிறார்கள். அதுவே, நிலத்திற்குச் செயற்கையுரமிடுவதும், நிலத்தை இயந்திரக் கலப்பையாகிய டிராக்டர்களைக்கொண்டு உழுவதும். இவற்றைக் குறித்து இங்கு அதிகம் பேச இடமில்லை. எனினும், ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்வது பொருத்தமாகும்.

கீழ் மண்ணிலும் மேல் மண்ணிலும் ஹியூமஸ் என்று ஆங்கிலத்தில் சொல்கிற மட்கல் ஆகிய இந்திரியச் சத்து அமைந்திருக்கிறது. நாட்டுக் கலப்பையால் உழும் வரையில், இந்த மட்கல் அடியோடு போவதில்லை. மேல் மண்ணைக் கிளறி விடுவதால், கீழ்மண்ணிலடங்கிய மட்கல் பாதுகாக்கப்பட்டு இருந்து வருகிறது. பெரிய இருப்புக் கலப்பையாலும், டிராக்டர்களாலும் இவற்றை உழும்போது, கீழ் மண்ணின் மட்கலும் வெளிப்பட்டுத் தானே நிலம் சத்திழந்து போகிறது. தவிர இன்று எங்குமுள்ள விவசாயிகள் தொந்தரவு காரணமாக, டிராக்டர் உழவு நல்லதென்றும், நாகரிகம் அல்லது முன்னேற்ற மென்றும் வசதியுடையோர் பலர் கருதுகிறார்கள். இது தப்பான எண்ணம். இப்படி ஹியூமஸ் எடுபட்ட காரணத்தால், அமெரிக்காவில் பல இடங்களில் இன்று நிலம் பாலைவனமாகி வருகிறதென்று அங்குள்ள விவசாய ஆராய்ச்சியாளர் பலர் எழுதியும் பேசியும் வருகிறார்கள். அவர்கள் விழித்துக்கொள்ளும் இந்தத் தருணத்தில், நாம் ஏமாந்தவர்களாக ஆகுதல் அறிவுடைமை யாகாது.

ஏராளமான மனித சக்தியும், ஆடு மாடுகளும் உள்ள இந்த நாட்டில், இவற்றை நீக்கி, டிராக்டர் உழவை மேற்கொள்வது இயற்கையின் நியதிக்கு முரணாகும். மனித சக்தி மிகவும் குறைவாயும் நிலவளமும் நிலப்பரப்பும் மிகவும் அதிகமாயும் இருந்த அமெரிக்க நாட்டில், ஒரு வேளை டிராக்டர் பொருத்தமாக இருக்கலாம். அங்குங்கூட, இன்று டிராக்டருக்கு எதிர்ப் பிரசாரம் தோன்றி இருக்கிறதென்பதை நாம் மறக்கலாகாது. நாட்டுக் கலப்பை உழவு 6 அங்குலப்; நெற்பயிர் முதலியன உள்ளே இதற்குமேல் போவதில்லை. இருப்புக் கலப்பை 7–8 அங்குலம் போகும். டிராக்டரோ, 12–14 அங்குல ஆழம் உழும். இது, காடழித்து நிலமாக்க உதவுமேயன்றி நாடாயுள்ள நிலம் உழும் தகுதி சிறிதும் இல்லாதது.

தவிர, இந்த முறையால் மண்ணுக்கும் பயிருக்கும் மனிதனுக்கும் நாம்

துரோகம் செய்தவர்களாவோம். ஏனெனில், மேற் குறிப்பிட்ட நான்கு அம்சங்கள் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்வதில் நாம் தலையிட்டு, பரஸ்பர சேவை ஏற்படாதவாறு தடுத்துவிடுகிறோம். இந்தத் தடையை இயற்கை பொறுத்திராது. அதனால்தான் முன்னமே விவரித்த பஞ்சம், நோய் ஆகிய கோளாறுகள் விளைகின்றன.

இனி, இரண்டாவதான இரசாயன எருச் சம்பந்தமான எச்சரிக்கையும் நமக்கு வேண்டும். அதிகச் சதை போட்டிருப்பவர் அதிக ஆரோக்கியமோ வலிமையோ உடையவராகார். அதே போல, அதிக விளைவு கொடுப்பது மட்டும் அதிக ஆரோக்கியம் என்று அர்த்தமாகாது. ஆரோக்கியமான விளைவு என்பது, அவ்வுணவுப் பொருள் விளைந்த மண்ணின் ஆரோக்கியத்தைப் பொறுத்தது. இரசாயன எருவிட்டு வளர்த்த பயிர்கள் மிகவும் அதிகமான மாசூல் தருகின்றன என்பது உண்மை; செயற்கை யுரமிட்டுக் கிடைத்த கத்தரிக் காயும், தக்காளிப் பழமும் அளவில் மிகப் பெரியனவாயும் அழகாகவும் இருக்கின்றன. ஆனால், இவற்றில் உணவின் முக்கியமான பல உயிர்ச் சத்துக்கள் குறைந்திருக்கின்றன. இவற்றை யுண்ணும் மக்களின் ஆரோக்கியம் குன்றுகிறது. இப்படிப் பயிரான வைக்கோலையோ புல்லையோ உண்டு வளர்ந்த மாடுகளும் உடல் நலம் குன்றியிருக்கின்றன. அவற்றின் பாலிலும், மனிதனுக்கு வேண்டிய உணவுச் சத்துக்கள் குறைந்துபோகின்றன.

இதுபற்றி நாம் உண்மை அறிவதற்கு இங்கிலாந்தில் வில்ட்ஷயர் என்ற ஜில்லாவில் இருந்த விவசாயியான சைக்ஸ் என்பவரைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்வது நல்லது. பல வருஷங்களுக்கு முன்னே, அவருடைய பண்ணையில் தயாரான பசுக்களும், பன்றிகளும், பந்தயக் குதிரைகளும், இங்கிலாந்து முழுமையும் பிரசித்தி பெற்றிருந்தன. பல வருஷங்களாக முயன்று அவர் இத்தகைய பெருந் தகுதியை அடைந்திருந்தார். அவருடைய வழியை நாட்டினர் அனைவருக்கும் காட்டி, எங்கும் முன்னேற்றம் வருவிக்கும் நோக்கத்தோடு, அவருடைய பசுக்கள் முதலியவற்றை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். அக்காலத்தில் புதிதா யிருந்த சோதனை, 'டியூபர்குலின் டெஸ்ட்', என்ற சோதனை; அதாவது, குறித்த பிராணியின் உடலில் டியூபர்குலோஸிஸ் என்று நாம் இப்போது சொல்லுகிற க்ஷயரோகத்துக்கு ஏதுவான கிருமிகள் இருக்கின்றனவா என்று பார்க்கிற சோதனை. பார்த்தபோது, அவருடைய பசுக்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு இந்த நோய்க் கிருமிகள் இருந்தன; அப்பசுக்களோ, மிகவும் அதிகமான பால் கறந்து வந்தவை. இப்படி நோயுற்றிருந்தமைக்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தபோது, அப்பசுக்கள் உண்ட உணவே காரணம் என்று தெரிந்தது. அவ்வுணவில் நோய் எதுவும் இல்லை. ஆனால், அப்புல்லும் வைக்கோலும் தானியங்களும், ஏராளமாய்க் கிடைக்கவேண்டு மென்ற ஆசையால், முழுமையும் இரசாயன எருவிட்டு உற்பத்தி செய்யப்பெற்றவை; தொழுவுரமே இல்லாமல், மிகவும் சக்தி வாய்ந்த உப்புக்கள் இட்டே வளர்க்கப் பெற்றவை; ஆதலால், அத் தாவரங்கள், நோயைத் தடுக்கும் சக்தியை அடியோடு இழந்துபோயின. போகவே, அவற்றைத் தீவனமாய் உண்ட பசுக்களிடம் கொடுநோய்களும், பெருவாரியாகக் காணப்பட்டன.

இச்சோதனையின் பிறகு, சைக்ஸ், தம்முடைய மாடுகளையும் பண்ணையையும் முழுமையும் விற்றுவிட்டு, 1936-இல் சாண்டிரி என்ற வேறிடம் சென்று, அங்கு வறண்ட பாலை என்று எல்லோரும் கருதிய புது நிலத்தை வாங்கி, பத்து வருஷ காலத்தில் அபரி

மிதமான விளைவையும், ராட்சஸ வடிவம் என்னத்தக்க பெரு வடிவம் படைத்த வலிவான ஆடுமாடுகளையும் வளர்த்தாராம். இப்புது இடத்தில் இரசாயன உரமே உபயோகிப்பது இல்லை என்பது அவர் பூண்ட விரதம். மண்ணிலிருந்த நோயின் வேர் முழுவதையும் உழவினுலேயே அவர் போக்கிவிட்டார். எல்லாவற்றிலும் மேலாகத் தாவரச் சத்தும் தொழுவுரமும் கலந்ததாகிய இந்திரியச் சத்தையே எருவாய்க் கொண்டு, நிலத்தின் மேலும் கீழ் மண்ணிலும் உள்ள மட்கல் வளத்தைப் பெருக்கித் தம் வேலையில் வெற்றி பெற்ருர். அவருடைய அனுபவத்திலிருந்து அவர் கூறும் கருத்துக்களில் இரண்டொன்றை இங்கு நினைவில் இருத்துவது பயனுடையது.

மண்ணில் இருந்து வேலை செய்து பயிர்களின் வேருக்கு உணவு கிடைக்கும்படிச் செய்கிற பாக்டீரியா என்னும் நுண்ணுயிர்கள் பல்லாயிரம் உள்ளன. இவை பெருகினுல்தான் விளைவுக்கு நல்லது. இந்திரியச் சத்து இவற்றுக்கு உணவு; இரசாயனச் சத்தோ இவற்றுக்கு விஷம்.

இப்படி விஷமிட்டு, அதாவது, இரசாயன எருவிட்டு வளர்ந்த பயிர்கள் தரும் பலனும், அவற்றை உண்டு வளர்ந்த மாட்டின் பாலும், நம் உடம்பின் சக்தியை, முக்கியமாக, நோய்க் கிருமிகளை எதிர்த்து நிற்கும் சக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைக்கின்றன.

மண்ணிலிடும் தழை, குப்பைகூளம் முதலியவற்றைக் கொளுத்தக்கூடாது. கொளுத்துவது பயிர்களுக்குக் கிடைக்கும் நல்ல உணவைப் பாழாக்குவதாகும். கொளுத்தாமல், கம்போஸ்டு என்று வழங்குகிற கலவையுரமாக்க வேண்டுமென்றும் அவர் கூறுகிருர்.

ஸைக்ஸ் பெற்ற அனுபவத்தை நம்முடைய அன்ருட வாழ்க்கையில் அதிலும் முக்கியமாக நகர வாழ்க்கையில் பொருத்திப் பார்த்தால், அனேக சிக்கல்கள் நமக்கு மிக்க எளிதில் விளக்கமாகும்.

நகர வாழ்க்கையுடைய மக்கள் வீட்டுக் குழந்தைகளுக்கெல்லாம் பால் கட்டி. டாக்டரிடம் சென்ருல் ஜம்மி மருந்தைக் கொடுக்கச் சொல்கிருர். எத்தனைக் குழந்தைகளுக்குக் கொடுத்து, எத்தனைக் குழந்தைகள் பிழைத்தன, எத்தனை போயின என்று அவரிடம் கணக்குக் கிடையாது. போகட்டும். கட்டி ஏன் வந்தது என்ருல், பெருவாரியாக உற்பத்தி செய்யும் காய்கறிகளை உண்ட பெற்ருேருக்கு இக்குழந்தைகள் பிறந்தன, உப்புத் தண்ணீரும் கடலைப்பொட்டும் உண்ட மாட்டின் பாலையுண்டு இவை வளர்ந்தன என்ற காரணங்களாகும். பெற்ருேர் உடலிலும், மாட்டின் பாலிலும், நோயை எதிர்க்கும் சக்தியில்லை. நகரத்திற்காக அதிக உற்பத்தி வேண்டி எங்கும் இரசாயன எருவிட்ட பயிர்களே சாகுபடியாகின்றன. இவற்ருல், உண்போரிடம் மேற்குறிப்பிட்ட விதம் வலிமை குறைகிறது.

அப்படியே நகரத்தில் நாளுக்கு நாள் டியூபர்குலோஸிஸும் பெருகுகிறது. எங்குப் பார்த்தாலும் இந்நோய் சிகிச்சைக்கான ஆஸ்பத்திரிகள் கட்டுகிருர்கள். ஸைக்ஸினுடைய அனுபவத்தைக் கொண்டு பார்த்தால், இதன் காரணங்களில், இந்திரியச் சத்தில்லாமல், வெறும் இரசாயன எருவில் வளர்ந்த உணவுப் பொருள்களும் முக்கியமானவை என்பது விளங்கும்.

நியூஸிலந்து தேசத்து விவசாய இலாகாதார் ஆராய்ந்து கண்ட சில முடிபுகளும் இக்கருத்தையே ஆதரிக்கின்றன. உணவுச் சத்துக்கும் மாசூல் பெருக்கத்துக்கும் என்ன சம்பந்தம் என்பது அவர்கள் ஆராய்ச்சி. உதாரணமாக, சாதாரணப் பசலைக் கீரையை எடுத்துக்கொண்டு பார்த்தால்,

எங்கும் 100 கிராம் எடையுள்ள கீரையில் 40 மில்லிகிராம் முதல் 100 வரையில் C வைடமின் இருக்கும். (இவ் வைட்டமின் மேலே நாடுகளில் மிகுதியாயுள்ள சொறி கரப்பான் என்ற நோயைத் தடுப்பது) ஆனால், அந்த நாட்டில், இரசாயன எரு உபயோகம் மிகவும் அதிகமாதலால், அங்குப் பயிரான பசலைக் கீரையில் இது 21 முதல் 30 வரை என்ற அளவுக்குக் குறைந்து விட்டதாம்.

அன்றியும் நியூஸிலந்தில் பெரும்பான்மையான மக்களுக்கு விடாத ஜல தோஷம், இன்புளுயென்ஸா, உள்நாக்கு வளர்ச்சி சொத்தைப் பல் முதலான நோய்கள் எப்போதும் இருந்தனவாம். இது பற்றி டாக்டர் சாப்மன் என்ற உள நோய் — உடல் நோய் நிபுணர் பரிசோதனைகள் நடத்தினர்.

மௌண்ட் ஆல்பர்ட் என்ற இடத்திலுள்ள பாடசாலையைச் சேர்ந்த 60 பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் சேர்த்து அவர்களுக்குப் பட்சிசார்த்தமான உணவு கொடுத்தார். முன்னெல்லாம் அவர்கள் உண்ட உணவு வழக்கம்போல ரசாயன எருவிட்டுப் பயிராக்கின தானியம் காய் கறி முதலியன. இதைமாற்றி, வயல்களுக்குத் தொழுவுரம் போட்டு அதில் விளைந்த தானியங்களையும் காய் கறிகளையும் உண்ணச் செய்தார். இந்த உணவு மாற்றத்தினால் அவர்களுக்கு உடல் வளர்ச்சி, நோய் நீக்கம், பல்லுறுதி முதலிய விளைந்தனவாம். சென்ற யுத்தத்தின்போது அந் நாட்டில் படைக்கு ஆள் திரட்டிய சமயம் வந்தோர்களைப் பரிசோதித்ததில் நூற்றுக்கு நாற்பது பேருக்கு மேல் சொத்தைப் பல் என்று தெரிந்ததாம்.

இந்த நிலைமையெல்லாம் நமக்கு பெரிய எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். பசி மந்தமாக இருப்போர்களுக்கு இஞ்சித் துவையல் நல்லதென்று நாட்டு வைத்தியர் சொல்வார். ஆனால், வயிற்றுப் பசிக்காக யாரும் இஞ்சியையே தின்ன மாட்டார்கள். அதுபோல விளைவில்லாத சில பயிர்களுக்குச் சில சந்தர்ப்பங்களில் இரசாயன உரம் பலன் கொடுக்கும். உதாரணமாக, கேழ்வரகு நாற்று, தக்காளி நாற்று, கத்தரி, மிளகாய் நாற்றுக்களுக்கு அம்மோனிய உப்பு இடுவது ஓர் அளவு நல்லதுதான். மற்றப்படி, இவ்விதம் இரசாயன உரம் இட்டே பயிர் முழுவதும் வளர்த்து தக்காளிப் பழம் பறித்துத் தின்னலாமென்று எண்ணுவது வயிற்றுப் பசியைத் தீர்க்க இஞ்சியை தின்ன எண்ணுவது போல்தான். இரசாயன எருவெல்லாம் பயிருக்கு ஒரு மருந்துபோல; உணவு அல்ல.

செயற்கையுரம் அதிகமாக இட்டுக் காய் கறிப் பயிர்களைப் பெருக்கும் போது விளைவு அதிகமாகிறது; காய் கறிகளின் பருமனும் மிகவும் அதிகமாகிறது என்பது நாம் நேரில் அறிவோம். ஆனால், இவற்றில் சுவை குறைந்து மணமும் குறைகிறது. உணவுச் சத்துக் குறைந்து நம் ஆரோக்கியத்துக்கும் பொருந்தாமற் போவதை மேற்காட்டிய உதாரணங்களாலும் உணரலாம்.

சாண எருவின் சிறப்பை மகா பாரதத்தில் சொல்லியுள்ள சுவை மிகுந்த ஒரு கதையினாலும் அறியலாம். கோசலம், கோமயம் என்ற இரண்டின் பெருமையையும் பீஷ்மர் ஒரு கதை மூலம் யுதிஷ்டிரருக்குச் சொல்கிறார். ஒரு சமயம், இலட்சுமி ஒரு பசு மந்தைக்கு வந்தாள். அவளுடைய அழகைக் கண்டு அதிசயித்த பசுக்கள் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டன. பசுக்களின் புனிதத் தன்மையை உணர்ந்த இலட்சுமியானவள், "உங்கள் உடம்பில் நான் வசிக்கவேண்டும்" என்றாள். ஆனால், பசுக்களோ இலட்சுமி நிலைத்து வாசம் செய்யமாட்டாளே என்று எண்ணிச் சற்றே தயங்கின. பிறகு, தங்களுக்குள் யோசனை செய்தன. 'தானாக வருகிற ஸ்ரீதேவியை வேண்டாம் என்று சொல்லக்கூடாது'

என்று எண்ணி, "அப்படியானல் நீ எங்கள் சாணத்தினும் மூத்திரத்திலும் வாசம் செய்யலாம்" என்று இலட்சுமிக்குக் கூறின. அப்படியே இலட்சுமியும் ஒப்புக்கொண்டு, அன்று முதல் வசித்து வருகிருள் என்பது பாரதக் கதை. இக்கதை மிகவும் வேடிக்கையாய் இருக்கலாம். ஆனலும், மிகவும் பெரியதோர் உண்மையை எடுத்துக்காட்டுகிறது.

நம் முதலமைச்சர் கனம் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் இந்தக் கதையைக் குறிப்பிட்டுவிட்டு, மிருக வைத்தியக் கல்லூரி விழாவில் தலைமை தாங்கிப் பேசியபோது பின்வருமாறு கூறுகிருர்.

"தொழுவுரமாகிய சாணமும் மூத்திரமும் பொன்னைப் பார்க்கிலும் அதிக மதிப்புடையவை என்பது மிகையல்ல. இந்திய நாடு முழுமையிலும் கிடைக்கிற சாண எருவின் மதிப்பு 270 கோடி ரூபாய். சென்னை மாகாணத்தில் மட்டும் இது 60 கோடி ரூபாய். இவ்வளவு பெருஞ் செல்வத்தை அடுப்பெரிக்க உபயோகிக்காதபடி நிலத்திற்கு உரமாக இடவேண்டும். இரசாயன எரு என்பதெல்லாம் நிலத்திற்கு இடும் மருந்துதான். இவை, நிலத்தின் ஈரத்தைத் தாம் எடுத்துவிடுகின்றன. அந்த ஈரத்தை மீண்டும் அளிப்பதில்லை. தாவர வளர்ச்சிக்கு வேண்டிய ஈரங் காக்கச் செய்வதில் மாட்டுச் சாணமும் மூத்திரமும் போலத் திறமை வாய்ந்தது வேறு எதுவும் இல்லை. கோதுமையைப் பற்றிய ஒரு பரிசோதனையில், இரசாயன உரமிட்டுக் கிடைத்த மாகூலில் உணவுச் சத்து 17 சத வீதம் அதிகமாயிருந்ததென்று தெரிகிறது. அப்படியே, வெறும் இராசயன எரு மட்டும் போட்ட மாகூலில், வளர்ந்த புருக்கள் மூன்றே மாதத்தில் இறந்து போயினவாம். சாண உரத்தின் அருமை இதனல் நன்கு விளங்கும்."

செயற்கையுரம் ஏற்றதல்லவென்றும் இந்திரிய சத்தாகிய தொழுவுரமே ஏற்றதென்றும் இதுகாறும் கூறியவற்ருல் நம் கடமை தெளிவாகிறது. நம் நாட்டின் வளமெல்லாம் பயிர்த் தொழிலின் வளம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்ச் சாகுபடியே செய்து வந்துள்ள நம் நிலங்கள் இன்று வளமிழந்து போயின. எனவே, இவற்றுக்கு வளமூட்டும் வழி, அளவில்லாமல் தொழுவுரமும் தழையுரமும் சேர்ப்பதுதான்.

இங்கு மாடுகளின் பராமரிப்புப் பற்றிய நம் கடமையையும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆடு மாடுகளின் தொகை நம் நாட்டில் அதிகம் என்பது உண்மை. ஆனல் அவை உயர்ந்த தரமாயும், நமக்குரிய சாணம், பால், உழவு முதலான எல்லா உதவிக்கும் பொருந்துவனவாயும் இருத்தல் வேண்டும். அவற்ருல் நாமும் நம் நிலமும் பலனடைய வேண்டும். சாணத்தை வறட்டி தட்டி அடுப்பெரிப்பது, நம் பிரதம மந்திரியவர்கள் கூறியதுபோல், பத்து ரூபாய் நோட்டை வைத்துச் சுருட்டுப் பற்றவைப்பதுபோலத்தான்.

இந்தக் கருத்துக்களை விவசாய மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; முக்கியமாக மேலை நாட்டு இயந்திர முறைகளில் ஆர்வங் கொண்டவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# சங்ககாலச் சோழர்கள்

திரு. தி. வை. சொக்கப்பா

★

**சோ**ழர்கள் தமிழ்ப் பழங்குடி மன்னர்கள். கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த காத்யாயனர் என்ற வடமொழி இலக்கண ஆசிரியர் இவர்களைச் 'சோடர்கள்' எனக் குறிப்பிடுகிறார். கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதியை அரசாண்ட பௌத்தப் பேரரசர் அசோகர் தம்முடைய இரண்டாவது, பதின்மூன்றாவது பாறைக் கல்வெட்டுக்களில் சோழர்களை உள்ளிட்ட தமிழ்நாட்டு மூவேந்தர்களைத் தம் அரசின் எல்லைப் புறத்தில் செங்கோலோச்சிய நட்பரசர்களாய்க் குறிப்பிடுகிறார். தமிழகத்தைச் சோழர்கள் நெடுங்காலமாக ஆட்சிபுரிந்து வருவதற்குத் தமிழ் இலக்கியம் சான்றாக உளது. புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, கலிங்கத்துப் பரணி, மூவருலா முதலிய தமிழ் நூல்களும், மகாவம்சம், இராசாவழி போன்ற இலங்கை வரலாற்று நூல்களும் சங்ககாலச் சோழர் வரலாற்றை அறியப் பேருதவி புரிகின்றன. அன்பில், திருவாலங்காடு, கன்னியாகுமரி முதலிய இடங்களில் அகப்பட்டுள்ள கல்வெட்டுக்களிலும் செப்புப் பட்டயங்களிலும் இவர்களின் வமிசாவளியும் வரலாறும் சுருங்கக் கூறப்பட்டுள்ளன. தாலமி, பிளினி, பெரிப்ளூஸ் ஆசிரியர் முதலியோருடைய 'செலவு (பிரயாண) நூல்களும்' சோழர் வரலாற்றுக்குப் பயன்படுகின்றன. மேலேகூறிய ஆதாரங்களைக் கொண்டு கடைச் சங்க காலச் சோழமன்னர்கள் ஏறக்குறைய கி. மு. 500 முதல் கி. பி. 300 வரையில் தமிழகத்தை ஆண்டார்கள் எனக் கொள்ளலாம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆண்ட சோழமன்னர்களில் ஒருசிலரின் பெயர்களும் அவர்களை நினைவூட்டும் ஒருசில சிறப்பு நிகழ்ச்சிகளுமே புலவர்களின் பாட்டிலே தவழ்ந்து இப்போது நமக்குக் கிடைத்துள்ளன. அந்நிகழ்ச்சிகளை வரலாற்று முறைப்படி வகைப்படுத்தித் தொகுத்துக் கூற இயலாவிடினும் அவர்களின் பெருமை தமிழரின் தொன்மைக்கும் முதன்மைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குவதால் தமிழக வரலாற்றில் இடம் பெறுதற்குரியன. சென்னி, கிள்ளி என்றும், வளப்பமுள்ள நாட்டை ஆண்ட காரணத்தால் வளவன் என்றும், சிபியின் வழிவந்தோராகையால் செம்பியன் என்றும் சோழர்கள் அழைக்கப்பெற்றனர்[1] கிழக்கில் கடலும் மேற்கில் கோட்டைக் கரையும் (குளித்தலைத் தாலூக்காவி லிருப்பதாகக் கூறப்படுகிறது) தெற்கில் வெள்ளாறும் வடக்கில் வடபெண்ணையும் எல்லைகளாக உடைய சோழமண்டலத்தை ஆட்சிபுரிந்தனர்.

1 சேந்தனார் திவாகரம்.

சில மன்னர்கள் காலங்களில் சோழ அரசு விரிந்து தமிழகம் முழுவதும், அதற்கப்பாலும் பரந்திருந்தது. சோழர்கள் புலிக்கொடியைத் தங்கள் சின்னமாய்க் கொண்டிருந்தனர்.

நீதிச்சோழன்: இவன் இயற்பெயர் தெரியவில்லை. இவனைச் சிலப்பதிகாரத்தில் 'அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்' என்றும், மணிமேகலையில் 'மகனை முறைசெய்த மன்னவன்' என்றும், திருத்தொண்டர் புராணத்தில் 'அறங்காப்பான்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். சிலப்பதிகார காலத்திலும் இவன் பெயர் தெரியவில்லையெனில் இம்மன்னன் பன்னெடுங்காலத்திற்கு முன்னர் ஆண்டிருக்கவேண்டும் என்று பெறப்படுகிறதன்றோ? இவன் திருவாரூரின்கண் இருந்து சோழமண்டலத்தை ஆண்டான் எனச் சேக்கிழார் செப்புகிறார். மக்கள் தங்கள் குறைகளைத் தன்னிடம் நேரிலே முறையிட ஏற்பாடு செய்து, அக்குறைகளைக் கேட்டு முறைசெய்தலை இச்சோழன் தன் தலையாய கடனாய்க் கொண்டிருந்தான். அல்லலுற்றோர் அவைக்களத்தே கட்டியிருந்த ஆராய்ச்சிமணியை அசைத்து அரசனைக் கண்டு குறையிரப்பர்[2]. அரசிளங்குமரன் சென்ற தேர்க்காலில் அகப்பட்டுத் தன் கன்று இறந்துபடவே தாய்ப் பசு அரசன் கோயில்முற்றத்தில் தூங்கிய மணியினைக் கொம்பாற் புடைத்து அரசனுக்குத் தன் குறையைத் தெரிவிக்கவே சோழ மன்னன் ஐயறிவுடைய உயிரென அப்பசுவைஅலட்சியஞ் செய்யாது கன்றைக் கொல்லக் காரணமா யிருந்த தன் ஒரே மகனைக் கன்று இறந்த இடத்திலேயே கிடத்தித் தானே தேரூர்ந்து 'ஆழியின் மடித்தான்'[3] இவ்வருஞ்செயல் நோக்கி இவனை நீதிச் சோழன் என அழைத்தனர் போலும்! பிற்காலத்தில் இவனை 'மனுநீதிச்சோழன்' எனச் சயங்கொண்டார், சேக்கிழார் போன்ற புலவர்களே அழைத்தனர். சங்க இலக்கியத்தில் 'மனு' 'மனுநீதி' என்னும் பெயர்கள் யாண்டும் காணப்படவில்லை. இவனுக்கு அப்பெயர் பொருந்தாது. இவன் சிறந்த சிவ பக்தன்.

சிபி, முசுகுந்தன், காந்தன், தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் — இந் நால்வரையும் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சோழர் எனப்புலவர் இராசமாணிக்கம் தொகுத்துள்ளார்.[4]

சிபி: சங்கப் புலவர்களால் சோழ மரபின் முன்னோனைக் குறிக்கப்பட்டுள்ளான். சோழகுல முன்னோரின் மாட்சிக்கு இவன் ஓர் எடுத்துக்காட்டு. 'சிறு புறவுக்காகக் களிகூர்ந்து' தன் உடலை மாய்த்துக்கொண்ட மன்னன்.[5] பிற்காலத்தில் காவிரிநாட்டைச் 'சிபி தேசம்' என அழைத்தனர் எனின் இவன் சிறப்பு எத்தகையதாயிருக்க வேண்டும்?

முசுகுந்தன்: கருவூரில் இருந்து அரசாண்டான். சிவபெருமானுக்குப் பல இடங்களில் கோயில் எடுத்தான். இவன் காலத்தில் காவிரிப்பூம் பட்டினம் வழியாக மேலைநாடுகளுடன் சிறந்த வாணிபம் நடந்தது.

காந்தன்: இவன் காவிரி ஆற்றைத் தன் நாட்டிற்குக் கொணர்ந்து சோணாட்டைப் பொன்னி நாடாக்கினான் என மணிமேகலையால் அறிகிறோம்.

---

2 மொகலாய மன்னன ஜஹாங்கீர் ஒரு சங்கிலியை அரண்மனை வாயிற்புறத்தே கட்டி அதை அசைத்ததும் அத்துடன் பிணைக்கப்பட்ட மணியின் ஒலி கேட்க முறைசெய்தனன்.

3 இந்நிகழ்ச்சி இலங்கை வரலாற்று நூலாகிய மகா வம்சத்திலும் விவரிக்கப்பட்டுள்ளது.

4 சோழர் வரலாறு: மா. இராசமாணிக்கம் M. O. L. பக்-25.

5 கடம்ப மன்னன் முதலாம் சயகேசியைப் பற்றியும் இவ்வித நிகழ்ச்சி நிலவுகிறது.

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்: வானத்தில் அசைந்து கொண்டிருந்த எதிரிகளின் மதிலை அழித்துத் தோளில் வீரவளை அணிந்த மன்னன் என இத்தொடர் பொருள் படும். இவன் பகைவரின் மூன்று அரண்களை அழித்த வரலாறு சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். சிபி அறத்திற்கு எடுத்துக்காட்டு; இவன் மறத்திற்கு எடுத்துக்காட்டு. புகார் நகரில் முதன்முதல் இந்திரனுக்கு (மழைத் தெய்வத்திற்கு) விழாவெடுத்தான் இச் சோழன். நிற்க.

இதுகாறும் தெளிவாக்கப்பட்டுள்ள இந்திய வரலாற்றில், நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகவும் வரலாறு என்று கொள்ளும் வகையிலும் அறியக் கிடக்கின்ற முதல் பேரரசு மௌரியப் பேரரசே. சாணக்கியன் தன் பொருள் நூலில் (அர்த்த சாஸ்திரத்தில்) தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மகதத்திற்கு வந்த பண்டங்களைக் குறிப்பிட்டு அப்போதிருந்த வடநாடு - தென்னாடு தொடர்பை நிலைநாட்டுகிறான்.[6] பழந்தமிழர் நந்த பரம்பரையினர் இருந்தாண்ட பாடலியையும் மோரியர் தலைநகரையும் நன்கு அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் காணலாம். மோரிய அரசைத் தோற்றுவித்த சந்திரகுப்தன் விந்திய மலைக்கப்பாலுள்ள பரப்போடு தன் ஆட்சியை அமைத்துக் கொண்டான் என்பது வரலாற்று ஆசிரியர்களுக்கு ஒப்ப முடிந்த முடிவு. ஏறத்தாழ கி. மு. 298ல் பிந்துசாரன் மோரிய அரசு - கட்டில் ஏறினான். அடுத்த கால் நூற்றாண்டில் மோரியர் தக்கணத்தைத் தம் அடிப்படுத்தினர். வடுகர் என்று சொல்லப்பட்ட ஆந்திரர் மோரியரால் முறியடிக்கப்பட்டு அவர்கள் நாடும் மோரியப் பேரரசின் பகுதியாயிற்று. கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த கோசர் என்ற மக்கள் துளுவ நாட்டிற்குப் போந்து அந்நாட்டு வேந்தன் நன்னனைக் காட்டிற்கு விரட்டி, 'பாழி' என்னுமிடத்தில் படையுடன் தங்கினர். சிறிது சிறிதாக அவர்கள் சேர நாட்டிலும் புகுந்தனர். முதிர மலைத் தலைவனை[7]த் தாக்கினர்; எழினி ஆதனை[8] எதிர்த்தனர். சோணாட்டைப் படையெடுத்த கோசரை அழுந்தூர்வேளான திதியன் கடும்போருக்குப்பின் பின்னடையச் செய்தான். கோசரும் மோரியரும் இத்தோல்விக்குப் பிறகு வாளாவிருக்கவில்லை. புதிய (வம்ப) மோரியப் படையுடன் கோசர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஆத்தூர்க் கணவாய்க்கு அருகிலிருந்த மோகூரைத் தாக்கினர். இப்பகைவரைச் சோழன் இளஞ்சேட் சென்னி வென்று துரத்தினன்.[9]

செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி: கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் முற்பாதியில் ஆண்ட சோழன். இவன் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சி மோரியர் தமிழகப் படையெடுப்பே.

'கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு'

அகம். 281

வடவடுகரான கோசரை மோகூர்க் களத்தில் இளஞ்சேட் சென்னி முறியடித்தான்.[10] அத்துடன் அமையாது அவர்களைத் துரத்திச் சென்று அவர்கள் தங்கியிருந்த பாழியை 'நாறி' 'வம்ப வடுகர் பைந்தலை சவட்டி'னன்

6 தமிழக இரத்தினங்கள், மதுரை ஆடைகள், சேரநாட்டு வைடூரியங்கள் இன்ன பிற—P. T. S. Aiyengar's History of the Tamils.

7 பிட்டங் கொற்றன்—சேரன் தானைத்தலைவன்.

8 'வாட்டாறு' 'செல்லூர்' முதலிய பகுதிகளை ஆண்டவன்.

9 'மோகூர் பணியாமையின் பகைதலை வந்த மாகெழுதானை வம்ப மோரியர்'—அகம்-251.

10 'வடவடுகர் வாளோட்டிய'-புறம்-378.

விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கட னாகலிற் குறைவினை முடிமார்
செம்புறம் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி

அகம். 375

பௌத்த மன்னன் பிந்துசாரன் காலத்து மோரியர் தமிழ் நாட்டின் மேல் படையெடுத்துச் சேர சோழ மன்னர்களை வெல்ல மாட்டாதவர்களாய்த் திரும்பி விட்டனர். சோழ வேந்தரின் ஆட்சி வடுக நாடுவரையில் பரவி இருந்தமையும், அக்காலத்துச் சோழர்கள் பேராற்றலுடையவர்களாய் இருந்தமையும் வட ஆரியரும் வடுகரும் தமிழகத்தில் புகமுடியாமையையும் நன்கு விளங்குகிற தன்றோ? தமிழகம் மோரியருக்கு அடிமையாகாமல் காத்துச் 'செருப்பாழி எறிந்த இளஞ் சேட் சென்னி" என அடைமொழியும் பெற்றான்.

தமிழகத்தில் மோரியர் தங்கள் எண்ணம் நிறைவேறாது முறியடிக்கப்பட்டு மீண்ட பின்னர்ச் சேர சோழ பாண்டிய வேந்தர்கள் வடவர்கள் படையெடுப்பிலிருந்து தமிழகத்தைக் காக்க, கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே ஒன்றுபட்டு ஒரு ஐக்கிய முன்னணி ஏற்படுத்தினர். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் கலிங்கத்தை ஆண்ட காரவேலன் தன் யானைக் குகைக் கல்வெட்டில் நூற்றுப் பதின்மூன்று ஆண்டுகளாக இருந்து வரும் தமிழரசர் கூட்டமைப்பைக் குலைத்ததாகப் பெருமை பேசிக்கொள்வது அந்த முன்னணி அமைப்பை வலியுறுத்துகிறது.

**ஏலாரன்:** கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சோணாட்டு இளங்கோ ஏலாரன் (ஏழாரன் எனவும் பாலி மொழியில் குறிப்பிடப்படுகிறான்) ஈழத்தைப் படையெடுத்து ஈழத்தரசனை வென்று இலங்கையின் வட பகுதியை நாற்பத்தைந்து ஆண்டு நீதியுடன் ஆண்டான். திருவள்ளுவர் கதையில் பேசப்படுகிற 'ஏலேலனும்' இந்த 'ஏலாரனும்' ஒருவனா வென்பது ஆராய்தற்குரியது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதென இலங்கை வரலாற்று நூல் மகா வம்சம் கூறுகிறது. கி. மு. 177 ஆம் ஆண்டில் சேனன், குத்திகன் எனப் பெயரிய இரு சோணாட்டு வணிகர் ஈழத்தரசன் அசேலன் என்பவனைத் தென் பகுதிக்கு விரட்டி வட பகுதியில் அனுராத புரத்தைத் தலைநகராய்க்கொண்டு செங்கோல் செலுத்தினர். இவர்கள் சில காலம் ஆண்ட பிறகு அசேலன் படை திரட்டித் தமிழர்களிடமிருந்து தன் நாட்டை மீட்டுக் கொண்டான். ஏறத்தாழ, கி. மு. 145 ஆம் ஆண்டில் சோணாட்டுப் படை இலங்கையை இரண்டாம் முறையாகப் படையெடுத்தது. ஒரு பெரும்படையுடன் ஏலாரன் திரிகோண மலையில் வந்திறங்கிப் பாடி வீடமைத்துக்கொண்டு அனுராத புரத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றான். அசேலன் போரிடாமல் புறமுதுகு காட்டினான். ஏலாரன் பௌத்த மக்களும் உவக்கும் வகையில் செவ்வையாகச் செங்கோலோச்சினான். நண்பர் பகைவர் என்று பாராமல் நடுநிலைமையோடு ஆட்சி புரிந்தான். இவன் நீதியை விரோதிகளும் பாராட்டி 'நீதிமான் ஏலாரன்' என்றே இவனைக் குறிப்பிட்டனர். தமிழ்ச் சமயக் கொள்கைகள் நாட்டில் பரவாமலிருக்கவும் பௌத்தக் கொள்கைகளைக் காக்கவும் ஈழ மன்னன் தத்தகாமணி வலியிழந்த கிழப்பருவத்தில் ஏலாரனுடன் போராடி அவனைக் கொன்றனன். ஏலாரன் இறந்த இடத்தில் ஒரு நினைவுக் குறி எழுப்பியதோடு பிற்காலத்திலும் ஈழ மன்னர்கள் அவன் கல்லறைக்குச் சென்று வணங்கி மரியாதை காட்டினர்களெனில் அவன் ஆட்சிப் பெருமையை ஒருவாறு உய்த்தறியலாம்.

பின்னர், கி. மு. 44 முதல் 20 வரையில் தமிழ்த் தலைவர்கள் ஐவர்

(புலகத்தன், பாகியன், பனியமாவன், பிளையமாவன், தாடிகன்) ஈழத்தை அரசாண்டனர் என இலங்கை பௌத்த அரசர் வரலாறு கூறுவதை நோக்கின் இவர்கள் முதற் காரிலன் இலங்கையைப் படையெடுத்துப் பலரைச் சிறைப்பிடித்துச் சென்ற பிறகு அம்மன்னனுல் அனுப்பப்பட்டு இலங்கையில் ஆட்சிபுரிந்தனர் எனக் கொள்ள இடமிருக்கிறது. கிறித்து பிறப்பதற்கு முன்னர்ப் பல முறைகள் தமிழர்கள் ஈழத்தில் ஆட்சியை நிறுவியதுபோல் கிறித்துவிற்குப் பின்னும் தமிழரசர் ஈழத்தை ஆண்டனர்.

## வாடி வதங்காத காய் கறிகள்.

பறித்து ஒரு வாரம் ஆனபோதிலும் காய்கறிகள் வாடி வதங்காமல் அன்று பறித்ததைப் போலவே செழுமையாக இருப்பதற்கு அமெரிக்க விவசாயச் சங்கத்தார் ஒரு வழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

அவரைச் செடிகளின்மேல் சில இரசாயனப் பொருள்களைத் தெளித்ததற்கு அவை முண்டும் முடிச்சுமாக முடங்கி விட்டன. இதற்குக் காரணம் தண்டின் ஒரு பக்கத்திலுள்ள அணுவறைகள் (cells) மட்டும் பருத்ததுதான். இவ்வணுவறைகள் தாம் உறிஞ்சிய நீரைச் சற்றும் வெளிவிடாதிருந்ததால் முடக்குகளும் நிலையாக அமைந்துவிட்டன.

இரசாயன மருந்துகள் தண்டின் அணுவறைகளிலுள்ள நீரை வெளிப்படாதிருக்கச் செய்யுமாயின், அவரைக் காய்களையும் இவ்வாறே செய்து வாடாதிருக்கச் செய்யலாம் என்று கருதுகிறார்கள்.

அவரைக் காய்களைப் பறிக்குமுன்னர், செடிகளின்மேல் இரசாயன மருந்தைத் தெளித்தார்கள். பிறகு காய்களைப் பறித்து வெளியிலேயே திறந்து வைத்துவிட்டனர். ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக மருந்து தெளிக்கப்படாத செடிகளிலிருந்து பறித்த காய்களையும் வைத்திருந்தார்கள். ஒன்பது நாட்கள் கழிந்தும் மருந்து தெளித்த செடியிலிருந்து வந்த காய்கள் அன்று பறித்தவை போல் கொழுமையாயிருந்தன. மற்றவை வதங்கிக் கிடந்தன.

இந்த முறையை இன்னும் சிர்படுத்த வேண்டுமாம். மருந்துகளில் எவை சிறந்தவை, எவ்வளவு கலந்து தெளிக்க வேண்டும், இந்த முறை எந்தெந்த காய்கறிகளுக்குப் பயன்படும் என்பதை இன்னும் ஆராயவேண்டும்.

● தூங்கும்போது கனவுகள் காண்கிறோம்; அவற்றிக்கு ஏதேனும் பொருள் உண்டா என ஆராய்வது இக்கட்டுரை.

# காண்பது கனவு தானா?

திரு. தி. கோயில் பிள்ளை, M. A., M. ED.

●

கனவு காணாதோர் உலகில் ஒரு வேளை ஒருசிலர் இருக்கலாம் அவரும் கனவு கண்டு, அதை மறந்திருப்பர். அன்றி, பகற்கனவேனும் கண்டிருப்பர். தொன்றுதொட்டு மக்களுள் கனவைப் பற்றி வெவ்வேறு நம்பிக்கைகள் உலாவி வந்தன. கனவுகள் தெய்விக வல்லமை யுடையன என்று சிலர் போற்றியிருக்கின்றனர். குருட்டு நம்பிக்கையின் விளைவு என்று பகடி பண்ணுவோரும் உண்டு. மொத்தத்தில், அவற்றில் பெரும்பான்மையானவை உள்ளீடற்ற கண்காட்சிகள் போன்ற வீண் கனவுகளே என்றும் ஒரு சில மாத்திரம் சிறப்புடையவை என்றும் நாம் நம்புவதுண்டு. ஆக, அதன் மர்மம்தான் என்ன என்று சிறிது ஆராய்வோம்.

பண்டைக் காலத்து நம் முன்னோர், கனவுகள் ஆன்மாவின் திருவிளையாடல் என்று எண்ணினர். உலகில் நடக்கும் சம்பவங்களை ஆன்மா தன் மனோராச்சியத்தில் கனா வடிவமாக ஆக்கித் துயில் நிலையில் காண்பிப்பதாகவும், அல்லது தூங்கும்போது ஆன்மா கூடுவிட்டுப் பிரிந்து செய்யும் சஞ்சாரமே கனாப்போல் தெரிகிறதாகவும், இங்ஙனம் பலவாறு கனவுகள் ஏற்படுவதற்குக் காரணம் கூறினர்:

மேலும், ஒருவிதக் கனவுகள்மீது முற்காலத்தவர்களுக்கு ஓர் அலாதி நம்பிக்கை இருந்திருக்கிறது. சித்தூர் மகா ராஜனான லாக்ஹ்மன் சிங் (Maharana Lakhman Sing of Chitore) ஔரங்கசீப் மன்னனை எதிர்த்துப் போராடினது தான் வழிபட்ட தேவதை கனவிலிட்ட கட்டளைக்கு இணங்கியதால் என்றும், தன் தந்தை கனவிலிட்ட ஆணைக்குக் கீழ்ப்படிந்து ஜிஹாங்கீர்கான் தன் பிரஜைகளில் ஒருவனிழைத்த பெருங் குற்றத்தை மன்னித்தான் என்றும் சரித்திர வாயிலாகத் தெரிகின்றன. போரில் காயமுற்ற வீரர்க்குத் தொண்டு செய்த புண்ணியவதி பிளாரென்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) சிறு வயதில் தெய்வலோகத்தைப் பற்றிக் கண்ட கனவுகளிலெல்லாம் அமரரனைவரும் காயமுற்ற வீரராயும், தாம் அவர் நடுவில் தொண்டாற்றும் பணிப்பெண்ணையும் காணப்பட்டாராம். சாதாரணமாக நம்முள் பாம்பைப் பற்றிக் கனவு காணுதல் மகன் பிறத்தற்கு அறிகுறி என்றும், நீர் நிரம்பிய குடத்தைக் காணுதல் செல்வமடைவதற்கு முன்குறியென்றும், சிவந்த பூவைப் பார்த்தல் கேடு வருவதற்கு முன் சான்று என்றும், யானை

குதிரை முதலியவற்றில் ஏறிச் செல்லுதல் செல்வமடைவதற்கும், எருமையேறித் தெற்கே செல்லல் சாவுக்கும் மனித மாமிசம் உண்பது போன்ற கனாக் காணுதல் எண்ணிய காரியம் சித்தி பெறுதற்கும், உடைந்த பல்லைக் காண்பது கேட்டிற்கும் உரிய அறிகுறிகள் என்னும் எண்ணம் தற்போதும் இருந்து வருகின்றது. ஆகவே ஒரு சில கனவுகளுக்கு ஏதோ பொருள் இருக்க வேண்டும் என்று பல்லாண்டுகளாக நம்பிவந்திருக்கிறோம்.

ஆனால், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் இதைப்பற்றி ஆராய்ச்சி பூர்வமான சில உண்மைகள் புலனாயிருக்கின்றன. கனவு ஏற்படுதற்குக் காரணம் உடல் நிலை (physiological) என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். துயில் கொள்ளும் ஒருவன்மீது ஒரு துளி நீர் தெளிக்கப்பட்டு, அவன் விழித்துக்கொள்ளாது அத்துளியை உறங்கிய வண்ணமே உள்ளத்தில் உணர்ந்தானால், அவன் மழையைப் பற்றியும், வெள்ளப் பெருக்கைப் பற்றியும் அல்லது நீரில் நீந்தி நடுங்குவது போலவும் கனாக் காணலாம் என்று உள ஆய்வுகள் (psychological experiments) வாயிலாக நிறுவப்பட்டிருக்கிறது. ஆனால், தேகத்தில் நிகழும் தூண்டுதலால் (physiological stimulus) கனவுகள் ஏற்படுவது சாத்தியமானாலும், அக் கனவுகளின் உள்ளடக்கத்திற்கு (content) காரணம் கனவு காண்போரின் மனநிலையே என்பது உள நூலார் கொள்கை. உடல்மேல் நீர் தெளிக்கப்படுவதால் நீர் சம்பந்தமான கனவுகள் எழும்பினும், அவை ஒன்றிற்கொன்று வித்தியாசமாயிருப்பது கனவு காண்போரின் மனநிலையா லென்றும், கனவுகளின் தன்மையை வரையறுக்கும் முக்கிய அம்சம் உள்ளத்தை யடுத்ததே யன்றி (deciding factor of dream is mental) உடலையடுத்ததன்று என்னும் முடிவு கூறுகின்றார்கள். அக் கொள்கையின்படி, வயிறு புடைக்கச் சாப்பிட்டபின் தூக்கத்தில் விரட்டப்படுவதுபோல் கனாக் காணுதலும், பூனையால் விரட்டப்படுவதுபோல் கனவு காணுதலும் ஒரு மன நிலையின் விளைவாகும்; புலியால் விரட்டப்படுவது போல் காணுதல் வேறொரு மனநிலையின் விளைவாகும்.

உடல் நிலையின் ஏற்றத் தாழ்வுகள் காரணமாகக்கனவு ஏற்படுகிறது என்று கூறும் கொள்கையினர், தூங்கும்போது மூளை நரம்புகள் தளர்ந்துபோதலால், அவற்றின் நுனிகளிலுள்ள மூளை அணுக்கள் (brain cells) ஒன்றோடொன்று சேரும் சந்திகளினூடே இடைவெளி ஏற்படுவதால் எண்ணங்கள் விகாரப்பட்டுக் கனவு வடிவமாகக் காணப்படுகின்றன என்று கூறுகின்றனர். இவருள் வேறு சிலர், துயில் கொள்ளும்போது மூளை நரம்புகளின் சந்திகளில்(Synapse) நெருக்கம் அதிகரித்தால் உள்ளே வரும் செய்திகளும் வெளிச்செல்லும் செய்திகளும் கலந்து, சிதறிக்கனவு உண்டாகிறதென்று கூறுகின்றனர். இம்மாதிரியாகப் பலவகையில் கனவின் தோற்றத்தை உளவியலார் விரிக்கிறார்கள். ஆனால், அவர்கள் கையாளும் முறையினால் கனவுகளின் ரகசியத்தை யறிதல் முடியாது.

இம்மர்மத்தை ஒருவாறு விளக்கியவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சிக்மண்ட் ப்ராய்ட் (Sigmuud Freud) எனும் ஒரு வைத்தியராவர். அவர் தம் மருத்துவ அனுபவத்தில், மன நோயாளிகளின் நோய்க்கும், அவர்களது கனவு வாழ்க்கைக்கும் ஒருவிதத் தொடர்பு இருப்பதை நாளடைவில் உணர்ந்தார். அக்கனவுகளை மிக ஆழ்ந்து ஆராய்ந்ததில் அவருக்கு மனித மனத்தின் அமைப்பைப் பற்றியும், கனவுகளின் ரகசியங்கள் பற்றியும் சில உண்மைகள் தென்பட்டன.

அதன்படி, நமது மனத்தைத் தண்ணீரில் மிதக்கும் ஒரு பெரிய பனி மலைக்கு ஒப்பிடலாம். அம்மலையின் சிகரமும் மேற்பாகமும் எப்படி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய்த் தெரிகின்றனவோ அதேபோல் நமது மனத்தின் ஒரு பாகத்தில் தோன்றும் எண்ணங்கள், விருப்பங்கள் முதலியன நம்மால் எளிதில் அறிய முடிகிறது. இப்பாகத்தை "அறிந்துணரும் பாகம்" (The conscious) என்று சொல்லலாம். விழித்திருக்கையில் நாமறிய எழும் சிந்தனைகளெல்லாம் இப்பாகத்தின் வேலை என்று கூறலாம். பனிமலையின் ஒரு பாகம் எப்படித் தண்ணீர் மட்டத்தோடு கலந்து நின்று மங்கலாய் விளங்குகின்றதோ அதே வண்ணமாக நமது மனத்தின் ஒரு பாகத்தில் எழும் எண்ணங்களும் சிந்தனைகளும் மங்கித் தோன்றி ஒரு அளவே நம்மால் அறியக் கூடியனவாய் இருக்கின்றன. இதை "ஓரளவு அறிந்துணரும் பாகம்" (The pre-conscious) என்று சொல்லலாம். அப்பனிமலையின் பெரும் பாகம் எப்படித் தண்ணீர் மட்டத்திற்குக் கீழ் ஆழ்ந்து கண்ணுக்கெட்டாது கிடக்கின்றதோ அப்படியே நமது மனத்தின் பெரும்பாகம் நம் அறிவுக்கெட்டாது பொதிந்து கிடக்கின்றது. இதை "அறிந்துணரவொண்ணாப் பாகம்" (The unconscious) என்று கூறலாம். நம் மனத்தின் ஓர் அங்கமானால் அதை அறிவதுதான் எப்படி என்று ஒரு வினா எழலாம். ஆம்; அதை நாம் நேரில் அறிவது சாத்தியமன்று. இவ்விதமான ஒரு பாகம் மனத்தில் உண்டு என்பதை நாம் ஒருவாறு யூகித்துத்தான் அறிந்துகொள்ளவேண்டும். உளப் பாகுபாடு வல்லுநர் (Psycho analysts) தனிப்பட்ட முறைகள் பல கையாண்டு பொதிந்து கிடக்கும் அப்பாகத்தின் நுட்பத்தை அறிந்துள்ளனர். இப்பாகத்தில்தான் மனித வர்க்கத்திற்குத் தொன்று தொட்டு ஏற்பட்ட எண்ணங்களின் ஞாபகங்களும் (racial memory)

சமூகத்திற்கும் ஒழுக்கத்திற்கும் மாறான நமது அந்தரங்க எண்ணங்களும் நினைவுகளும் விருப்பங்களும் பொதிந்து அமுக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஒரு தக்கையானது தண்ணீருள் எவ்வளவு அமுக்கப்பட்டாலும் எப்படி வெளியேற முயல்கிறதோ அதே மாதிரியாக இப்பாகத்தில் அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் அறியப்படா அநேர் சிகரமான எண்ணங்களும் அவாக்களும் வெளியேறப் பிரயாசைப்படுகின்றன. ஆனால், நாம் விழித்திருக்கும்போது மனத்தின்கண் இருக்கும் தவறுகற்றும் நினைவான்து இவ்வெண்ணங்கள் நமக்கு அறியப்படக்கூடிய நிலைமையடையாதவாறு தடுத்துக் கொண்டேயிருக்கிறது.

ஆனால், துயில் நிலையில் இச்சோதனைத் தடுப்பானது சிறிது தளர்ச்சியுற்றுக் கவலையின்மையிருப்பதால் இவ்வெண்ணங்கள் மாறுவேடம் பூண்டு வெளியாகின்றன. இவையே கனவுகளாகும். வெகு சாதுரியமாகவும், சமார்த்தியமாகவும் அவைகள் வேடம் பூணுதலால் அவற்றின் உட்கருத்துக்களை அறிவது மிகவும் அரிது. கனவுகளுக்குப் பொருள் என்ன என்று நாம் கேட்கும்போது, இவ் அந்தரங்க உட் கருத்துக்களையே நாம் குறிக்கின்றோம். ஒழுக்கத்திற்கு முரண்பட்டதும் சமூகத்திற்கு ஒவ்வாததுமான இவ்வெண்ணங்கள் நமது மனத்தின் ஒரு பாகத்தில் பொதிந்து கிடக்கின்றன என்பதை நாம் சொப்பனத்திலும் அறியாவாறு கனவில் இவ்வெண்ணங்கள் தங்களை மறைத்துக் கொள்ளச் செய்யும் வித்தைகள் பல. அவை அடையாளக் குறிகளாகவும் (Symbols), தொடர்பற்ற எண்ணங்கள் தொடர்பு ஏற்றுக் காட்சு வடிவமாகவும் (Dramatisation), முக்கியம் வாய்ந்த அம்சங்கள் கனவில் முக்கியத்துவமிழந்தும், அற்ப விஷயங்கள் அர்த்த புஷ்டியுள்ளனவாய் மாறுபட்டும் (Displacemet), உண்மை

யியல்பு மாறி ஒன்றோடொன்று குறுகிப் பொருத்தப்பட்டும் (Condensation); அவ் வந்தரங்க எண்ணங்கள் உருத்தரித்துக் காட்சி வடிவமாக (Visualisation), நமக்குக் கனவில் தோன்றுகின்றன. இதுபோக நாம் துயிலில் கண்ட கனவுக்கும், துயிலெழுந்தபின் அதை நினைத்துப் பார்க்குங்கால் ஞாபகத்தில் வரும் கனவுக்கும் வித்தியாசங்கள் பல ஏற்படுகின்றன. (Secoudary elaboration) இவ்வளவு தந்திரமாக நம்மை ஏமாற்றும் இவ் வந்தரங்க எண்ணங்களை வேஷமிழக்க வைத்து உண்மைக் கோலத்தோடு கண்டுபிடிப்பது எளிதில் முடியாது. அவற்றை உளநூல் வல்லுநர் கண்டுபிடித்தாலும், அவை நம் மனத்திற்கு அருவருப்பைக் கொடுத்தலால் அதை ஒத்துக்கொள்ளச் சிலர் சம்மதிப்பதில்லை. தீப்பறவைவைப்போல் தலையை மண் குழிக்குள் வைத்து முழுவதும் மறைத்துக்கொண்டோம் என்று மகிழ்ச்சி அடையும் குழுவைச் சார்ந்தவர் அத்தகையோர்.

ஆகவே, கனவுகளெல்லாம் வெவ்வேறு உருவத்தில் மனத்தின் உள்ளே பொதிந்து கிடக்கும் பலவித ஆசைகளின் மறைமுகமான நிறைவேற்றம் (indirect wish fullfillment) என்று கூறலாம். ஆதலால் கனவுகளுக்குப் பொருள் கூறலாம் என்பதும் இதிலிருந்து விளங்கும். மனத்தின் நினைவுகளே கனவுகளை ஏற்படுத்துகின்றன. அந்நினைவுகள் மனத்தின் மூன்று அங்கங்களில் ஏதாவதொரு பாகத்தில் ஏற்படலாம். சித்தி பெறாத எண்ணங்களும், திருப்தியடைதற்கு ஏதுவல்லாமற்போன சிந்தனைகளும், நாம் அறியவொட்டா அந்தரங்க அரோசிகரமான விருப்பங்களும், துயில் கொள்ளும்போது கனவாகத் தோன்றி மனத் திருப்தியளித்து நமக்கு ஒருவாறு நலன் தருகின்றன. கனவின் உதவியால் கோல்ரிட்ஜ் (Coledridge) எனும் கவி குப்லாகான் (Kubla Khau) என்னும் செய்யுள் அமைத்ததாகவும், கணித வல்லுநரின் கனவில் கணித மர்மங்கள் தெளிவுபடுகின்றன என்பதும் இதற்கு ஏற்ற சான்றுகளாகக் கூறலாம். நிற்க.

ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு வகையாகக் கனவு காணுவது இயல்பானாலும் எல்லோருமே பொதுவாகக் காணும் கனவுகளும் சில உள. அவற்றில் சிலவற்றைச் சிறிது கவனிப்போம். கனவில் காற்றில் மிதந்து செல்வது போன்றும், உயரத்திலிருந்து கிழே விழுதல் போன்றும், ஆடையின்றி அலைதல் போன்றும், ஓட்டமோட்டமாய் ஓடி ரயில் தவறிவிட்டது போலவும், காட்டு மிருகங்களால் விரட்டப்படுவது போலவும், தண்ணீரில் அகப்பட்டுத் தவிப்பது போன்றும், நெருங்கிய உறவினர்கள் இறந்துபட்டது போன்றும் அமைந்த கனவுகள் பெரும்பான்மையோர் கண்டிருக்கின்றனர். இதே வகையில் அக்கனக்கள் காணப்படாவிடினும் ஓரளவு இவற்றிற்குச் சம்பந்தப்பட்ட முறையில் கண்டிருப்பர். இப்பொதுப்பட்ட கனவுகளுக்கு ஏதோ ஏகமானதொரு பொருள் இருக்கலாம் என்பது ஒரு சிலரின் அனுமானம். பறக்கும் கனவுகள் காமத்திற்கடுத்தன (Sexual) என்றும் அல்லது உலகில் உயர் நிலையடைய விரும்பும் அவாவைக் குறிக்கும் என்றும், மேலிருந்து கீழ் விழுதல் நம் வானர முற் பிதாக்களை நினைப்பதற்குச் சான்று என்றும், அல்லது நேரிய ஒழுக்கத்திலிருந்து விலகி விழுவதற்கு நம் அந்தரங்க ஆசையின் உச்ச நிலையைக் குறிக்கிறதென்றும், ஆடையின்றி அலையும் கனவுகள் நாம் சிறு குழந்தைகளாயிருக்கும்போது அம்மணமான நம் மேனியை எல்லாரும் கண்டு மெச்சியதால் ஏற்பட்ட நம் சந்தோஷத்தைத் திரும்ப வருவிப்பதற்குக் கனவில் நாம் செய்யும் எத்தனம் என்றும் ரயில் முதலியன தவறுதல் நாம் செய்ய வேண்டிய வேலைகளுக்கு நாம் சக்தி

யற்றவரா யிருப்போம் என்று நம்முள்ளிருக்கும் சந்தேகத்தாலும் பயத்தாலும் ஏற்படுகின்ற விளைவென்றும், திருடர் அல்லது காட்டு மிருகங்களால் தொடரப்படுவது காமத்தைப் பொறுத்த காரியங்களில் தாக்கப்படலாம் என்னும் பீதிக்கு அடையாளம் என்றும், தண்ணீரையடுத்த கனவுகள் சிறு குழவிப் பருவத்தில் தாயின் பன்னீர்க் குடத்திலிருந்து பிறந்த சம்பவத்தை விபரீதமான முறையில் காட்டும் காட்சியென்றும் நெருங்கிய பந்துக்கள் இறப்பதுபோல் காணும் கனுக்கள் நாம் அந்தரங்கத்தில் அவரை வெறுப்பதன் விளைவு என்றும் பலவாருக இக்கனுக்களுக்கு உளநூல் வல்லுநர் பொருள் கூறியிருக்கின்றனர்.

தவிர, பகற்கனவுகளும் கனவுகளின் ஒரு வகையே யாகும். இது நேரும் சமயத்தில் நாம் முழுமையும் கண் விழித்திராமல் ஓரளவு தூக்கத்திலே யிருப்போம். ஆனல், தூக்கத்திலெழும் கனவுகளை நாம் நம் அறிவை உபயோகித்து அமைத்தல் முடியாதது போலல்லாமல் பகற்கனவுகளை நம் விருப்பம் போல் ஓரளவு அமைக்கலாம். அல்னுஷார் பானைகளை விற்று அதில் வந்த லாபத்தில் மனக்கோட்டை கட்டி அதன்பின் இளவரசியை மணந்து அதன்பின் பானைகளையு மிழந்தது இத்தகைய பகற் கனவின் விளைவே. இவ்விதக் கனவுகளின் பொருள் எளிதில் எவருமறிந்து கொள்ளலாம்.

எனவே, சொப்பனங்களுக்குப் பொருள் உண்டெனினும் 'அவற்றைச் சொப்பனச் சுவடுகள் மூலம் அறிதல் முடியாது. ஒவ்வொரு கனவின் வெளிப்பட்ட சராம்சத்தையும் (manifest content) ஆழ்ந்து ஆராய்ந்து, பல்வேறு பாகமாக அக்கனுவைப் பகுத்து, உளநூல் வாயிலாய் அலசி, பாகுபடுத்தும் பல வழிகளைக் கையாண்டு, அதன்பின் அக்கனவின் உட்கருத்துக்களை (latent content) அறியலாம். இவையே அக்கனவுகளின் பொருளாம். ஆதலால் நாம் காணும் கனவுகளை வீண் கனவுகள் தானே என்று அலட்சியம் செய்யாது அவைகள் நம் அந்தரங்க எண்ணங்களின் விநோதமான எதிரொளியும் எதிரொலியுமே யாம் என்று உணர வேண்டும்.

---

**மனிதன் உள்ளம் எல்லையற்றது. இதன் எல்லையற்ற தன்மையை யான் கனவின்கண் நிகழும் செயல்களிலன்றி வேறெவற்றிலும் அத்துணை அளவு உணர்வதில்லை.**

**— குலுலோ.**

# பழங்காலத்தில் இளந்தமிழன்

திரு. G. பெருமாள், B. O. L. (Hons.)

நற்கால வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது முற்கால வாழ்க்கையே. முற்கால வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை ஆராய்வதால் தற்கால வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள முடியும். ஒரு கால வாழ்க்கை மற்றொரு கால வாழ்க்கையை வளம் படுத்தப் பெருந்துணையாக அமைகிறது என்ற அடிப்படையில்தான் வரலாற்று நூல்களெல்லாம் தோன்றியுள்ளன. வரலாற்று நூல்கள் பெற்று வளர்த்த செல்வக் குழந்தைகள்தாம் அரசியல் (Politics) பொருளியல் (Economics) அறிவியல் (Science) வாணிபவியல் (Commerce) போன்ற எல்லா இயல் நூல்களும். அரசியல் பொருளியல் அறிவியல் வாணிபவியல் முதலிய பலதுறைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளெல்லாம் போற்றப்படும் நாடுகளாக இருக்கின்றன; பிற நாடுகளெல்லாம் பிற்போக்கு நாடுகள் என்று தூற்றப்படும் நாடுகளாக இருக்கின்றன.

'தமிழ்கூறு நல்லுலகத்தை' முற்போக்கு உலகமா பிற்போக்கு உலகமா என்று வரையறுத்துக் கூறுவதற்குத் துணைநின்றுதவும் வகையில் வரல்முறை பிறழாது எழுதிவைத்த வரலாற்று நூல் ஒன்றும் இதுவரையில் அகப்படவில்லை. வரலாற்று நூல் அகப்படவில்லையேனும் அதைப் பெற்று வளர்க்கும் சிறப்பு வாய்ந்த இலக்கியங்கள் தமிழில் நிரம்ப அகப்பட்டுள்ளன. தமிழ்மொழியில் அகப்பட்டுள்ள முற்கால இலக்கியங்களைச் சங்க கால இலக்கியங்கள் என்று கூறுவார்கள். சங்க கால இலக்கியங்கள் பழந்தமிழர் வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டும் அற்புதக் கண்ணாடிகளாக இருக்கின்றன. அந்த அற்புதக் கண்ணாடிகள், பழங்காலத்தில் தமிழர்கள் அருட்செல்வம் பொருட்செல்வம் அறிவுச் செல்வம் பண்புச் செல்வம் கலைச் செல்வம் வெற்றிச் செல்வம் போன்ற பல்வேறு செல்வங்களைப் பெற்று வளமாக வாழ்ந்து உலகம் போற்றும் நிலையில் உயர்ந்திருந்தார்கள் என்று காட்டுகின்றன.

அன்று உலகம் போற்றும் நிலையில் உயர்ந்திருந்தார்கள் தமிழர்கள்; இன்று உலகம் தூற்றும் நிலையில் தாழ்ந்திருக்கிறார்கள் தமிழர்கள். ஏன்? பல்வேறு காலங்களில் பல்வேறு காரணங்களை முன்னிட்டுப் பல்வேறு வழிகளில் தமிழ்நாட்டில் அண்டிப் பிழைக்க வந்த பல்வேறு வகுப்பைச் சேர்ந்த வறியவர்களும் முரடர்களும் வஞ்சகர்களும் திருடர்களும் அறிவற்றவர்களும் மற்றவர்களும் தமிழர்களுடைய பல்வேறு செல்வங்களையும் செல்வாக்குகளையும் பறித்துக்கொண்டார்கள். அவர்களே தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகளாக ஆளுவோர்களாகவும் அறிஞர்களாகவும் வாணிகர்களாகவும் முதலாளிக

ளாகவும் வாழ்க்கை வழிகாட்டிகளாக வும் இருந்து வந்துள்ளார்கள். இப்படி எங்கெங்கோ இருந்து வாழ வந்தவர் களுக்கே எல்லாச் செல்வங்களையும் செல்வாக்குகளையும் விட்டுவிட்டுத் தமக்கென ஒன்றுமின்றிப் 'பொறுத்த வர் பூமியாள்வார்' என்று தத்துவம் பேசிக்கொண்டு வாழ்ந்து வரும் தமி ழர்கள் தாழ்ந்து போகாமல் மேலும் மேலும் உயர்ந்துவிடக் கூடுமோ?— என்று சிலர் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது பெரும்பாலும் உண்மையே. அந்தோ! தமிழர்களைப்போல ஏமாந்த வர்களும் ஏமாற்றப்பட்டவர்களும் உலகில் எந்தப் பகுதியிலாவது இருப் பார்களா? பலவகையிலும் ஏமாந்து போன தமிழர்கள், ஏமாற்றப்பட்ட தமி ழர்கள் நெடுங்காலமாக வறுமையி லேயே பிறக்கிறார்கள்; வறுமையிலேயே வாழ்கிறார்கள்; வறுமையிலேயே சாகி றார்கள். சுருங்கக் கூறின் வறுமைச் செல்வம் ஒன்றே தமிழர்களுடைய உரிமைச் செல்வமாகி விட்டது. இது வரலாறும் உலகமும் அறிந்த உண்மை அன்றோ?

வறுமைச் செல்வ வேந்தர்களாகத் தமிழர்கள் எவ்வளவு காலம் வாழ்வது? இன்றுள்ள பல தமிழர்களுக்கு நல்ல உணவு என்றால் என்ன? நல்ல உடை என்றால் என்ன? நல்ல உறையுள் என்றால் என்ன? என்பன தெரி யாதே! வாழ்க்கைக்கு அடிப்படையாக வேண்டும் உணவு உடை உறையுள் இவைகள்கூடத் தமிழர்களில் பெரும் பாலோர்க்குத் தெரியாது என்றால், அவர்கள் உடல் உள்ளம் மூளை இவை களை எல்லாம் எப்படி வளர்ப்பார்கள்? எப்படி முன்னேறுவார்கள்? என்று உலகம் போற்றும் நிலைக்கு உயர்வார் கள்? உடல் உள்ளம் மூளை இவை களின் வளர்ச்சியும் நலமும் வளமும் அல்லவா முன்னேற்றம் எனப்படுவது? நாகரிகம் எனப்படுவது?

'தமிழ்நாடு உலகோடு சமமாக நின்று
தலைதூக்கி நிலைபெற்று வளமாகவேண்டும்'-

இந்தக் கனவை நனவாக்க வேண்டு மானால் இளைஞர் உலகம் இன்றே விழித்தெழ வேண்டும்; விழித்தெழுந்து பொறுப்பு ஏற்றுச் செருக்கு அற்று இடைவிடாது உழைக்க வேண்டும். இக்காலத்து இளந்தமிழர்கள் பழங் காலத்து இளந்தமிழனை வாழ்க்கை வழி காட்டியாகக் கொள்ள வேண்டும். அவன் சங்க காலத் தமிழ் உலகில் இக் காலத்துத் தமிழர்களுக் கெனவே வாழ்ந்துவருகிறான்.

'இளமையிற் சிறந்த வளமையும் இல்லை' என்பது சங்ககாலத்து இளந் தமிழன் கண்ட உண்மை. வளமான வாழ்க்கையை விரும்புவோர்கள் இள மையைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; இளமையைப் பாழாக்குகிறவர்கள் வாழ்க்கையில் எந் தத் துறையிலும் முன்னேற முடியாது. இவ்வாறு இக்காலத்து இளந்தமிழர் களுக்கு அறிவுரை கூறும் வகையில் வாழ்ந்தவன் பழங்காலத்து இளந்தமி ழன். அவன் பிற்றைநிலை முனியாது கற்றவன். எல்லோரும் தன்னைப் போலவே இளமையிலேயே வாழ்க் கைக்கு வேண்டிய எல்லாவகைக் கலை களையும் கற்றல் வேண்டும் என்ற நல் லெண்ணத்தால்,

'பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' என்று வற்புறுத்திக் கூறியுள் ளான். அவன் வற்புறுத்தியவை களையே உலகத்தைச் சீர்திருத்தவும் முன்னேற்றவும் உழைத்துவரும் பெரியோர்கள் இன்றும் வற்புறுத்தி வருகிறார்கள்.

'நன்றும் தீதும் பிறர்தர வாரா' என்பது பழங்காலத்து இளந்தமிழன் கற்ற பாடம். இந்த அறிவுரையில் அவன் நம்பிக்கை வைத்தான். தீமை நீக்கி நன்மை பெற இளமை முதற் கொண்டே இடை விடாது உழைத் தான். தீய பண்புகள் எல்லாம் முன் னேற்றத்திற்குத் தடையானவைகள் என்று அறிந்து அவைகளோடு பெரும்

போர் செய்தான்; வெற்றி பெற்றான். நல்ல பண்புகள் தன்னிடத்தில் இயல்பாக அமையாமல் போயினும், அவைகளை உடைய நல்லவர்களோடு நெருங்கிப் பழகி அவைகளைப் பெற்று வளர்த்தான். மன நலத்தினும் இன நலம் சிறந்தது என்பதை நிலை நாட்டினான். 'பண்பு நலமும் அறிவு நலமும் தொழில் நலமும் உடையவர்கள் எந்த நாட்டவராயினும் சரி; எந்தக் காலத்தவராயினும் சரி; அவர்களோடு தொடர்பு கொண்டு வாழ்க' என்று வழி காட்டினான்.

அவன் வளமான வாழ்க்கைக்கும் அமைதியான வாழ்க்கைக்கும் இன்றியமையாது வேண்டப்படும் அறிவையும் அந்த அறிவைப் பெறுவதற்கு ஏற்ற பருவமாகிய இளமையையும் பாழாக்குவது வறுமையே என்பதை நன்கு அறிந்திருந்தான்.

'அறிவு கெட நின்ற நல்கூர் மையே'
(புறம்)

'வறியவன் இளமை போல் வாடிய சினையவாய்'
(கலித்தொகை)

என்பன போன்ற அவனுடைய கூற்றுக்களால் இந்த உண்மை விளங்கும். இதனால், வறுமையைப் பெரும் பகை என்று வெறுத்தவன் பழங்காலத்து இளந்தமிழன் என்பது தெரிகிறது. அவன் வறுமையைக் கண்டு அஞ்சிச் சோர்ந்து அழிந்து போகவில்லை. வறுமையை எதிர்த்துப் போராட வழி கண்டான். சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் தீய பண்புகளுக்கும் பழக்கங்களுக்கும் அடிமையாகாமல் தாம் மேற் கொண்ட கடமையைச் செம்மையாகச் செய்ய வல்லவர்கள் வறுமையை வெல்ல வல்லவர்கள் என்று தெரிந்துகொண்டான். ஆகவே, 'வினையே ஆடவர்க்கு உயிர்' என மதித்தான். வினையை இனிது முடிப்பின் அதுவே இன்பம் என மகிழ்ந்தான்.

'வினைமுடித் தன்ன இனியோள்' என்பதனால் வினை முடித்தல் அவனுக்கு இன்பம் என்பது தெளிவாகிறது.

அவன் கடமையை இரண்டு வகையாகப் பிரித்துக்கொண்டான். ஒன்று வீட்டுக் கடமை; மற்றொன்று உலகக் கடமை. இந்த இரண்டு வகைக் கடமைகளையும், செவ்வையாகச் செய்து முடிக்க அறிவுச் செல்வமும் பொருட் செல்வமும் வேண்டும். இவைகளைப் பெற இக்காலத்து இளந்தமிழர்களைப் போல அக்காலத்து இளந்தமிழன் பெற்றோர்கள் கையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கவில்லை; பெண் கொடுப்போர்கள் கையையும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்க வில்லை. 'தன் கையே தனக்கு உதவி' என்பதற்கிணங்க அவன்

"நாளும் நாளும் ஆள்வினை அழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையால்
புகழ்"

என்னும் அறிவுரையால் தூண்டப்பட்டு அறிவுச் செல்வமும் ஆண்மைச் செல்வமும் ஆன்மச்செல்வமும் பிறவும் திரட்டத் தன்னாட்டில் உழைத்ததோடு அமையாமல், வேற்று நாடுகளுக்கும் கப்பலிலும் கால் நடையிலும் வண்டியிலும் (கலத்தினும் காலினும்) பிரிந்து சென்று பெரிதும் முயன்றான். தானே முயன்று தேடிய பொருளைக் கொண்டு தானும் வாழ்ந்து பிறரையும் வாழச் செய்தான். இக்காலத்து இளந்தமிழர்களில் பெரும்பாலோர், பெற்றோர்கள் மூலமாகவும் பெண் கொடுத்தவர் மூலமாகவும் பெற்ற பொருள்களைக்கூட, வழக்கு மன்றங்களிலும் வழக்கறிஞர் இல்லங்களிலும் மருத்துவ நிலையங்களிலும் சூதாட்டுக் களங்களிலும் பழியும் பாவமும் கொடுக்கும் பிற இடங்களிலும் சிதைத்துவிட்டுத் தாமும் கெட்டுப் பிறரையும் கெடுத்துவிடுகிறார்கள். முற்கால இளந்தமிழன் இவ்வாறு செய்ததாகத் தெரியவில்லை.

'உள்ளது சிதைப்போர் உளர் எனப் படார்'
'இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு'
(குறுந்தொகை)

— இத்தகைய பொன் மொழிகள் அவனுடைய வாழ்க்கை நோக்கங்களை விளக்குகின்றன. இவைகளால், அவன் பிறன்கடை செல்லாப் பெருஞ் செல்வம் பெற்று, அவற்ருல் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி, அறங்கடைப் படாப் பெருவாழ்வு வாழ்ந்தான் என்பது புலனுகிறது. இவ்வாறு வாழ்வதல்லவோ வாழ்க்கை!

மேலும், அவன் போர் செய்யவும் கலை பயிலவும் ஒற்றறியவும் நாடு காக்கவும் தூது சொல்லவும் வேற்று நாடுகளுக்குச் சென்ருன். எந்தெந்த நாட்டுக்குச் சென்ருனே அந்தந்த நாட்டுக்குரிய வேற்று மொழிகளையும் பயின்ருன்; வேற்று நாட்டுப் பழக்க வழக்கங்களையும் அறிந்தான்: பயின்ற மொழிகளையும் அறிந்த பழக்க வழக்கங்களையும் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டான். அதனுல்தான், அவன் கடல் கடந்து சென்ருலும் நிலங்கடந்து சென்ருலும் சென்ற இடங்களில் எல்லாம் செல்வாக்குப் பெற்று விளங்கினுன். அவன் நல்வாழ்வுக்கும் செல்வாக்குக்கும் காரணமாக இருந்த பிறமொழிகளுக்கும் பிறநாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும் நன்றியோடு இருந்தானே ஒழிய இக்கால இளைஞர்களைப் போல அவைகளுக்கு அடிமையாக வில்லை.

அவன் 'வடவேங்கடம் தென்குமரி' ஆகிய இவ்விரண்டு எல்லைக்கு உட்பட்ட நிலப்பரப்பெல்லாம் 'தமிழ் கூறுநல்லுலகம்' என்று மதித்தான். தாய் நாட்டையோ தாய் மொழியையோ பிறர் பழித்துக் கூறவும் அவன் இடம் கொடுக்க மாட்டான். அவன் பெருவாழ்வுக்குக் காரணமாக இருந்தவைகள் அவனுடைய நாட்டுப் பற்றும் மொழிப்பற்றுமே எனின் மிகையாகாது. அவன் நாட்டையும் மொழியையும் வளம் படுத்த பிற நாட்டுக் கலைச் செல்வங்களையும் பிற செல்வங்களையும் கொண்டு வந்து குவித்தான். பயின்ற பிறமொழியின் மீதும் சென்ற பிற நாட்டின் மீதும் பற்றுக் கொண்டு பிறந்த நாட்டையும் வளர்த்த மொழியையும் மறந்து போகும் — வெறுத்து விடும் இக்காலத் தமிழர்கள் இந்த உண்மையைப் இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து வருகிருர்கள். இந்த அறிவு அவர்கள் எதிர்கால இன்ப வாழ்வுக்கு அடிப்படையாக அமைவதாகுக.

பழங்காலத்து இளந்தமிழன் காலத்தில் நல்ல ஆளுவோர்கள் இருந்தார்கள். அவர்கள் 'மக்கள் இன்புற வேண்டும்; அதற்காக நாம் பாடுபடல் வேண்டும்' என்னும் உயர்ந்த நோக்கம் கொண்டே ஆளுவோர்களாக அமைந்தார்கள். மக்களுக்கும் ஆளும் தொழிலில் பங்கு கொடுத்தார்கள். மக்களது குறை நீக்கினுர்கள்; அவர்களுக்கு முறை வழங்கினுர்கள். அதனுல்,

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது காலையிலும் மாலையிலும் மக்கள் சொல்லும் மந்திரமாக இருந்தது. மன்னனை மனமாரப் போற்றி வாயாரப் புகழ்ந்து அவன் என்றும் அழியாப் பெருவாழ்வு பெற்று நின்று நிலவவேண்டும் என்று மக்கள் விரும்பினுர்கள்.

'மன்னுயி ரெல்லாம் நின் அஞ்சுமே' என்ற புறநானூற்று அடிக்கு, 'மன்னுயிரெல்லாம் நமது நல்ல மன்னன் அழிந்துவிடக் கூடுமோ என்று எண்ணிப் பெரிதும் அஞ்சினுர்கள்?என்பது பொருள். இதனுலன்ருே,

மன்னவன் நல்லனு வாய்க்குநல் போல
என்னுளது அரியவற் றரியது இவ்
உலகில்?

என்று பிற்காலத்து அறிஞர்களும் பாடியுள்ளார்கள். எனவே, மக்கள் வாழ வேண்டுமானுல் ஆளுவோர்கள் நல்லவர்களாக அமைதல் வேண்டும் என்று தெரிகிறது.

ஆளுவோர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டுமானால் மக்களும் நல்லவர்களாக இருத்தல் வேண்டும். இந்த உண்மையை அறிந்த பழங்காலத்துத் தமிழ்ப் பெற்றோர்கள் தம் மக்கள் எல்லோரையும் சான்றோர்களாக்கினார்கள். சான்றோர்களாகத் திகழ்ந்த இளைஞர்களுக்கெல்லாம் நல்ல தொழிலும் புகழும் தகுதியும் கொடுத்துச் சிறப்புச் செய்தார்கள் அக்காலத்து வேந்தர்கள்.

> சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

இவ்வாறு அறிவு நலஞ்சான்ற பொன்முடியார் என்னும் அம்மையார் பாடியுள்ளார்.

ஆளுவோர்கள் தனக்குச் சிறப்புச் செய்யும் வகையில் உயர்ந்து தன்னுடைய கடமைகளைச் செவ்வையாகச் செய்து சான்றோனாக விளங்கிய பழங்காலத்து இளந்தமிழனிடம் மற்றொரு சிறந்த பண்பு அமைந்திருந்தது. அந்தப் பண்புதான் சமயப் பொறை என்பது. அந்தச் சமயப் பொறை அவனுக்கு,

> 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'
> 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்பனபோன்ற பல உயர்ந்த நோக்கங்களை வளர்த்தது. அத்தகைய பரந்த நோக்கங்கள் தாம் அவனை வீட்டுக் கடமைக்கு இரண்டாவது இடம் கொடுத்து உலகக் கடமைக்கு முதலிடம் கொடுக்கும்படி செய்தவைகள். பழந்தமிழனைப் போல உலகக் கடமைக்கு முதலிடம் கொடுக்காத வரையில் முன்னேற்றம் நாகரிகம் என்பவைகள் வெறும் சொல்லளவிலேயே நின்று விடும். முன்னேற்றம் நாகரிகம் இவைகளைச் சொல்லளவில் நிறுத்தாமல் பொருளளவில் நிறுத்திக் காட்டிய பழங்காலத்துத் தமிழர்கள் இறைவன் பேராலும் சமயத்தின் பேராலும் கட்சிகள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை; போர்கள் செய்யவில்லை; குருதி சிந்தவில்லை. அதற்காக உலகம் அவர்களைப் போற்றுதல் வேண்டும். பழங்காலத்துத் தமிழ்ச் சான்றோர்களைப் போலவே பழங்காலத்து இளந்தமிழனும் "ஆண்டவன் ஆடம்பரத்தை விரும்புவதில்லை; ஆண்டவன் அறிவு ஆற்றல் இவைகளைக் கூட விரும்புவதில்லை; ஆண்டவன் பண்பு வளர்ச்சி ஒழுக்க வளர்ச்சி இவைகளையே விரும்புகிறான்" என்ற உண்மையை அறிந்து, பண்பு வளர்ச்சிக்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் தடையாக இருக்கும் அழுக்காறு அவா வெகுளி அச்சம் பிறர்மனை நயத்தல் பிறர் பொருள் வெஃகல் போன்ற தீய பண்புகளோடு பெரும் போர் செய்து அவைகளைக் கொன்று, அன்பு வாய்மை அருள் கொல்லாமை அஞ்சாமை முதலிய நல்ல பண்புகளை வளர்த்து வாழ்ந்தான். நல்ல பண்புகளையும், ஒழுக்கங்களையும் வளர்ப்பதே நாகரிகம்; அதுவே ஆண்டவனை வழிபடும் முறை; அதுவே இறைவனோடு இரண்டறக் கலத்தற்கு உரிய வாயில் என்றெல்லாம் அறிந்து, உள்ளத்தைக் கோயிலாக்கி உகந்த கடவுளை வழிபட்டு உயர்ந்தவன் பழங்காலத்து இளந்தமிழன். அவனை இக்காலத்து இளந் தமிழர்கள் பின்பற்றி உயர வேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

மற்றோர் உண்மை பழங்காலத்து இளந்தமிழன்வாழ்க்கை அறிவிக்கிறது. அதுதான் குழந்தைகள் எல்லாம் தாய் முலைப் பாலும் தமிழ் மொழித்தேனும் உண்டு வளர வேண்டும் என்பது. தாய் முலைப் பாலுண்டு வளராத குழந்தைகள் - தமிழ் மொழித் தேனுண்டு வளராத குழந்தைகள்- தாய் நாட்டுப் பற்று தாய் மொழிப் பற்று என்னும் வயிரம் ஏற்றப் பெறாத குழந்தைகள்- வளர்ந்த பின்னர்ப் பழங்காலத்து இளந் தமிழனைப் போலப் பல துறையிலும் முன்னேறி வாழ முடியாது. பழங்காலத்து இளந்தமிழனைப் பெற்று வளர்த்த வீரத்தாய் ஒருத்தி, தன் வயிற்றை நோக்கி,

'புலி சேர்ந்து போகிய கல்லளை' என்று கூறி மகிழ்ந்துள்ளாள். அவள் கூற்றையும்,

'வலிமை கொடுப்பது தாய் முலைப் பாலடா', என்ற பாரதியார் வாக்கையும் இக்காலத்துத் தாய்மார்களும் எதிர் காலத்தில் தாய்மார்களாக விளங்கப் போகிறவர்களும் உணர்ந்து அக்காலத்து வீரத் தாய்மார்களைப் போலவே உலக நன்மையையும் முன்னேற்றத்தையும் முன்னிட்டு நல்ல மக்களைப் பெற்று நல்ல வகையில் அவர்களை வளர்த்துத் தந்து உலகத்துக்கு உதவி செய்யும் கடமையை மேற்கொள்ள வேண்டும்.

முன்னர்க் கூறியபடி தாய் முலைப் பாலுண்டு, தாய் மொழித் தேனுண்டு தாய் நாட்டுப் பற்று தாய்மொழிப் பற்று என்னும் வயிரம் ஏற்றப் பெற்று வளர்த்த பழங்காலத்து இளந்தமிழன் பெருமையும் உரனும் உடையவன்.

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' என்று தொல்காப்பியம் கூறுகிறது. இந்தத் தொல்காப்பிய நூற்பாவிற்கு, "அறிவும் ஆற்றலும் புகழும் கொடையும் ஆராய்தலும் பண்பும் நண்பும் பழிபாவமஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமைப் பகுதியும், கடைப்பிடியும் நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலியின் பகுதியும் தலைவன் கண்ண", என்று நச்சினர்க்கினியர் உரை வகுத்துள்ளார்.

தொல்காப்பியனர் ஓதிய இலக்கணத்திற்கும் நச்சினர்க்கினியர் எழுதிய உரைக்கும் இலக்கியமாக இருந்த பழங்காலத்து இளந்தமிழன், இல்லறமாகிய நல்லறத்தை ஏற்று இனிது நடத்துவதற்கு இன்றியமையாத வாழ்க்கைத் துணை நலத்தைத் தானே தேர்ந்தெடுத்து, வாழ்க்கைத்துணை நலத்தோடு 'இருதலைப் புள்ளின் ஓருயிர் போல'ப் பொருந்தி வாழ்ந்து இல்லற வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாக அமைத்துக் கொண்டான். இவ்வளவு சிறப்பும் பெற்ற பழங்காலத்து இளந் தமிழன், "எல்லோரும் வாழப் பிறந்தவர்களே; எவரும் வருந்திச் சாகப்பிறக்கவில்லை" என்ற உயர்ந்த கொள்கை உடையவனாக இருந்து, வாழ வழி தெரியாதவர்களுக்கெல்லாம் வாழ்க்கை வழிகாட்டியாக அமைந்து பிறர்க்குரியாளன் என்று போற்றப்பட்டான்.

"உண்டால் அம்ம! இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழி
[யெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்: அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

*(புறம் 182)*

இது இளம்பெருவழுதி என்னும் அரசன் பாடிய பாட்டு. இந்தப் பாட்டைக் கற்றுக் கற்றபடி வாழ்ந்து உயர்ந்தவன் பழங்காலத்து இளந் தமிழன். அவனே இக்கால இளந் தமிழர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டி. அவனை வழிகாட்டியாகக் கொண்டால், இளமை பாழாகாது; அறிவு பாழாகாது; இவற்றைப் பாழாக்கும் வறுமை தலைகாட்டாது; சோம்பல் வளராது. தன் முயற்சியும் கடமை உணர்ச்சியும் வளரும். பண்பு வளர்ச்சியும் ஒழுக்க வளர்ச்சியும் ஏற்படும். இவற்றால் வீட்டு வாழ்க்கையும் நாட்டு வாழ்க்கையும் உலக வாழ்க்கையும் சிறப்படும்.

# வீண் கனவா?

சா. பூமிநாதன்

"முன்னோர்கள் வகுத்துப் போயுள்ள முறைகளுக்கு முரண்பாடாக நடப்பதா? நடப்பதுதான் நல்லதா? முயன்றாலும் வெற்றி தருமா? ஹூம் ............ காலம் கெட்டுவிட்டது."

"நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது வாலைக் குழைத்துக் கொண்டு கொல்லை மேட்டை நோக்கித் தானே ஓடும்?" ............

"ஆட்டிற்கு வால் அளந்தபடிதான். இது ஆண்டவன் சித்தம் ........."

"பறையன் – ஹரிஜன்! நல்ல பெயர்! புது மொந்தை, பழைய கள் ......"

சேரிவாசி குப்பன் தன் மகனைப் படிக்கவைக்கவேண்டுமென்று எண்ணியதோடு நின்றுவிடவில்லை; அதன்படியே செய்தும்விட்டான். தன் மகனின் வாழ்வில் ஒரு புதிய நிலையை உண்டாக்கவேண்டும் என்ற குப்பனின் எண்ணம் "உயர்குலத்தோர்" வாழும் வட்டாரத்தில் ஒரு சலசலப்பை உண்டாக்கிவிட்டது. அந்தச் சலசலப்பில் பட்டுத் தெறித்தவைதான் மேலே கண்ட பொன்னான கருத்துக்கள்.

படிக்கவைக்கவேண்டுமென்ற எண்ணம், படிக்கவேண்டுமென்ற உளப்பண்பு கொள்வது குற்றம்—மன்னிக்க முடியாத மாபாதகம் என்று யாரும் சொல்லமுடியாது. இருந்தாலும் குப்பன் மகனை "நாயுடன்" ஒப்பிட்டதற்கு அவர்களாகக் கற்பனை செய்துகொண்ட பல காரணங்களும் இருக்கத்தான் செய்தன.

பறையன் மகன் மருதய்யன். உயர்ந்தோர் வசிக்கும் வீதியிலுள்ள பள்ளிக்குப் படிக்க வரும் காட்சியைத் தினம் காண, எப்படித்தான் "உயர்குலத்தோர்" உள்ளங்கள் பொறுக்கும்? கோவணங் கட்டி, பிறந்த மேனியே எனச் சொல்லும் அளவிற்கு வாழும் பரம்பரையின் சந்ததி ஒருவன் வேட்டியும், சட்டையும் உடுத்தி வீதி வழி வருவதைக் காண யார்தான் சகிப்பார்கள்? நாயும், மலந்தின்னும் பன்றியும், கழுதையும், எருமையும் நடமாடும் சாலையில் ஹரிஜன மருதய்யன் நடந்து வருவதற்கு உரிமையுடையவனா? ...... இதெல்லாம் போனாலும், படிக்கத்தான் வந்தாலும், தன் சாதியை, கீழ்த் தன்மையை மறக்கலாமா சிறுவன் மருதய்யன்? ...... மாணவ உளப் பண்போடு மருதய்யன் செய்த ஒரு சிறு செயல்தான் அவனை "நாயாக" "நாலாஞ்சாதியானாக" மாற்றிக் காட்டியது ......! அந்த ...... நிகழ்ச்சி!

மருதய்யன் படிக்கும் வகுப்பிலே பல சாதி மாணவர்கள் பயின்றார்கள். மளிகை மன்னார் சாமி முதலியாரின் மகன் பெருந்திருவடி, அனந்தசயனமய்யங்காரின் புத்திரன் ஆதிசேஷன், அந்தோனிமுத்து உடையாரின் மகன் இன்னாசிமுத்து ......... இப்படி எத்தனையோ பேர்கள்.

வெளியுலகில்தான் சாதிப் பாகுபாடு என்ற பட்டியலின்கீழ்ப் பிரிக்கப்பட்டிருந்தார்களே தவிரப் பள்ளியில் அப்பிரிவும், அதனால் வரும் பகையும் தலைகாட்டாத மாணவ உலகத்தில் பிரிவு இல்லை.

அங்கே "ஒரே குலப்" பண்போடு வாழ்ந்து வந்தார்கள்.

பெருந்திருவடியும், ஆதிசேஷனும், இன்னுசியும் மருதய்யனை மாணவனுக மதித்தார்களே தவிர, சேரிவாழ் குப்பன்—பறையனின் மகன் என்று எண்ணினுர்கள் இல்லை. "வெறிகள்" தலைகாட்ட முடியாத—அணுவள வேனும் இவ் வெறிகளால் சஞ்சல மடையாத உலகில் வசித்த அவர்கள் மனங்களில் இந்தப் பேயெண்ணங்கள் எழ நிர்ப்பந்தமோ, நியாயமோ இல்லாமல் இருந்தது.

எனவேதான் தின்பண்டங்கள் பறி மாறிக் கொள்வது, விளையாட்டுகளில் கலந்துகொள்வது என்றவைகளில்—பேதம் காட்டாத நிலையில் வாழ்ந்தார்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே என்றுதான், அறிவுலக வாசிகள், "எல்லோரும் ஓர் குலம்" என்றெண்ணும் இயல்புடையோர் எண்ணுவார்கள். ஆனுல் "நால் வருண தரும நெறியைக்" கடைப் பிடித்துவருபவர்கள் இதை வரவேற்க மறுத்தார்கள்.

அன்று ஒருநாள் மாலை. பள்ளி முடிந்ததும் வீட்டைநோக்கிப் பறந்தனர் மாணவர்கள். மருதய்யனும், பெருந்திருவடியும், ஆதிசேஷனும் ஒன்ருகத்தான் சென்ருர்கள். ஆதிசேஷனும், பெருந்திருவடியும் வசிக்கும் வீடுகளைத் தாண்டித்தான் மருதய்யன் ஊர்க்கோடியிலுள்ள சேரிக்குச் செல்ல வேண்டும். அவர்கள் வீடு வரும் போதே மருதய்யன்—தன் தகப்பன் சொற்படிப் பின்தங்கிவிடு வதுவழக்கம்; இது என்றும். அன்று மட்டும்......... வீதியின் திருப்பத்திலே தட்டொன்றில் மிட்டாய் வைத்து விற்றுக்கொண்டிருந்தான் ஒருவன்.

மருதய்யன் மிட்டாய் வாங்கி ஆதிசேஷன், பெருந்திருவடி இருவருக்கும் பங்கிட்டான். அந்தச் சுவையிலே லயித்துப் போயினர் மூவரும். இந்த இன்பத்தில் மிதந்து வந்துகொண்டிருந்த அம் மூன்று சிறுவர்களுக்கும் எதிரே வந்து கொண்டிருந்த அய்யங்காரோ அவருடன் பேசிக்கொண்டு வந்த முதலியாரோ கண்களுக்குத் தெரியவில்லை.

"டேய் பசங்களா..." இந்த அதட்டல், மூவரையும் விழிக்கச் செய்து விட்டது. பெருந்திருவடி மென்ற மிட்டாயை விழுங்க முடியாது திகைத் தான்... ஆதிசேஷன் உடல் நடுங்க ஆரம்பித்தது... மருதய்யனே பேசாது நின்று விட்டான்.

"பறைப் பயலுக்கு என்ன திமிர்!" ஆதிசேஷனுக்கு முதுகிலே இரண்டு அறைகள் விழுந்தன. பெருந்திருவடி தலையைத் தடவிக்கொண்டே ஓட ஆரம்பித்தான்.

"சீ நாயே, நிற்காம ஓடு" இது மருதய்யனுக்குக் கிடைத்த வாழ்த்து. அடிபடவில்லை. தீண்டாதவனுயிற்றே!

இதுதான் நடந்த நிகழ்ச்சி. அற்பமானது,...! இதற்குத் தான் மேலே தொடக்கத்திலே கண்ட கருத்துக்களை முதலியாரும் அய்யங்காரும் மாறி மாறி அள்ளி வீசினுர்கள்.

மனத்திலே புகைந்து கொண்டிருக்கும் பொறுமைக் கனல் கொழுந்து விட்டெரியும் நிலைக்கு அடிப்படை இந்தச் செயல்.

மருதய்யன் செய்த இந்த மாபெருந் தவறுக்குப் "பிராயச்சித்தம்" செய்ய வேண்டியவன் குப்பன். கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். ஆனுல், சட்டத்தின் தாக்கிது பெற்ருே, வெளியில் தெரியும் அளவிற்கோ நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. எத்தனையோ "மறை முக" முறைகள்... அதிலே ஒன்று உபயோகப்படுத்தப்படும். அய்யங்காரும், முதலியாரும் இதைச் செய்யாமல் விட்டாலும் பலப்பல ஆண்டுகளாக நாட்டிலே நிலவி வரும் பழமைப் பாசி

படிந்துபோன குருட்டு நம்பிக்கை அவர்களைச் செய்யத்தான் தூண்டும். அந்தத் தற்கொலைக்குச் சமானமான எண்ணங்களின் பிடியினின்று விலகாத வர்கள் எத்தனையோ பேர்... அதில் முதலியாரும் அய்யங்காரும் கடலிலே சிறு துரும்புகள்போல...!

வசவு மாரிகளைப் பொழிந்த பிறகு வீட்டிற்குள் சென்றார் முதலியார். காலிலே காகிதமொன்று தட்டுப் பட்டது. அதை எடுத்துப் பார்த்தார்...

"நல்ல இமயம் நலங்கொழிக்கும் கங்கை நதி
வெல்லத் தமிழ் நாட்டின் மேன்மைப் பொதிய மலை.
தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன் மரங்கள்
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன ?
முப்பது முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன ?
மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்றே (நாடு) உயர்வதென்றே நானறியேன் ?

என்ற எவனோ ஒரு ஏழைக் கவியின் இதயக் குமுறலின் வரிவடிவை அத் தாளில் கண்டார்; படித்து விட்டுத் தலை நிமிர்ந்தார்; எதிரே சுவரிலே மாட்டி யிருந்த உத்தமர் காந்தியடிகளின் படம் அவரை நோக்கித் தன் பொக்கை வாய் கொண்டு புன்னகை பூத்தது. ஆதி சேஷன், பெருந்திருவடி, மருதய்யன்— இவர்களை ஒரே இனமாகக் காண வேண்டுமென்று எண்ணிய அவ்வுத்த மரின் எண்ணம் வீண் கனவு தானா?


"கலைக் கதிர்"
மாத வெளியீடு

| செந்தமிழுக்குத் தொண்டு | பயன்மிக்க கட்டுரைகள் |
| --- | --- |
| சிந்தனைக்கு நல்விருந்து | சுவைமலிந்த கற்பனைகள் |

முழுவதும் கிளேஸ் காகிதம்.

சந்தா விபரம்

| வெளி நாடு | உள் நாடு |
| --- | --- |
| ஆண்டுச் சந்தா ரூ. 9. | ஆண்டுச் சந்தா ரூ. 6. |
| தனிப் பிரதி அணா. 12. | தனிப் பிரதி அணா. 8. |

"கலைக் கதிர்"
பூளைமேடு போஸ்ட், கோவை.

# பூகோளமும் வரலாறும்

திரு. ஜியார்ஜ் குரியன், B.A., Bsc. (Lond); Ph.D. (Lond.)
சென்னை சர்வ கலாசாலைப் பூகோளப் பேராசிரியர்.
(மொழி பெயர்ப்பு)

மலைகளும் கணவாய்களும் நாடுகளின் வரலாற்றை எவ்விதம் பாதிக்கின்றன என்பதை வரலாற்று நூல்கள் விளம்புகின்றன. ஆனால் பிற சூழ்நிலைகள் – தட்ப வெப்பம் முதலியன – வரலாற்றில் எவ்வளவு முக்கியம் என்பதை அறியச் சற்று ஆழ்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. ஒரு சிலரே இவ்வழியில் முயன்றிருக்கின்றனர். கணவாய்கள், கடற்கரைகள், முதலியவற்றின் பலா பலன்களைப் போல், சூழ்நிலையின் பலா பலன்கள் எளிதில் புலப்படுவதில்லை. ஆயினும் ஆய்ந்தவர்களுக்குப் பெரும் உண்மைகள் புலப்படுகின்றன. உதாரணமாக, திபெத் மலைப் பிரதேசத்தைச் சுற்றிலும் அதற்கு முற்றிலும் மாறுபட்ட தன்மையுடைய பிரதேசங்கள் காணப்படுகின்றன. தென் மேற்கிலும் தென் கிழக்கிலும் பருவக் காற்று மழையால் வளம் பெறும் நாடுகள் உள்ளன. இவைகளுக்கப்பால் பாலைவனமும், அதற்கப்பால் பெரிய புல்வெளி (Steppes) ஒன்று கிழக்கே மஞ்சூரியாவிலிருந்து மேற்கே ருமேனியா, ஹங்கேரி, வரையிலும் வியாபித்திருக்கின்றது. இந்தியா, சைனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் வளமான பயிர் முறை வளர்ச்சி இந்தப் பருவக்காற்று தரும் மழையால் தான் சாத்தியமாகிறது. இதன் பயனைத்தான் உலக மக்களில் பாதி இப்பிரதேசத்தில் நெருக்கமுற்று வதிந்து வாழ முடிகிறது.

ஆனால் மத்திய ஆசியாவின் புல்வெளியைப் பாருங்கள். அது அநாகரிக நிலையிலேயே இன்னும் இருக்கிறது. குளிர்காலம் மிகவும் கடுமையாக இருப்பதால் இங்கு ஆழ்ந்த பயிர் செய்ய முடிவதில்லை. பாலைப் பிரதேசத்தில் மலை ஓரத்தில் உள்ள பாலைத் திடல்களில் தான் நீர்வசதி ஏற்பட்டு பயிர்த்

தொழில் காணப்படுகிறது; பிற இடங்களிலெல்லாம் சூழ்நிலை மேய்ப்புத் தொழிலுக்கு மட்டுமே வசதி அளித்திருக்கிறது. ஆகவே குதிரை முதலிய பிராணிகளோடு இயங்கும் மக்களின் முக்கியமான வாழிடமாக இப்பிரதேசங்கள் இருந்து வந்திருக்கின்றன. இவர்கள் சிறு சிறு குழுவினராகப் பலவிடங்களிலும் வாழ்கின்றனர். உணவு ஒரே இடத்தில் பயிர் செய்யச் சூழ்நிலை உதவாதபடியால் உணவைத் தேடி நகர்ந்தபடியே இருக்க வேண்டியிருக்கிறது. இவ்வகையில் முன் சென்ற அச்சமற்ற ஆளோ குழுவோ அப்பிரதேசத்தில் தலைமை நிலையை அடைவது இயற்கை அன்றோ? இம்மாதிரி கஷ்ட சீவனம் நடத்திய புல்வெளி மக்களிடையில் தான் உலக வரலாற்றில் சிறப்புப் பெற்ற பெரும் வீரர்கள் தோன்றியிருக்கின்றார்கள். உதாரணமாகச் செஞ்சிஷ் கானையும், தாமுர்லனையும் கூறலாம். புல்வெளியாகிய சூழ்நிலையால் ஏற்பட்ட மனப்பான்மையே, கடின வாழ்க்கை முறையே இவர்களின் தன்மைக்கும் திறமைக்கும் காரணங்களாகும்.

இப்படியாக அங்குமிங்கும் தனித்தியங்கிய மேய்ப்பாளர்கள் தான் உலகில் தலை நிலையை அடைந்திருககின்றார்கள் என்பது வரலாற்று உண்மை. பல கோடியாக மலிந்த தென்கிழக்கு ஆசிய குடியான மக்களிடையில் இத்துணைத் தலைவர்கள் தோன்றக் காண்கிலம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரை இந்தியாவை ஆண்ட முகலாயரும் இந்த மேய்ப்புக் குழுவினர் ஒருவரைச் சார்ந்தவரே. ஆப்கனிஸ்தானத்தில் ஓர் ஆழ்ந்த சிக்கலான பள்ளத்தாக்கு ஒன்றிலிருந்து வெளி ஏறியவர்கள். அவ்விடத்திய கட்டாந்தரையில் போதுமான உணவு கிடைப்பதே அருமையாக இருந்தது. அங்கிருந்து கீழே சமவெளிகளை நோக்கியபோது, அவைகளின் வளம் கண்களைக் கவர்ந்து கொள்ளையடிக்கத் தூண்டியது. உண்மையில் வெளிப்பிரதேசத்து மக்கள் செல்வத்தில் திளைத்து சாதுவானவர்களாக இருந்தனர். எனவே மலைநாட்டார் இவர்களைத் தாக்கி அடிக்கடி கொள்ளை அடிப்பதையே தொழிலாகவும், பொழுது போக்காகவும் கொண்டனர். இப்படிப்பட்ட நிலையிலிருந்து முன்னேறியவர்களே முகலாயரும்.

மற்றொருவகை உதாரணமும் சூழ்நிலையின் செல்வாக்கைப் புலப்படுத்தக் கூறலாம். எப்படி மதக் கொள்கைகள் வரலாற்றை ஓரளவு நிர்ணயிக்கின்றன என்பதை உலகில் பல இடங்களில் கண்டுள்ளோம். ஆனால் மதக் கொள்கைகளே பூகோளநிலையால் நிர்ணயிக்கப்படுகின்றன. இஸ்லாமும் கிருஸ்துவமும் நரகத்தைப் பெருந் தணல் வீசும் கடும் சுரங்களாகக் கருதுவதேன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? எதிர்காலத்திய இன்னல்களைச் சித்தரிக்க முயன்ற மதாசிரியனுடைய சிருஷ்டி நரகம். காணக் கூடாத கருத்துக்கப்பாற் பட்ட ஒன்றைக் கருத்துள் இருத்தவேண்டின் கண்டறிந்த ஒன்றோடு ஒப்புமை செய்து உருவம் கொடுப்பது போல், விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டை எழுதிய ஹீப்ரு ஆசிரியன், தன் அண்மையில் இருந்த பாலைவனத்தின் வரட்சி, வெப்பம் முதலியவற்றினால் அருந்துயர் பட்டவனாதலால், சுரத்திலும் கொடிய நிலையில்லை என்று உறுதிசெய்து தான் அஞ்சும்

நரகம் சுரத்தைப் போன்று கொடுந்தணல் வீசுமிடம் என்று வருணித்தான். இதேபோல், கிருஸ்துவம் பரவுமுன் இருந்த ஸ்காண்டினேவிய மக்கள் தங்கள் பனிகவிந்த சூழ்நிலைக் கேற்ப, நரகத்தைப் பனியும் பனிக்கட்டியும் மூடியவிடமாகக் கருதினர். குளிரில் வதைந்த நார்சு மனிதனுக்குக் கிருஸ்துவம் கூறும் வெவ்விய நரகம் விரும்பத்தக்க இடமல்லவா? இது சம்பந்தமாக ஒரு கதை உண்டு. கிருஸ்துவத்தைப் பரப்ப முயன்றபோது ஒருபாதிரி, நரகத்தை ஒரு வெப்பமான இடமாக வருணித்து, தீயனசெய்தோர் புகுமிடம் அது என்று கூறினர். அதைக் கேட்டதும் குளிரில் நடுங்கிய உடலவன் ஒருவன் "நீர் சொல்லும் அந்த இனிய, வெப்பமான நரகத்துக்கே போக நாங்கள் எல்லோரும் விரும்பிகிறோம். ஆனல் அதை அடைய கேவலை நடையும், கொலையும், பிறதீங்கும் அவசியமா" என்று கேட்டான்! இதனல் மதங் கூறும் நலமும் துன்பமும் பூகோள ரீதியாகவே பொருள் கொடுக்கப் படுகிறது என்பது புலனுகிறது.

மதக் கொள்கைக்கும் சூழ்நிலைக்கும் உள்ள தொடர்பை பௌத்தம் நன்கு காட்டுகிறது. இது பிறந்த இடம் வட இந்திய உஷ்ண வெளிப்பிரதேசம். ஆகவே அம்மதம் நரகத்தைத் தணல் சூழிடமாக வருணித்தது. ஆனல் பிற்காலத்தில் பௌத்தம் திபெத்துள் பரவியபோது, அங்குக் குளிரால் நலிந்த மக்களுக்கு வெப்பமான நரகம் பயங்கரமாகத் தோன்றவில்லை. ஆகவே இந்து மதத்துக் கொப்ப, நரகத்தில் ஆறுதரம் வகுக்கப்பட்டு யாவற்றிலும் கொடியது கடுங் குளிரானது என்று விளக்கப்பட்டது.

சில சமயங்களில் மதக் கொள்கைகள் பிறந்த நாட்டுக்கு வெகு தொலைவில் சென்று பரவுகின்றன. அப்போது அவை நாட்டின் சூழ்நிலைக்குப் பொருத்தமற்றனவாகத் தோன்றி, தம் பிறப்பிடத்தைப் புலப்படுத்தி விடுகின்றன. மதக்கொள்கைகளைப்போல் தாய் நாட்டின் சூழ்நிலை பற்றிய உண்மை விளம்பி எதுவும் இல்லை என்றே சொல்லலாம். குர் ஆன் அரேபியா பாலைப் பிரதேசத்தின் நடுவே முகம்மதுவால் எழுதப் பட்டது. ஆகவே அவ்வேதம் மோக்ஷத்தைக் குளிர்ந்த நிழலும், இன்னுசையும் நிறைந்த இடமாக வருணிக்கிறது. ஆனல் பிற சூழ்நிலையிலுள்ள மகம்மதியனும் குர் ஆனில் கூறியது போல் நரகம் வெப்பமான இடம் என்று எண்ணுகிருன்.

இன்னும் ஓர் எடுத்துக்காட்டு விவிலிய நூலிலிருந்தே கொடுக்கலாம். ஏசுநாதரின் அடியார்கள் கலியாவைச் சேர்ந்த செம்படவர்கள். அவரது ஊரான நாஸரத்திலிருந்து ஏன் அடியார்கள் கிளம்பவில்லை? காரணம் பூகோளம் தருகிறது. நாஸரத் மக்கள் நல்ல உழவர்கள். பிற நாட்டுழவரைப் போல், இவர்களும் புதுமை விரும்பாதவர்; தம் நிலவளத்திலேயே கண்ணுங் கருத்துமாய் வாழ்க்கையை நடுத்துபவர். பலன்தரும் உழைப்பிலேயே வாழ்க்கையைக் கண்ட அவர்களுக்கு, இருப்பிடம் விட்டு, எந்த உன்னதத் தலைவன் பின்னும் செல்ல முடியவில்லை. ஆனல் கலிலிச் செம்படவர் வாழ்க்கை வேறுவிதமானது. உணவு தேடித்திரியும் நிர்ப்பந்தம் உடையவர். மீன் பிடிப்பு ஒரு சமயம் அற்பமாயும் ஒருசமயம் நிறைவாகவும் இருக்கும்; அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது எனலாம்.

சில நாட்களிலாவது, நிறைய மீன் கிடைத்தபோது, ஓய்வெடுத்து, நிம்மதியாய் வேறு விஷயங்களில் அறிவைச் செலுத்தக்கூடும். ஏசுவின் அடியார்கள் பணியாற்ற முடியும்.

மதங்களுக்குள்ளே, பிறந்த நாட்டின் சூழ்நிலைக்கேற்ப, வேறுபாடுகள் காணப்படுகின்றன. பாலைப்பிரதேசங்களில் தோன்றிய யூதம், கிருஸ்துவம், இஸ்லாம், இவைகள் விதிக்கும் வாழ்க்கை முறை, பரப்பும் கொள்கை வேறு; வளமான நன்செய் வெளிப்பிரதேசங்களில் தோன்றிய ஹிந்து, பௌத்த மதங்களின் வாழ்க்கை முறையும் கொள்கைகளும் வேறு; அதிக உஷ்ணமும் ஈரப்பதவாயுவும் நிறைந்த கங்கைச் சமவெளியில் மக்கள் கொஞ்சம் சோம்பலுடைவர்களாகக் காணப்படுகின்றனர். மக்கள் மனம் நிர்வாணத்தையே மோட்சநிலையாகக் கருதி வந்திருக்கிறது. விதியிலும் அஹிம்சையிலும் நம்பிக்கையும், வறுமைக்கும் பிச்சை வாழ்வுக்கும் மரியாதையும் அடிப்படையில் சூழ்நிலையின் விளைவுகளே.

இங்குக் கூறியபடி மத விஷயத்தில் மாத்திரமன்றி, மனிதனுடைய பிறகாரியங்களிலும் பூகோளச் சூழல் தன் சக்தியைக் காட்டுகிறது. மனிதன் வரலாற்றில், வாழ்க்கையில் எந்தக்காரியத்துக்கும் இச்சூழ்நிலையின் உதவியோ எதிர்ப்போ இருக்கவே செய்கிறது. பூகோள வாயிலாகவே வரலாற்றின் நிகழ்ச்சிகளை விளக்கமுடியும். இன்றேல் வரலாறு சிறுகதைத் தொடராக, சில வீரர் வாழக்கை விளக்கமாக, ஒரு இனிய ஆனால் தொடர்பற்ற, கதம்பமாகவே இருக்கும்.

---

இந்தியா மதப்பற்றைக் குறைத்து விஞ்ஞானத்தின்பால் கவனத்தைச் செலுத்தவேண்டும். சமூக வழக்கங்களையும் தனிப்பட்ட கொள்கைகளையும் அறவே நீக்குதல் வேண்டும். இவ்வழக்கங்களும் கொள்கைகளும் நாட்டின் உணர்ச்சியையும் வளர்ச்சியையும் குன்றச் செய்வனவாகும். அன்றியும் இவை நாட்டின் சிறைகூடமுமாகும்.

— பண்டித நேரு.

---

# திருக்குறளும் அதன் உரைகளும்

திரு. அ. இராமசாமிக்கவுண்டர், M. A., L. T.

★

இற்றைக்குச் சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறள் எழுதப்பட்டது என்பது பொங்கல் இதழில் விளக்கப்பட்டது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்ற பதின்மர் திருக்குறளுக்கு உரை செய்ததாகச் சொல்லப் படுகின்றது. இவற்றுள் இப்போது கிடைப்பன மணக்குடவர் உரை, பரிமேலழகர் உரை என்ற இரண்டேயாம். பிறவெலாம் பல காரணங்களால் அழிந்து போனமையால் அவற்றைப் பற்றி நாம் ஒன்றும் அறிய முடியவில்லை.

மணக்குடவர் உரையைப் பரிமேலழகர் பலவிடங்களில் மறுத்துள்ளார். ஆதலின் காலத்தால் மணக்குடவர் முந்தியவர், பரிமேலழகர் பிந்தியவர் என்பது தெரியக் கிடக்கிறது. பரிமேலழகர் கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதற்குச் சான்றுகள் உள.

மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகாரவைப்பு முறையில் சிறிதும், குறள் வைப்புமுறையிற் பெரிதும் முரண்படுகின்றனர். பல குறட்பாக்களுக்குப் பாட வேறுபாடுகளும் காணப்படுகின்றன. மணக்குடவர் உரை சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாயும், எளிய நடையினதாயும், சைனமதச் சார்புடையதாயும் உள்ளது. பரிமேலழகர் உரையோ புலமை சான்றதாயும், இனிய நடையினதாயும், ஆரியமதச் சார்புடையதாயும் காணப்படுகிறது.

அன்னிய மதமும் அன்னிய ஆதிக்கமும் தென்னாட்டில் நுழைவதற்கு முந்தியே தமிழ்மதச் சார்புடைய திருக்குறளுரைகள் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் தமிழர்கள் பிரமாண நூல்களாகவே கருதி வந்தனர். ஆனால் ஜைனர்கள் தென்னாடு போந்து ஜைன மதத்தைப் பரப்பி அரசியலாதிக்கம் அடைந்தபின்னர் திருக்குறளையும் ஜைன நூலாகக் காட்டும் கருத்துடன் அதற்கு வேற்றுரை வகுத்தனர். இதனால் பழைய தமிழ் உரைகள் போற்றுவாரற்று மறைந்து போயின. சில நூற்றாண்களுக்குப் பின்னர் ஜைனமதமும் ஜைன ஆதிக்கமும் முற்றிலும் விரட்டப்பட்டு ஆரியமதமும் ஆரிய வர்திக்கமும் தமிழ்நாட்டில் தழைக்கலாயின. அப்போது தொல்காப்பியத்துக்கும், திருக்குறளுக்கும் ஆரிய மரபில் உரையெழுதிப் பழைய உரைகளைக் கட்டுப் பாட்டுடன் அழித்துவிட்டனர். தமிழன் புண்ணியத்தால் மணக்குடவருரைமட்டும் தப்பிப் பிழைத்தது.

காலஞ்சென்ற தறுகணாளர் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் 1917-ஆம் ஆண்டில் மணக்குடவர் உரையை முதன் முதலில் பதிப்பித்தார். இவர் தம் சேவை தமிழ் மக்களால் என்றும் மறக்கற் பாலதன்று. மணக்குடவர் உரையே சிறிய உரையாக இருந்தும் அது பண்டிதர்பாலும் பாமரரிடையும் இன்னும் பரவாமல் இருப்பது பெரிதும் வருந்தத் தக்கது.

ஒரே பகவத் கீதைக்கு மூன்று மதக் குருக்கள் மூன்று உரைகளைக் கண்டது போலவே, திருக்குறளுக்கும் வெவ்வேறு மதத்தினர் வெவ்வேறு உரையைத் தந்தனர்.

"நூலா சிரியர் கருத்தினை நோக்காது
ஒருசூத் திரத்திற் கொவ்வோ ராசிரியர்
ஒவ்வொரு மதமாய் உரையுரைக் குவரே
அவ்வுரை யதனுள் அடுத்த வாசகங் கட்கு
அவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
கொண்ட பொருள்படப் பொருள் கூறுவரே"
(இலக்கணக் கொத்து)

இந்திய மக்களில் பெரும்பாலோர் பழமை விரும்பிகள். தமது பண்டை நூல்களில் கூறப்படாத புதுக் கருத்துக்களையும் புதுக் கொள்கைகளையும் எத்துணைச் சிறந்தனவாயினும் பொது மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆரியருக்குப் பகவத் கீதையே பிரமாண நூலாகும். சங்கராச்சாரியார், மத்வாச்சாரியார், இராமாநுஜாச்சாரியார் ஆகிய தென்னாட்டு மூவரும் தத்தம் மாறுபட்ட மதக்கொள்கைகளைப் பொருத்திக் காட்டவே பகவத்கீதைக்கு உரை வகுத்தார்கள். "தத்துவமசி" என்ற ஒரு சொற்றொடருக்கு மூவரும் மூவிதமாகப் பொருள் கூறினர். இவர் தம் மூன்று மதங்களும் இன்றும் வழக்கில் இருக்கின்றன. பகவத் கீதைக்கு முரண்பட்டிருந்தால் இவற்றுள் ஒன்றாவது இந்நாட்டில் நிலைத்திருக்க முடியாது.

இதைப்போலவே, தமிழருக்கு மறையாக இருந்துவரும் நூல் திருக்குறளேயாகும். ஆரியத்தையும், ஜைனத்தையும் தமிழர்கள் முதலில் எதிர்த்தார்களாதலால் புதிதாக வந்தவர்கள் தமது மதக்கொள்கைகளைத் திருக்குறளில் பொருத்திக் காட்டியும் அவ்வாறே உரையெழுதியும் தமிழரையேமாற்றினர். தமிழர்களும் அடிமையில் ஆழ்ந்து, மடமையைப் பெருக்கி, கடமையை மறந்து நெடுங்காலம் துயின்றனர். பொய்யுரையெல்லாம் சொல்வன்மையால் மெய்யேபோல் நம்பப்பட்டுவந்தன. சிலவாண்டுகட்கு முன்புதான் தமிழின் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியது. வெற்றிக்குரிய அடையாளங்களும் காணப்பட்டன. ஆனால் தமிழ்மொழிக்கு மீண்டும் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் இறப்பதா அல்லது இருப்பதா என்பது ஐந்தாண்டுக்குள் தெரியவரும்.

திருக்குறளை ஒரு வழிநூல் என்றே பரிமேலழகர் நம்பினார். சுக்கிர நீதி, அர்த்த சாத்திரம், காமந்தகம், மநுஸ்மிருதி முதலிய சமஸ்கிருத நூல்களை நன்கு படித்துணர்ந்து அந்த நூலாசிரியர் கூறியவாறே திருவள்ளுவரும் கூறினார் என்று பரிமேலழகர் சிலவிடங்களில் மறைவாகவும் பலவிடங்களில் வெளிப்படையாகவும் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றறிவும் கால ஆராய்ச்சியும் இல்லாத பழைய உரையாசிரியர்கள் எல்லோரும் இந்த வகையில் குற்றவாளிகளே. சிவஞானபோதமே ஒரு சமஸ்கிருத நூலின் மொழிபெயர்ப்பென்று தமிழ்க்கடலன்ன சிவஞான முனிவர் கூறினரெனின், பரிமேலழகர் கூறியது வியப்பன்றே. சமஸ்கிருதம் அனாதி மொழியெனவும் அதனுடன் தொடர்புடைமையே தெய்வீகம் எனவும் நம்பியிருந்த இவர்களைக் காய்வதிலோ வைவதிலோ பயனில்லை. இவரது தவறுகளைக் களைந்து உண்மையை நாட்டுதலே நமது கடமையாகும். பரிமேலழகரது உரைக்குப் பழுது சொல்

ஓதல் அடாத செயலெனப் புலவர் பலர் எண்ணிய காலமு முண்டு. ஆனால் அக் காலம் மலையேறி விட்டது. மணக்குடவர் உரையை மாற்றியும், திருத்தியும் எழுதப் பரிமேலழகருக்கு உரிமை உண்டெனின், பரிமேலழகர் உரையைக் கண்டிக்கவும், களையவும் நமக்கும் உரிமை யுண்டென்பதை யாவரே மறுக்க வல்லார்?

பரிமேலழகர் சருக்கிய இடங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்றினை மட்டும் இக்கட்டுரையில் குறிப்பிடுவாம்.

''மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்.''

என்பது ஒரு குறள். இது ஒழுக்க முடைமை என்ற அதிகாரத்துள்ளது. இதற்குப் பரிமேலழகரது உரை பின் வருமாறு;

''கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணம் கெடாமையால் பின்னும் அஃதோதிக் கொள்ளலாம். அந்தணனது உயர்ந்த வருணம் தன் ஒழுக்கம் குன்றக்கெடும்.

மறந்தவழி இழிகுலத்தனாமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தால், மறப்பினும் என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்''

இவ்வுரையில் வேதம், வருணாசிரமம் பிராமணரது உயர்வு முதலிய ஆரியக் கருத்துக்கள் தாராளமாகப் புகுத்தப் பட்டுள்ளன. பார்ப்பான் என்ற சொல்லுக்குப் பிராமணன் எனவும், ஓதல் என்ற சொல்லுக்கு வேதம் ஓதல் எனவும் பரிமேலழகர் வலிந்து பொருள் கொண்டார். பார்ப்பான் என்ற சொல் தொல்காப்பியத்தில் பல விடங்களில் காணப்படினும் அது பிராமணன் என்ற பொருளில் ஆளப்படவேயில்லை.

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய''

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திலும்

அந்தணர் என்போர் அறவோர்மற்
றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''.

என்ற திருக்குறட் பாவிலும் அந்தணர் என்ற சொல் துறவிகள் என்ற பொருளிலேயே ஆளப்பட்டிருக்க, பார்ப்பான் அந்தணன், பிராமணன் என்ற மூன்று சொற்களுக்கும் பரிமேலழகர் ஒரே பொருளைக் கற்பித்துத் தமது ஆரிய மதத்தை நாட்டுகிறார்.

இனி, மணக்குடவர் உரையை நோக்குவாம்:— ''நூல்களைக் கற்பவன் அவற்றை மறந்தானாயினும் பின்னும் கற்றுக் கொள்ளலாம். ஒழுக்கம் குறையுமாயின் அவனது பிறப்பின் பயன் கெடும்.''

இதில் பார்ப்பான் என்ற சொல்லுக்கு நூல்களைப் பார்ப்பான் எனவும், பிறப்பு என்பதற்குப் பிறப்பின் பயன் எனவும் உரைவகுத்தது பெரிதும் பாராட்டத்தக்கது.


# 'கலைக்கதிர்'

**ஆண்டுச் சந்தா ரூ. 6.**

**கலையின் களஞ்சியம்** **சிந்தனைச் செல்வம்**

# பரிணாமக் காரணம்

திரு. சி. வேலாயுதம், M.A.

இதுவரையில் பரிணாமத்தின் உண்மையை மெய்ப்பிக்கப் பல சான்றுகள் தந்தோம். ஆனால் பரிணாமம் என ஒன்று இயற்கையில் ஏன் நடைபெறுகிறது. எப்படி நடைபெறுகிறது என்பதைப் பற்றிக் கூறவில்லை. ஆகவே இங்குப் பரிணாம காரணங் கூறுவோம்.

பரிணாமத்துக்குப் பலவித விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சுருக்கமாக இங்குக் கொடுக்கிறோம். அவைகளை யார் யார் தந்தது என்பது பின் விளக்கப்படும்.

பரிணாமத்துக்கு அடிப்படையான காரணம் அம்சவேறுபாடு (Variation). பரிணாமம் ஆரம்பத்திலிருந்தே இக் காரணம் வேலைசெய்திருக்கிறது. வேறுபடுதல் என்றால் என்ன? எந்த இரண்டு ஜீவன்களும், அல்லது அவைகளின் எந்த அங்கங்களும் ஒரேமாதிரி இருப்பதில்லை. எவ்வளவு நெருங்கிய உறவினவாய் இருந்தபோதிலும் அவைகளில் வேறுபாடு காணப்படுகிறது. இது நமக்குக் கண்கூடான விஷயம். எந்த இரண்டு மரமோ, மனிதனோ, செடியோ ஒரேமாதிரி இருப்பதில்லை. இந்தமாதிரி வேறுபாடுதான் பரிணாமப் போக்குக்குப்படி வேறுபாட்டின் வழியே பரிணாமம் நடக்கும். வேறுபாடின்றேல் பரிணாமம் இல்லை. ஆனால் வேறுபாடு ஏன் ஏற்படுகிறது, எப்படி ஏற்படுகிறது, என்னென்ன வேறுபாடுகள் சாத்தியம், எவ்வளவுதூரம் சாத்தியம் என்பன மிகச் சிக்கலான வினாக்கள். பின்னர்க் கவனிப்போம்.

2 பாரம்பரியம் (heredity) பரிணாம நிகழ்ச்சிக்கு மற்றொரு காரணம். மூதாதையின் அம்சங்கள் சந்ததிக்கும் பொருந்துவதைப் பாரம்பரியம் என்று இங்கே குறிப்பிடப்படுகிறது. ஒரு வேறுபாடு ஒரு தனி நபரில் தோன்றினால் பாரம்பரியத்தால்தான் அது ஒரு இனத்துக்கே உரிய தனிப் பண்பாக, அவ்வினத்தைப் பிரித்துக் காட்டும் பண்பாக நிலைபெறுகிறது. பாரம்பரிய விஷயத்திலும் சிக்கல்கள் பல இருக்கின்றன. எவ்வெவ் அம்சங்கள் பாரம்பரியமாய்ச் சந்ததிக்குப் பொருந்தும் என்பதில் ஓயாத விவாதம் இன்னும் நடந்து வருகிறது.

3 கலப்பின்மை :— மேற்கண்டபடி பரம்பரையாய் ஒரு வேறுபாடு நிலைபெறவேண்டுமானால் வேறுபாட்டில் ஒத்த நபர்களுள்தான் புணர்ச்சிக் கலப்பு ஏற்படவிடலாமே ஒழிய பிற நபர்களுடன் கலப்பேற்பட்டால், வேறுபாடு மறைந்தொழியும். ஆகையால் தனிப்பண்புடையன தனித்திருத்தல் (segreation or isolation) அவசியம். இவ்வகைக் கலப்பின்மை இரண்டு வகையில் நேரலாம். i உடற்

கூறு வித்யாசத்தால் கலப்புக் கூடாதாக லாம். உடலமைப்பு புணர்ச்சிக்குத் தடையாக இருக்கலாம் அல்லது கருப் பொருள் வேற்றுமையால் கருதரித்தல் முடியாதாகலாம். கரு தரித்த போதி லும் பிறவி அலியாக முடியலாம். ii மனம் ஒவ்வாமையாலும் கலப்பின்மை சாத்தியமாகிறது. மனிதருக்குள் சில வகுப்பினர் ஏதோ ஒரு வேற்றுமையை முன்னிட்டு பிற வகுப்பினருடன் கலக்க விரும்பாமல் இனக்கலப்பின்றி இருக் கின்றது கண்கூடு. ஆனால் பிணி உல கில் மன ஒவ்வாமை எவ்வளவு தூரம் கலப்புக்குத் தடையாயிருக்கிறது என்று சொல்ல வழியில்லை.

மேற்கூறிய மூன்றும் பரிணாமத் துக்கு இன்றியமையாதன என்று பரி ணாம ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒப்பியவை. ஆனால் இன்னும் சில காரணங்களைச் சில ஆராயச்சியாளர்கள் கூறுகின்றனர். அவைகளை யாவரும் ஒப்புக்கொள்வதில்லை. அவையாவன:

4) இயற்கைத் தேர்வு (natural selection). இதையே பரிணாமத்துக்கு அடிப்படை என்று டார்வின் கூறினார். அதாவது இயற்கையில் பல்லுயிரும் சூழலில் உள்ள வழிகளைக் கொண்டு தாங்கள் வாழ முயற்சிக்கையில் அவை களுக்குள் போட்டி ஏற்பட்டு, சூழலுக் கேற்ற அம்சமுடையனவே வெற்றி பெற்று நிலைபெற்று சந்ததியைப் பெருக்குகின்றன. பிற அழிந் தொழிகின்றன. இத்தேர்வு பல வழி களில் நடைபெறுகிறது. பின்னர்க் காண்போம்.

அநேக ஆசிரியர்கள் இவ்வியற்கைத் தேர்வை முக்கியமாகக் கருதவில்லை. தாவரவியல் ஆசிரியர் ஹ்யூகோ டி வ்ரீஸ் என்பவர் ஒரு தாவரத்தில் திடீர் மாறுதல் (mutation) ஏற்படலாம் என்றும், அது ஒரு தன் இனத்துக்கு மூலமாகலாம் என்றும் கருதினார். இதை ஒப்புக்கொண்டால் திடீர் திடீ ரெனத் தோன்றும் மாறுபாடுகளால் பரிணாமத்தில் படிப்படியான தொடர்பு இருக்கும் என்று எதிர்பார்க்கவேண்டிய தில்லை.

வாழ்க்கைப் போட்டியில் பயன்படு பனவே இயற்கைத் தேர்வில் நிலைபெ றும் வேறுபாடுகள். அப்படியாயின் போட்டியில் பயன்படாத வேறுபாடு களும் பல நிலைபெறக் காண்பதற்குக் காரணம் என்ன என்ற வினாவெழும். இவைகளை விளக்க டார்வின் புணர்ச் சிப் போட்டியில் தேர்வு (sexual election) என்ற ஒன்றைத் தனிக் காரணமாகக் கூறினார். மனிதன் தாவரங்களையும் பிராணிகளையும் ஒட் டுப் பயிர் செய்து புது இனங்கள் தோற்றுவிப்பதும் மேல் பரிணாமத் துக்கு அடிப்படையாகுமாதலால் அதை விளக்க செயற்கைத் தேர்வு (artificial selection) என்ற ஒன் றையும் பரிணாம காரணமாகக் கொண் டார்.

இப்படியாய் பரிணாம நிகழ்ச்சியை விளக்கப் பலர் பல கொள்கைகளைத் தந்தனர். பரிணாமத்தை நினைக்கும் போது டார்வின் நினைவே பலருக்கும் வருகிறது. ஆயினும் உண்மையில், அவருக்கு முன்பும் பின்பும் மிகப்பலர் பரிணாமத்தை யூகித்தும் விளக்கியும் வந்திருக்கின்றனர். சென்ற 2400 வருடங்களாக இவ்விஷயம் மனிதன் மனதில் ஆராய்ச்சியைக் கிளப்பி வந் திருக்கிறது. பரிணாமக்கொள்கையின் மூல வேர்களைக் கிரேக்காது நூல்களில் காணலாம். பிற்காலத்தில் விவிலிய நூலில் (Bible) வெளிவந்த கொள்கை களைவிட, அவர்களது முடிவுகள் உண் மைக் கொத்தனவாயிருந்தன. கிரேக் கர் புவனத்தை நிரந்தர சலனம் (motion) உடையதாகக் கருதினர். ஒன்று ஒன்றுதல் என்பது அவர்களது அடிப்படையான கொள்கைகளில் ஒன்று. அனக்சிமாண்டர் என்பார் (570 கி. மு.) உயிரிலியிலிருந்து உயிரி தோன்றியது என்ற கொள்கையுடை யார். எம்பிடாக்ளிஸ் என்பார் (450

கி. மு.) வாழ்க்கைப் போட்டியில் எஞ்சுதல் (survivel) என்ற கருத்தை அறிந்திருந்தார். இவரைப் பரிணும இயலின் தந்தை என்றும் கூறலாம். இவ்வகையில் எஞ்சுதல் தற்செயலாக நேரலாம் என்பது அவரது தனிப்பட்ட சித்தாந்தம். ஆனல் நெருங்கிய உறவுடைய பிராணிகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பரிணமித்துச் சிறப்பியல்படைந்தன என்று அவர் கூறவில்லை. இயற்கை தகுதியற்றவைகளை அழித்து, தகுதியுடையவற்றை நிலைபெறச் செய்கிறது என்ருர். டெமாக்ரிடஸ் என்பவர் (400 கி. மு.) தனித்தனி உறுப்புகளும் சூழ்நிலைக் கேற்பப் பரிணமிக்கும் என்ற உண்மையைக் கண்டிருந்தார். எல்லாம் அறிந்த அறிவாளி அரிஸ்டாடில் யாவும் தனித்தனியே படைக்கப் பட்டன என்ற கொள்கையை ஏற்கவில்லை. உயிரிலியிருந்து உயிர் தோன்றியதென்று ஒப்புக்கொண்டார். ஆனல் ஏதோ ஒரு அறிவுடைய சக்தி பிராணிகள் பரிணமத்துக்குக் காரணமாக நிற்கிறது என்று நம்பினர்.

ரோம் நாட்டிலும் லுக்ரீஷியஸ் என்ற அறிவாளி (50. கி. மு.) கிரேக்க தத்துவத்தைப் பின்பற்றினவராய்ப் புவனத்தின் இயற்கை இடைவிடா மாறுதல் என்றும், வாழ்க்கைப் போட்டி திறனுடைய வற்றையே எஞ்சவிடும் என்றும், ஐதிகத்துக்குமாருக, மனிதன் பூர்வீக மிலேச்ச நிலையிலிருந்து மேம்பட்டுக் கொண்டே வருகிருன் என்றும் கூறினர்.

ஆகவே கிரேக்க, ரோம அறிஞர்கள் முடிவுகள் கூரிய மெய்யறிவுடன் காணும் தற்கால முடிபுகளுக்கு ஒத்திருந்தன. ஆனல் இவ்வகையான அறிவுடை ஆய்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தது விவிலிய நூல். வேதத்தில் கண்டது மறக்க முடியாத உண்மை. அவ நம்பிக்கையோ, எதிர்ப்போ பாதகம், மதத்துவேஷம் எனப்பட்டது. உற்பத்தியை அறிய வேண்டுமானல் உலக விவிலியத்து சிருஷ்டி (genesis) அத்யாயத்தைப் படிக்கவேண்டும். பிறர் கூற்றெல்லாம் அறியாமை அல்லது நரகத்தில் தள்ள சைத்தான் செய்த சூது.

இந்த நிலையில் பரிணமம் பல நூற்ருண்டுகளுக்கு மக்களின் அறிவுச் சுடருக்கப்பால் இருந்து வந்தது. விவிலிய சிருஷ்டி வரலாறுக்கு முதல் எதிர்ப்பு பூவியலில் (geology) தோன்றியது. பாசில்கள் பூர்வீகத்திலிருந்த பிராணிகளைக் கண்கூடாகக் காட்டின. அவைகளை, ஆதியில் இறைவன் பெரு வெள்ளத்தால் அழித்தவற்றின் எச்சங்கள் என்றனர் விவிலிய பக்தர்கள். ஆனல் அறிவு திறம்பாத ஆய்வினர் அவை பரிணமத்தைக் காட்டுகின்றன என்று மெய்ப்பித்தனர். ஆயினும் மதத்தின் செல்வாக்கு 18-ம் நூற்ருண்டிலும் கூட உண்மையை அறிய ஒட்டாது தடுத்தது. பேரறிவாளி, தாவரவியலில் நுண்மாண் புலமையுடையவர், லின்னேஸ் கூட காலத்துக்கேற்ற கோலம் போட்டு, உயரினங்கள் ஆதியில் சிருட்டிக்கப்பட்டன என்றும் பின் இனக் கலப்பாலும், க்ஷீணத்தாலும் புது இனங்கள் தோன்றலும் மறைதலும் நடைபெற்று வந்திருக்கின்றன என்றும் கூறினர்.

தற்காலப் பரிணமக் கொள்கையின் ஆக்கத்துக்கு அடிகோலியவர் பிரஞ்சு விஞ்ஞானி பப்பன் (Buffon) என்பார் (1707–1788). அவர் காலத்திலுடு அறிவு மதத்தின் பீடையிலிருந்து விம்படவில்லை. ஆகவே அவர் படைப்பு, பரிணமம் என்ற இரண்டுக்கும் இடையில் திண்டாடினர். ஆயினும் ஓர் இனத்தின் உறுப்பில், அம்சத்தில் மாறுதல் (mutation) ஏற்படக் கூடுமென்றும், அது சூழ்நிலையால் ஏற்படுவதென்றும், அம்மாறுதல் பரம்பரைப் பண்பாக நிலைபெறும் என்றும், பரிணம முறையை விளக்கினர். மற்றும், தட்ப வெப்ப நிலையால் மக்கள் வாழ்க்கைப் பாதிக்கப்படுவது, செயற்கைத் தேர்வால் புது இனம் தோன்றுவது, இட

மாற்றத்தால் மாறுபாடு தோன்றுவது முதலிய பிற பல்விஷயங்களேயும் அவர் ஆய்ந்து எழுதியுள்ளார்.

ஆயினும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தாம் பரிணுமக் கொள்கை வலுப்பெறலாயிற்று. அதற்குக் காரணமானவர் லமார்க் என்பவர். ஆயினும் அவருக்குமுன் வழிகாட்டியாய் இருந்தவர் பிரசித்திப்பெற்ற சார்லஸ் டார்வின் உடையபாட்டன் எராஸ்மஸ் டார்வின் என்பவர் (1731-1802). வேறுபாட்டுக்குச் சூழ்நிலே நேரே காரணமாகிறதில்லே; சூழலால் உயிரினுள்ளே ஏற்படும் இச்சா கிரியை உணர்ச்சி உடலில் வேறுபாட்டை உண்டாக்கின்றன என்ருர். இவர் கொள்கைப்படி தாவர சங்கமங்கள் இரண்டிலும் உணர்ச்சிதான் வேறுபாட்டுக்கு மூலம்; பின்பு வேறுபாடு பரம்பரைப் பண்பாக நிலேபெறுகிறது. இவரது முக்கியமான முடிவு இப்படி சுயார்ஜிதமாக உண்டான அம்சம் (acquried character)பரம்பரையாகச் செல்கிறது என்பதே. வாழ்க்கைப் போட்டியையும் இவர் வற்புறுத்தினுர். அமித உயிர்ப் பெருக்கத்தைத் தடுப்பதால் அது நல்லது என்று கருதினுர். மேனேக்கி வளரும் சக்தி கடவுளால் படைப்புக்காலத்தில் கொடுக்கப் படாதென்றும், பின்னர் அவரது இடையீடின்றி, சூழ்நிலேக்கேற்ப உள்ள மாறுதல்களே மேற்கொண்டு பரிணமித்தன என்றும் இவர் நம்பினுர்.

இவருக்கும் "லமார்க்" குக்கும் (1744-1829) பொதுவில் கருத்தொற்றுமை இருக்கிறது. இருவரும் சூழ்நிலேயின் முக்யத்தை வற்புறுத்தினர். ஆனல் இவர் 'தாவரங்களேயும், கீழ்த்தர ஜீவன்களேயும் சூழல் நேரடியாகப் பாதிக்கிறது; உயர்ந்த ரகப் பிராணிகளேத்தான் உணர்ச்சி மூலம் பாதிக்கிறது, என்ருர். மார்க்கின் தலேயாய நூல் "பிராணி தத்துவம்" என்பது. 1809-ல் வெளியிடப்பட்டது. இதுவே டார்வினுடைய' இனங்களின் தோற்றம்' என்ற நூலுக்கு முன் வெளிவந்த பரிணும நூல்களுள் சிறந்தது. ஆனல் அவரது முடிவை அக்காலத்தில் ஏற்பாரில்லே. மேதாவி ஆனல் ஏழை. ஏழை சொல் அம்பலமேறுமா? அவருக்கு எதிரி, படைப்புக்கொள்கையைப் புகட்டிய புல்லறிவாளன் 'கௌவியவர்' செல்வாக்குடையவன். சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டுத் தனிமையில்இருந்தார் லமார்க். அவர் இறந்த பின்னரே அவரின் ஆய்வின் நுண்மையும் முடிவுகளின் உண்மையும் உலகம் அறிந்தது. இவைகளேப் பின்னர் கூறுவோம். உயிரினங்களின் பரிணுமத் தொடர்பை (tree of life) நன்கறிந்திருந்த முதல் அறிஞர் இவரே.

இதேகாலத்தில் ஜர்மனியில் விஞ்ஞானத்திலும் புகழ் பெற்ற புலவர் 'கிதே'வும் உயிர்களில் தொடர்ச்சியாக ஏற்படும் மாறுதல்களால் பரிணுமம் நிகழ்வதைக் கண்டார். "தாவரங்களின் உருமாற்றம்" உன்ற நூலில் (1790) ஆதியில் இலே போன்ற மூலத்திலிருந்தே தாவரங்களில் பிறஉறுப்புக்கள் தோன்றின என்று வெளியிட்டார்.

பிரான்சில் ஹிலேர் (1772-1844) என்பாரும் சூழ்நிலே ஒன்றே பரிணுமத்துக்குக் காரணம், அதுவே நேரடியாக மாறுதல்களே உண்டாக்கும் என்று எழுதினுர். இவருக்கு திடீர் மாறுதலில் நம்பிக்கை இருந்தது. இம்மாதிரி மாறுதல் (transmutation) பிண்ட நிலேயிலேயே ஏற்படுமே ஒழிய, பிறந்த பின் வளர்ச்சிக் காலத்தில் ஏற்படாது என்பது இவரது கொள்கை. இதனல் பரிணுமத்தில் இடைவிடாத தொடர்பு இருக்க வேண்டும், எதிர்பார்க்க வேண்டியதில்லே என்ற முடிவும் தொனிக்கிறது. பிற்காலத்தில் டிவ்ரீஸ் என்பவர் திடீர் மாறுதலே நம்பினுர். ஆனல் லாமார்க்குக்கு இது உடன்பாடில்லே.

பரிணும ஆராய்ச்சிக்குச் சிகரமாகக் கருதப்படுபவர் சார்லஸ் டார்வின் (1809-1882). லமார்க்கின் நூல்

வெளிவந்த ஆண்டில் இவர் தோன்றினார்! ஆனால் கொள்கை வேறு. தற்காலத்திய பூவியலுக்கு அடிகோலிய சார்லஸ் லயால் என்பவருடைய பூவியல் நூல் ஏற்கெனவே (1830) படைப்புக்கொள்கையைத் தகர்த்தெறிந்துவிட்டதால் டார்வினுடைய முடிவுகளை ஏற்க உலகம் தயாராக இருந்தது. டார்வின் எழுதிய நூலின் பெயர் 'இயற்கைத் தேர்வால் இனங்களின் உற்பத்தி'' என்பது (1859). இந்தப் பெயரே டார்வின் இயற்கைத் தேர்வையே முக்ய பரிணம காரணமாகக் கொண்டதற்கு அத்தாட்சியாய் நிற்கிறது. இயற்கை ஞானத்தில் ஈடுபட்டு டார்வின் பீகில் என்ற கப்பலில் ஆராய்ச்சி யாத்திரை செய்தபோது தென் அமெரிக்காவின் பிராணிகளை ஆய்ந்ததன் முடிவுதான் அவர் இனத் தோற்றத்தைப் பற்றித் தந்த முடிவு. இருபது ஆண்டுகள் ஓயாது ஆய்ந்து எழுதியது இந்த நூல். மறுக்க முடியாத அளவு சான்றுகளைக் குவித்தார். முதன் முதலில் அவர்தான் பரிணமத்துக்குத் திருப்திகரமான விளக்கம் ஒன்றைத் தந்தார். ரசல் வேல்ஸ் என்பாரும் மலேயா தீபகற்பத்தில் ஏறக்குறைய இதேகாலத்தில் ஆராய்ச்சி நடத்தி வாழ்க்கைப் போட்டியினால் இயற்கைத் தேர்வு நடைபெறுவதை முடிவாக அடைந்தார். மீண்டும் மதம் விஞ்ஞானத்துக்குத் தடையாயிருந்தது. ஆனால் இங்கிலாந்தில் ஹக்ஸ்லியும், ஜர்மனியில் ஹெய்க்கலும் பரிணமக்கொள்கையை நிலை பெறச் செய்து விட்டனர். பரிணமம் இப்போது எல்லோரும் ஒப்பிய விஷயம். எப்படி நடைபெறுகிறது என்பது பற்றியே இன்னும் கருத்து ஒற்றுமை இருந்து வருகிறது. இவைகளைப் பற்றிய விவரங்களை அடுத்த இதழில் காண்க.

அன்னியர்களின் நாகரித்தைப் பின்பற்றுவதும் பழைய பழக்கவழக்கங்களைக் குருட்டுத்தனமாக நம்பி நடப்பதுமாகிய இவற்றிடையே இந்தியா ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இவை எதிலும் இந்தியா தன் உயிரையோ அல்லது வளர்ச்சியையோ காணமுடியாது. இந்தியா தன்னுடைய கூட்டினின்று வெளியேறித் தற்கால உலகத்தில் எல்லா இயக்கங்களிலும் முக்கிய பங்கை வகிக்க வேண்டும்.

— பண்டித நேரு.

- *ஒரு நாட்டின் மக்கள் தன்மையையும் நடைமுறையும் அந்நாட்டின் வெப்ப தட்ப நிலையைப் பொருத்திருக்கிறது.*
- *உலகத்தைச் சுற்றியுள்ள வெட்ப நிலையையும், தட்ப நிலையையும் மனிதனுக்குப் பயன்தரத் தக்க அளவுக்குக் கட்டுப் படுத்தினால் மக்களுக்குள் நடைமுறை வேறுபாடுகளும் கருத்து வேறுபாடுகளும் ஒழிந்தது உலகத்து மக்கள் எல்லாம் ஒரு நாட்டின் மக்கள் போல வாழ்வார்கள்!*

# மனிதனும் சூழ்நிலையும்

திரு. T. E. ஷண்முகம், M. A., M. Litt.

24706

மக்களிடையே காணப்படும் பல் வேறு இயல்புகளும், பண்புகளும், நாகரிகமும், ஏன், அவர்கள் உருவ அமைப்பும், உடலமைப்பும், அவரவர்கள் வசிக்கும் நாட்டின் வெப்பதட்ப (Climate) நிலைக்கேற்ப ஏற்படுகின்றன. இது பலருக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணலாம். இதைக் குறித்துச் சில விஞ்ஞானிகளும் ஐயமுறலாம். எனினும், இதில் உண்மையிருக்கிறது. உலகத்திலுள்ள தாவரங்களை நோக்குவோம். அநேக விதமான செடி, கொடி, மரங்களும், வெவ்வேறு நிறத்தையும் மணத்தையும் உடைய பூக்களும், கனிகளும் இருக்கின்றன. சென்னையிலே ஒருபாகத்தில் தோன்றும் பூக்களுக்கும், நீலகிரிமலைமேல் தோன்றும் பூக்களுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. இதேபோன்று, ஆஸ்திரேலியாவிலுள்ள டாஸ்மேனியாவில் உற்பத்தியாகும் ஆப்பில்களுக்கும் அமெரிக்கா நாட்டிலுள்ள கானடாவில் உற்பத்தியாகும் ஆப்பில்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றன. பூக்களிலும் கனிகளிலும் வித்தியாசங்கள் இருக்கின்றன. இவ் வேற்றுமைகளுக்குக் காரணம் அந்த அந்த நாட்டு வெட்பதட்ப நிலைமையேயாம். இந்த உண்மை தாவர வர்க்கங்களுக்குப் பொருந்தும் என்றால் மனித இனத்திற்கும் ஏன் பொருந்தாது. உலகத்தில் சில பாகங்களில் வாழ்பவர்கள் மனவன்மையில் குறைந்தவர்களாகவும் காம இச்சை அதிகம் உடையவர்களாகவும், முன்கோப முடையவர்களாகவும், பிடிவாத குணமுடையவர்களாகவும், ஆன்ம விசாரம் செய்வதில் பெரு விருப்ப முடையவர்களாகவும், அதிகம் சந்தேகப்படும் குணங்கள் பொருந்தியவர்களாகவும், வாழ்க்கையில் நிகழும் துன்ப நிகழ்ச்சிகளைப் பற்றிச் சாதாரணமாக யோசனை செய்யும் இயல்புடையவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றும் சட்டங்களுக்கும், அதிகாரத்துக்கும் கட்டுப்பட்டு வாழும் இயல்பு உடையவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் பொதுவாக மெலிந்தும், ஆரோக்கியத்தில் குறைந்து மிருக்கிறார்கள். அவர்கள் மெய்ப்பாடுகள் எப்போதும் நிலையாக இருப்பது இல்லை.

உலகத்தின் மற்றும் சிலபாகங்களில் வாழும் மக்களை ஆராய்ந்தோமானால்,

ஆரோக்கியமும், திடகாத்திரமும் பொருந்திய உடலை உடையவர்களாகவும், சலிப்படையாது வேலைசெய்யும் இயல்பை உடையவர்களாகவும், வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்தை உடையவராயும், சாதாரணமாக உற்சாகமாகவே இருக்கும் இயல்பும், பொறுமை, சகிப்புத் தன்மை முதலிய இயல்புகளை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றும் பிறருக்கு அடங்கிக் கட்டுப்படாமல் வாழ்வதே வாழ்க்கைப் பண்பாகக் கருதுகிறார்கள். மேலும் ஜனநாயகத்தில் அதிகப் பற்றும், உண்மையாகவும், நேர்மையாகவும் பிறரிடத்தில் சந்தேகப்படாமல் வெளிப்படையாக எதையும் சொல்லி சுலபமாக கலந்து பழகும் தன்மைகளையும் உடையவர்களா யிருக்கிறார்கள். சுருங்கக் கூறின், இந்த நாடுகளில் வாழும் மக்கள் முதலிலே கூறிய மக்களுக்கு எதிர்மறையான உடலமைப்பும், உருவ அமைப்பும், மன இயல்புகளும், போக்குகளும் உடையவர்களா யிருக்கிறார்கள்.

மேற்கூறிய உண்மைகளைப் பல பேரறிஞர் ஆராய்ச்சியின் மூலமாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஜான் ஆர்பத்நாட் (John Arbuthnot) என்னும் அறிஞர் ஒரு நாட்டு மக்களின் நடைமுறையும் போக்கும், அந்த நாட்டு வெப்பதட்ப நிலையால் ஏற்படுகின்றன என்றும் அதை எதிர்த்து மாற்றி அமைக்க எந்த அரசியலாராலும் முடியாது என்றும் கூறுகிறார். மான்டெஸ்கு (Montesquieu) என்ற அறிஞர் ஒரு நாட்டின் சட்டங்கள் அந்த நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப அமைந்திருக்கும் மக்களின் உடலமைப்பிற்கும், குணங்களுக்கும் தக்கவாறு இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். ஆடம் பெர்கூசன் (Adam Fergusan) ஹென்றி கயட் (Henry Guyot) போன்ற அறிஞர்கள் அதிக வெப்பமும் அதிக குளிருமின்றி நடுத்தரமான (Temparate) தட்ப வெப்ப நிலையையுடைய நாட்டில் வாழும் மக்கள் உடலமைப்பிலும், நுண்ணறிவிலும் மற்ற நாட்டினரை விட உயர்ந்தும், சிறந்தும் விளங்குவார்கள் என்று கருதுகிறார்கள். அமெரிக்க நாட்டு விஞ்ஞானியான ஜான் டிரேப்பர் (John Draper), ஒரு நாட்டுக்குள்ளேயே பல்வேறு தட்ப வெப்ப நிலையிருக்கலாம். அந்த நிலைக்கேற்ப மக்களும், மக்களுடைய போக்குகளும் அமைகின்றன என்ற உண்மையைத் தனது ஆராய்ச்சி மூலமாக வலியுறுத்துகிறார். இதே கருத்தை ரஸ்ஸல் ஸ்மித் (Russell Smith), எல்ஸ்வொர்த் ஹண்டிங்டன் (Ellsworth Huntington) போன்ற பேரறிஞர்களும் வெளியிட்டிருக்கிறார்கள். எல்ஸ்வொர்த் ஹன்டிங்டன் மேற்கூறிய கருத்தோடு நின்று விடாமல், மனிதனுடைய இயல்புகளும், போக்குகளும், உடலமைப்பும் அவன் கருவில் உற்பத்தியான மாதத்தின் தட்ப வெப்ப நிலையைப் பொறுத்திருக்கின்றன என்றும் கூறுகிறார். அவர் கூறும் காரணமாவது, மனிதனுடைய உற்பத்திச் சத்துக்கள் (Reproductive vitality) வசந்த காலத்தில் (Spring) உயர்ந்த நிலையிலும், அதிக வெப்பமுடைய கோடை காலத்தில் (Summer) குறைந்தும் இருப்பதனால் ஆகும் என்கிறார்.

மேற் கூறிய உண்மைகளைப் பல உள நூலாசிரியர்களும் (Psychologists) உடல் நூலாசிரியர்களும் (Physiologists) தமது ஆராய்ச்சிக் கூடத்தில் (Research laboratory) பரிசோதனையின் மூலமாக (Experiments) நிலைநாட்டி யிருக்கிறார்கள். இங்கு ஹெல்மர்[1] என்ற உள நூலாசிரியர் நடத்திய பரிசோதனையை ஆராய்வோம்.

சாதாரணமாக, பல சௌகரியங்களின் காரணமாகப் பொதுவாக உள நூல் ஆசிரியர்களும், உடல் நூலாசிரியர்களும், மருத்துவர்களும் தங்களது

ஆராய்ச்சிகளுக்கு வெள்ளை எலிகளை உபயோகிப்பது வழக்கம். ஹெல்மரும் தமது பரிசோதனைக்கு அப்போதுதான் பிறந்த நூறுக்கு மேற்பட்ட வெள்ளை எலிகளை எடுத்துக் கொண்டார். அந்த எலிகளை மூன்று கூட்டங்களாகப் (Groups) பிரித்து, ஒரு கூட்டத்தை 55 டிகிரி வெப்ப தட்ப முடைய அறையிலும், மற்றொரு கூட்டத்தைச் சாதாரணமாக எப்போதும் நிலவியிருக்கும் வெப்ப தட்பம் (Constant temperature) உடைய அறையிலும், மூன்றாவது கூட்டத்தை 90 டிகிரி உடைய அறையிலும் விட்டு வைத்தார். பன்னிரண்டு வாரங்கள் கழித்து அவைகளின் மேல் தன் பரிசோதனையை ஆரம்பித்தார். அவர் தம் பரிசோதனைக்கு வெள்ளை எலிகள் போன்ற சிறு பிராணிகளின் கற்கும் ஆற்றலின் வேகத்தை அறிவதற்கு உபயோகப்படுத்தும் மேஸ்[1] (Maze) ஒன்றை தேர்ந்தெடுத்தார். அவர் கண்டு பிடித்த உண்மைகளைப் பின் வரும் கட்டத்தில் காண்க.

| கூட்டம் | மொத்த எலிகள் | சராசரி முயற்சிகள் | சராசரி தவறுகள் |
|---|---|---|---|
| 55 டிகிரியில் வைக்கப்பட்டவை | 49 | 26 | 133 |
| சாதாரண சமநிலையில் வைக்கப்பட்டவை | 45 | 26 | 149 |
| 90 டிகிரியில் வைக்கப்பட்டவை | 35 | 54 | 297 |

1. HELLMER, H. A "THE EFFECT OF TEMPERATURE ON THE BEHAVIOUR OF THE WHITE RAT" — AMERICAN JOURNAL OF PSYCHOLOGY, VOL 56, 1943.

மேலேயிருக்கும் கட்டத்திலிருந்து 55 டிகிரி அறையிலுள்ள எலிகள் கற்கும் விதத்திலும், வேகத்திலும் சிறந்தவைகள் என்று தெரிகிறது. அந்த அறையிலிருந்த மொத்த எலிகள் 49; அவைகளின் கற்கும் வேகத்தை ஆராய்வதற்குச் சராசரி ஒவ்வொன்றிற்கும் 26 முயற்சிகள் கொடுக்கப்பட்டன. அந்த முயற்சிகளைக்கொண்டு சராசரி 133 தவறுகள் செய்து அந்த மேஸைக் கடக்கக் கற்றுக்கொண்டன. சாதாரண சமநிலையில் வைக்கப்பட்ட 45 எலிகள் சராசரி 26 முயற்சிகளில், சராசரி 149 தவறுகள் செய்து மேஸைக் கடக்கக் கற்றுக்கொண்டன. ஆனால் 90 டிகிரியில் வைக்கப்பட்ட 35 எலிகள் சராசரி 297 தவறுகளை 54 முயற்சிகள் செய்து மேஸைக் கடக்கக் கற்றுக் கொண்டன. ஆசிரியர் பரிசோதனையைத் தொடர்ந்து நடத்தினர். இந்த மூன்று அறைகளிலும் வளர்க்கப்பட்ட எலிகளுக்குக் குட்டிகள் பிறந்தவுடன் அவைகளின் கற்கும் ஆற்றலையும் ஆராய்ந்தார். விடைகள் பின்வருமாறு:


| கூட்டம் | மொத்த எலிகள் | சராசரி முயற்சிகள் | சராசரி தவறுகள் |
|---|---|---|---|
| 55 டிகிரியில் வைக்கப்பட்டவை | 49 | 26 | 133 |
| சாதாரண சமநிலையில் வைக்கப்பட்டவை | 45 | 26 | 149 |
| 90 டிகிரியில் வைக்கப்பட்டவை | 35 | 54 | 297 |


1 சிக்கல் நிறைந்த வழி.

கட்டம் இந்தப் பரிசோதனையிலும் குளிர்ச்சிபொருந்திய அறையில் பிறந்து வளர்ந்த எலிகளே கற்கும்வேகத்திலும், விதத்திலும் சிறந்து விளங்குகின்றன. அதற்கு அடுத்தது, சாதாரண சமநிலையில் அறையின் தட்ப வெப்ப நிலையில் வைக்கப்பட்ட கூட்டத்து எலிகள். 90 டிகிரியில் வைக்கப்பட்ட எலிகளே பிற்போக்கானநிலைமையிலிருக்கின்றன.

ஹெல்மர் தமது ஆராய்ச்சியை இதோடு நிறுத்திவிடவில்லை. அவர் 55 டிகிரி அறையிலிருந்த கூட்டத்தை மற்ற அறைகளுக்கு மாற்றி, ஒவ்வொரு அறையிலும் முப்பதிலிருந்து நாற்பது நாட்கள் வரையிலும் வைத்திருந்து, பிறகு அவைகளின் கற்கும் வேகத்தையும் உடலமைப்பையும்பரிசோதித்தார். அதேபோன்று மற்ற 2-வது 3-வது கூட்டத்து எலிகளையும் முறையே மற்ற அறைகளுக்கு மாற்றி அவைகளை பரிசோதித்தார். உண்மைகள் பின்வருமாறு:—

| கூட்டம் | சராசரி முயற்சிகள் | சராசரி தவறுகள் | மோத்த எலிகள் |
|---|---|---|---|
| 55 டிகிரியில் இருந்த எலிகள் | | | |
| 1. 55 டிகிரி அறையில் | 7·1 | 17·4 | 14 |
| 2. சமநிலை அறையில் | 9·8 | 31·8 | 17 |
| 3. 90 டிகிரி அறையில் | 13·0 | 50·6 | 14 |
| சமநிலையில் வைக்கப்பட்ட எலிகள் | | | |
| 1. 55 டிகிரி அறையில் | 7·9 | 31·3 | 14 |
| 2. சமநிலை அறையில் | 11·3 | 40·0 | 15 |
| 3. 90 டிகிரி அறையில் | 18·8 | 70·4 | 15 |
| 90 டிகிரி அறையில் இருந்த எலிகள் | | | |
| 1. 55 டிகிரி அறையில் | 8·2 | 28·9 | 16 |
| 2. சமநிலை அறையில் | 16·5 | 36·5 | 15 |
| 3. 90 டிகிரி அறையில் | 16·5 | 40·6 | 14 |

மேலே காட்டப்பட்ட விவரங்கள் எப்படி நாற்பது நாட்களில் 90 டிகிரி வெப்பமுடைய சூழ்நிலையில் வளர்ந்த எலிகள், முறையே சமநிலையான வெப்பதட்பமுடைய அறைக்கும் 55 டிகிரி தட்பமுடைய அறைக்கும் மாற்றியபோது, அவைகளின் கற்கும் தன்மையும், வேகமும் அதிகமாகிறது என்றுதோன்றுகிறது. அதேபோன்று தட்ப சூழ்நிலையில், அதாவது 55 டிகிரி அறையில் வளர்ந்த எலிகள் மற்ற இரண்டு அறைகளுக்கு முறையே மாற்றிய போது, அவைகளது கற்கும் ஆற்றலும், வேகமும் குறைகின்றன. இந்த உண்மைகளோடு கூட ஆசிரியர் இவ் வெவ்வேறு அறைகளில் வளர்க்கப்பட்ட எலிகளின் உடலமைப்பிலும், நடத்தையிலும், பெண்ணோடு ஆண்சேரும் முறைகளிலும், அதிக வித்தியாசம் இருப்பதைக் கண்டார். மற்றும், இந்த எலிகளை அறைகளில் மாற்றி வைத்தபோது அவைகளின் உடலமைப்பிலும், நடத்தையிலும் (behaviour) மாறுதல்கள் ஏற்படுவதைக் கண்டார். மேலும் அவர் கூறுவதாவது, வெவ்வேறு அறைகளில் வளர்க்கப்பட்ட எலிகள் உடலமைப்பு, நடைமுறை முதலியவை

உலகில் பல்வேறு வெப்ப தட்ப சூழ்நிலையில் வாழும் மக்களுக்கு ஒத்திருக்கின்றன என்றும் கூறுகிறார்.

இதுபோன்று செயற்கை வெப்ப தட்ப சூழ்நிலை ஏற்படுத்தி வெள்ளெலிகளைக் கொண்டு பரிசோதனை செய்ததில் கிளாரன்ஸ் மில்ஸ் (CLARENCE MILL) என்ற அறிஞரும், ஹெல்மர் கூறிய உண்மைகளை உறுதிப் படுத்துகிறார்.

மேற்கூறிய சோதனைகள் தெளிவுபட, இந்த உலகின் கண்ணே மக்களிடையே காணும் பல்வேறு வேற்றுமைகளுக்குக் காரணம், அந்தந்த மக்கள் வாழும் சூழ்நிலையிலுள்ள வெப்ப தட்ப நிலையே என்று காண்பிக்கின்றன. உண்மை இதோடு நின்றுவிடவில்லை; உலகத்திலே, பல்வேறு மனிதர்களும், பண்பாடுகளும், நாகரிகங்களும் தோன்றின; உச்ச நிலையில் சில ஆண்டுகள் இருந்தன; பின் மடிந்தொழிந்தன. உலக சரித்திரத்தை ஆராய்ந்தால், எப்படி பல்வேறு அரசர்களும், அரசியல்களும் தோன்றித் தோன்றிமறைந்தன என்று தெரிகிறது. பண்டைத் தமிழரையும், அவரது நாகரிகத்தையும் பண்பையும் இன்றும் புகழுகிறோம். ஆனால் அந்த நாகரிகமும் பண்பும் அழிந்தொழிந்தன. கிரேக்க, ரோமாபுரி நாடுகளில் பல்வேறு பண்புகளும், அரசியல்களும் உச்ச நிலை அடைந்து பிறகு அழிந்தன. அதே போன்று இந்திய சரித்திரத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டதையும், ஏற்படுவதையும் காண்கிறோம். இது போன்ற மாறுதல்கள் ஏன் உலக சரித்திரத்தில் ஏற்படுகின்றன? காரணங்கள் உண்டா? ஆம், காரணங்கள் உண்டு. இவைகளுக்கெல்லாம் காரணம், உலகத்திலே பொதுவாக அந்தந்தக் காலங்களிலே ஏற்பட்ட வெப்ப தட்ப நிலையே யாகும் எப்படி ஒவ்வொரு நாட்டிலும், பருவங்கள் மாறி, அந்தந்தப் பருவங்களுக்குத் தக்கவாறு அந்த நாட்டு வெப்ப தட்ப நிலை அமைகிறதோ, அதேபோன்று, உலகத்திற்கே பொதுவாக ஒரு தனிப்பட்ட வெப்ப தட்ப நிலையிருக்கிறது. அந்த வெப்ப தட்ப நிலை பருவங்களுக்குத் தக்கவாறு மாறுகின்றன என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். மற்றும் ஒவ்வொரு பருவ மாறுதலும் ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு ஒரு முறை ஏற்படுகிறது என்றும் கூறுகிறார்கள். கி. மு. 6-வது நூற்றாண்டிலிருந்து கணக்கெடுத்துப் பார்த்ததில் ஐந்தாவது மாறுதல், அதாவது ஐந்நூறு வருடங்களுக்குப் பிறகு ரோமாபுரியில் ஸீஸரும், அவனுடன் ரோமாபுரியும் மடிந்தபோது ஏற்பட்டது என்றும், அதற்கடுத்த பத்தாவது மாறுதல் ஐரோப்பிய நாட்டிலே மத்திய காலத்தில் (middle ages) ஏற்பட்டது என்றும், அடுத்த பதினைந்தாவது மாறுதல், 1980-ம் ஆண்டில் ஏற்படும் என்றும் ஆராய்ச்சியாளர்களின் துணிபு. மேற்கூறிய உண்மைகளைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சியாளர்கள் தட்பநிலையையும், மழையையும் அளப்பதற்காகக் கருவிகள் அந்தக் காலத்தில் இல்லாமலிருந்தும் மரங்களில் வெப்பதட்ப நிலைக்கேற்ப ஏற்பட்ட வளைவுகளைக் (rings) கொண்டும் ஏரி, ஆறு முதலியவைகளின் அந்தந்தக் காலங்களில் மழை, வெள்ளங்களால் ஏற்பட்ட அளவுகளைக் கொண்டும், பழைய புத்தகங்களில் அந்தந்த நாட்டிலே ஏற்பட்ட பஞ்சம், கொலை, களவு முதலியவைகளின் குறிப்புகளைக் கொண்டும், மற்றும் பல சாதனங்களைக் கொண்டும் உலகத்திலே பல்வேறு நாடுகளின் நிலைமையை கி. மு. 6-ம் நூற்றாண்டிலிருந்து ஆராய்ந்தார்கள். இதுபோன்று மனிதனின் சூழ்நிலையில் வெப்ப தட்ப நிலை எவ்வளவு முக்கியமானது என்று தெரிகிறது. மக்களிடையே மலிந்து காணும் கருத்து வேறுபாடுகளுக்கும், உடல் வேறுபாடுகளுக்கும் அவர்கள் வாழும் சூழ்நிலையிலிருக்கும் வெப்ப தட்ப நிலையே பெரும்பாலும் காரணமாக அமைகிறது

என்று தெளிவுபடுகிற தன்றோ? இப்போது உலகத்தில் மலிந்து காணும் குறைகளுக்கும், வல்லரசுகளிடையே கருத்து வித்தியாசங்கள் ஏற்பட்டிருப்பதற்கும், அவரவர்கள் வாழும் நாட்டின் வெப்ப தட்ப நிலையென்றால் தவறாகாது. உலகத்திலே காலந்தோறும் மகா யுத்தங்கள் தோன்றுவதற்கும், உலகத்திற்கே பொதுவான வெப்ப தட்ப நிலையே யாகும். இந்த உண்மையை யறிந்து, விஞ்ஞான ஆசிரியர்கள் எல்லாம் ஒன்று கூடி, எப்படி அறைகளை நமக்கு வேண்டியவாறு வெப்பநிலையிலோ, குளிர்ந்த நிலையிலோ ஏற்படுத்திக் (Air-condioning) கொள்ளுகின்றோமோ, அதேபோன்று உலகத்தைச் சுற்றியுள்ள வெப்பநிலையையும் தட்ப நிலையையும் மனிதனுக்கு பயன் தரத்தக்க அளவுக்குக் கட்டுப்படுத்தினால் மனிதர்களுக்குள்ளேயே நடைமுறை வேறுபாடுகளும், கருத்து வேறுபாடுகளும் நாளடைவில் ஒழிந்து, "யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற உணர்ச்சி ஏற்பட்டு, ஒரு நாட்டுமக்கள் ஓர் உலகத்து மக்கள் போலவும், உலகத்து மக்கள் எல்லாம் ஒரு நாட்டின் மக்கள் போலவும் வாழ்வார்கள் அன்றோ!

## நாவின்கண் பற்கள்!

பெரும்பாலும் எல்லா உயிர்களுக்கும் நா வேறாகவும் பல் வேறாகவும் அமைந்திருக்கும் அல்லவா? ஆனால் நத்தையின் பல் அமைப்போ விசித்திரமானது! நத்தைக்கு அதன் நாவிலே பற்கள் வரிசையாக அமைந்துள்ளன. அவை மிகவும் கூர்மையானவை. இக்கூர்மை யான பற்களைக் கொண்ட நாவினை நீரில் விளையும் செடிகளின் தண்டு, இலை முதலியவைகள்மீது தடவி உணவு கொள்ளுகின்றது!

**நினைவு முகம் :–** ஆசிரியர் திரு. எஸ். வி. இராசகோபாலன் – தமிழ்நாடு வெளியீடு, பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1. விலை அணா 12.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே இக்காலத்தைச் சிறுகதைக் காலம் என்றே கூறலாம். இன்றைய பத்திரிக்கைகள் கூட தங்கள் இலாபத்துக்குச் சிறுகதைகளையே நம்பி யிருக்கின்றன என்ற ஒன்றே இதை வலியுறுத்தப் போதியதாகும்.

நண்பர் இராசகோபாலன் இத்துறையில் நல்ல வெற்றி பெற்றிருக்கிறார். 'நினைவு முகம்' என்ற அவருடைய சிறுகதைகளின் தொகுப்பு நூல் சுவை மிக்கதா யுள்ளது. சீரிய கருத்துக்களை வெளியிடுவதற்குத் துணையாகச் சுவை கனிந்த கற்பனை வளமும் ஆசிரியருக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது.

நினைவு முகம் என்ற முதற்கதை விதவை மணம் பற்றியது. செல்வன் ஏழையாகி, ஏழை பிச்சைக்காரனாகி, பிச்சைக்காரன் பித்தனாகி, பித்தன் பிணமாகும் காட்சியை இரண்டாவது கதையில் காணலாம். அக்காட்சியைக் காட்டும்போது, எழுகின்ற கேள்வி தான் 'யாருக்குக் கவலை' என்று தலைப்பாக அமைந்துள்ளார். கனவுலகத்திற்கு அப்பால்', 'விசித்திரப் பிறவி' எனும் இரண்டு கதைகளும் கலைஞர் வாழ்க்கையைப் பற்றியவை. கலைக்கும் வாழ்க்கைக்கும் போராட்டம் ஏற்படக் காண்கிறோம். 'பிராயச்சித்தத்' தில் ஏழை கருப்பாயி குமாரி கற்பமாகி வாழ்க்கைப் புயலில் சிக்கிப் பிணமாகிறாள். 'உயிர்ப் பிச்சை' ஒரு கிராமியக் கதை. இந்த ஆறு கதைகளினூடும் 'காதல்' என்ற ஒரு நரம்பின் இசை வன்மையாகவும் மென்மையாகவும் ஊடுருவிப் பாய்கிறது.

டாக்டர் மு. வ. வின் அணிந்துரை பெற்றுள்ளது இந்நூல்.

அழகான தமிழ் நூல்கள் வெளிவருகிற இக்காலத்தில் இந்நூலை இன்னும் சிறிது கவர்ச்சியாக வெளியிட்டிருக்கலாம்.

**கவிஞன் உள்ளம்** — ஆசிரியர் : வித்துவான் திரு. ந. சுப்பு ரெட்டியார் பி. ஏ., பி. எஸ்ஸி., எல். டி. — வெளியிட்டோர் : கலைவளர்ச்சிப் பதிப்பகம், துறையூர், திருச்சி மாவட்டம். விலை ரூ. 2—8—0

ஓர் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராக வுள்ள அறிஞரைத் தமிழ்ப் பற்றானது ஒரு நூலாசிரியாக மாற்றி விட்டது. நல்ல முயற்சி.

சங்க காலப் பாடல்களிலிருந்து இன்றைய பாரதிதாசன் பாடல்கள்வரை இந் நூலாசிரியரின் நோக்கம் பரந்து பரவுகிறது. சங்கப் பாடல்களே நிறைய இடம் பெறுகின்றன.

தெளிவான அச்சு, நல்ல கட்டோடு அமைந்துள்ள அழகிய தோற்றம்—இவை நூலின் சிறப்பு.

ஆனால், அச்சுப் பிழைகள் பல காணப்படுகின்றன. பழைய பாடல்கள் கடினமாயுள்ளன என்றுணர்ந்து பேசும் ஆசிரியரின் நூலில், அதே பழைய பாடல்களில் எழுத்துப் பிழைகளும் இருந்தால் எத்துணைத் துன்பம் தரும்! மறு பதிப்பு வருங்கால் இக் குறை நீங்குமென எதிர்பார்க்கலாம்.

இந் நூலாசிரியர் பொறுக்கியுள்ள சங்கத்துப் பாடல்களெல்லாம் ஏற்கெனவே பல அறிஞர்களால் விளக்கம் பெற்றுள்ளன. எனினும், இந் நூலைப் படிக்கும்போதும் சுவை குறையவில்லை.

தமிழ் மொழியில் இலக்கியத் திறனாய்வு (Literary Criticism) பெருகவேண்டுமென்ற ஆர்வத்தால் இந் நூல் வரைவதாக ஆசிரியர் குறிக்கின்றார். அத்துறையில் பணியாற்ற இன்னும் பலர் உள்ளனர். எனவே, விஞ்ஞானப் பட்டமும் தமிழ்த் தகுதியும் பெற்றுள்ள இவ்வாசிரியர், தமிழுக்கு இன்றியமையாது வேண்டிய விஞ்ஞானத் துறையில் நாட்டம் செலுத்துவது நலமாகும்.

## வாழ்க்கையே நாடகம்.

நமது உயிர்வாழ்க்கை முழுதும் ஒரு நாடகமே எனக் கருதுகின்றேன். அதில் ஒவ்வொருவனும் தன்னை மறந்து பிறனொருவனைப்போல் நடக்கப் பாடுபடுகின்றான். நாம் நம்முடைய உண்மை நிலைக்குத் திரும்பமாட்டாதவர்களாய்ப் பிறரைப் பார்த்து அவர்களைப்போல் நடப்பதிலேயே உறைத்து நிற்கின்றோம். இஃது எதனை ஒத்திருக்கிறதென்றால், இளஞ்சிறார் தெற்றுவாய் உடைய சிலரைப் பார்த்து, அவரைப்போல் தாமும் தெற்றித் தெற்றிப் பேசுதலையே ஒத்திருக்கின்றது. அங்ஙனம் அச்சிறுவர் தெற்றித் தெற்றி நெடுகப் பேசிவரவே, சிறிது காலத்தில் அவர்களும் தெற்றுவாய் உடையராகின்றனர். முதலிற் பழகிய அத் தீயபழக்கம் பின்னர் எக்காலும் மறக்கப்படாத வேறோர் இயற்கையாய் விடுகின்ற என்று நாடக நூலாசிரியர் ஒருவர் (Ben Jonson) அறிவுரை புகல்கின்றார். — மறைமலையடிகள்.

## வரப் பெற்றோம்.

**மானசீகம்** (மாத வெளியீடு) – ஆசிரியர்: திரு. பி. சோமசுந்தரம், B. A., ராயல் அச்சகம், ராஜவீதி, கோவை. தனி இதழ் விலை 4 அணா.

**புதுமை** (வாரப் பதிப்பு) – ஆசிரியர்: திரு. ஆர். கே. ராம். காலேஜ் வியூ, நாகர்கோவில். தனி இதழ் விலை 2 அணா.

**தென் திலகம்** (வார இதழ்) – ஆசிரியர்: திரு. வி. எம். ஜேசுதாஸ். தென் திலகம் அச்சகம், நாகர்கோவில். தனி இதழ் விலை 1 அணா.

# வினாக்களும் விடைகளும்

★

(1) லினன் (linen) எதிலிருந்து தயார் செய்யப்படுகிறது?

சணல் -செடிகளிலே முக்கியமாக மூன்று வகையுண்டு. அவற்றில் ஜூட் (Jute) ஹெம்ப் (Hemp) என்ற இரண்டு வகைகள் கித்தான், சாக்கு, கயிறு முதலியவைகள் செய்ய உதவு கின்றன. பிளாக்ஸ் (Flax) எனப் படும் மூன்ருவது வகைச் சணல், இந் தியா போன்ற வெப்பமான பகுதிகளில் விதைக்காகப் பயிர் செய்யப்படுகிறது. இந்த விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கு ஆளிவிதை (linseed) எண்ணெய் என்று பெயர். இதே செடிகள் ரஷ்யா முதலிய சம சீதோஷ்ண நாடுகளில் லினன் செய்வ தற்காகப் பயிரிடப்படுகின்றன. இதன் தண்டுகளை நீரில் பலநாள் ஊற வைத்து அடித்துக் கிடைக்கும் மெல்லிய நாரைச் சிக்கெடுத்து லினன் துணியாக நெய்கிருர்கள்.

நீடித்து உழைக்கும் லினன் துணியை, அநேகம் பேர் ஒருவகை மிருகத்தின் ரோமத்தாலானது என்று தவருக நினைப்பதில் ஆச்சரியமில்லை.

(2) பெட்ரோல் ஏற்றிச் செல்லும் மோட்டார் லாரிகளின் பின்புறம் இரும் புச் சங்கிலி தொங்க விட்டிருப்பதேன்?

மோட்டார், ரயில் முதலிய வண்டி கள் ஓடும் போது சக்கரங்களின் அரு காமையில் மின்சாரத் தேக்கம் உண் டாகும். இரும்பு பட்டா போட்ட சக்கரங்களானல் இந்த மின்சாரம் பூமி யிலிறங்கி விடும். பெட்ரோல் ஏற்றிச் செல்லும் லாரிகள் ரப்பர் டயர் உள்ள வையானல் இந்த மின்சாரம் பூமியி லிறங்க வழியில்லாமல் அதிகப்பட்டு, பெட்ரோல் தீப்பிடித்து விடாதபடி, மின்சாரம் பூமியிலிறங்குவதற்காக இரும்புச் சங்கிலி பூமியில் பட்டுக் கொண்டே போகும்படி தொங்க விட்டி ருப்பார்கள்.

(3) சில மரங்களின் மலர்கள் இரவு நேரங்களில் அதிக மணம் வீசுவதன் காரணமென்ன?

இரவு நேரங்களில் சஞ்சரிக்கும் பூச்சி களால் அதன் மலர்களில் மகரந்தச் சேர்க்கை (pollination) நிகழ்கிறது. இராக் காலங்களில் பூவின் அழகு மேம் பட்டுத் தோன்ருது. அதனல் பூச்சி களை அறைகூவியழைக்க அதன் மணமே பெரிதும் உதவுகிறது.

(4) பீட் (beet) கிழங்கிலிருந்து தயா ரிக்கப்படும் சர்க்கரை எதற்கு உபயோ கப்படுகிறது?

பீட் கிழங்கிலிருந்து செய்யப்படும் சர்க்கரைக்குப் பெயர் 'அஸ்கா'; கரும்பிலிருந்து செய்யப்படும் சர்க்கரை யும் 'அஸ்கா' தான்; இரண்டும் ஒன்றே. வித்தியாசம் என்ன தெரி யுமா? அது ஐரோப்பிய நாடுகளில் செய்யப்படுகிறது; நம் நாடுகளில் கரும் பிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

இன்னெரு விதமாகச் சொன்னல் புரிந்து கொள்வீர்கள். பழங்களில் கிடைக்கும் க்ளுகோஸ் (glucose), ப்ரக்டோஸ் (fructose), பாலிலிருந்து லேக்டோஸ் (lactose), இன்னும் சுக் ரோஸ் (sucrose) என்று சர்க்கரையில் பலவகைகள் உண்டு. இந்த சுக்ரோஸ் தான் அஸ்கா. இது நூற்றுக்கு 18 பங்கு பீட் கிழங்கிலும், 13 பங்கு கரும்பிலும் இருக்கிறது. இப்போது விளங்கிற்ரு?

(5) சில மாதங்களுக்கு முன்னே, நாம் எல்லோரும் ஒரு வால் நட்சத்திரத்தைப் பார்த்தோமே, அதன் பெயர் என்ன தெரியுமா? — பெஸ்டர் (Bester) என்று பெயர் கொடுத்திருக்கிறார்களாம்.

(6) பரணி என்ற நூல் வகையினைத் தோற்றோர் பெயரால் வழங்கக் காரணம் என்ன?

பொதுவாக புகழும் சிறப்பும் பெற்றவர்களுடைய பெயர்களையே நூல்களுக்கு இடுவது வழக்கம். குலோத்துங்க சோழன் உலா, நந்திக் கலம்பகம் ......முதலான பெயர்களைக்கொண்டு இவ்வுண்மையை உய்த்தறியலாம். ஆனால், பரணி என்ற நூல் வகை மட்டும் ஒரு தனித்தன்மை பெற்றுள்ளது.

பரணி என்பது போர்க்களப்பாட்டு என்பது யாவருக்கும் தெரியும். மேற்கோளாகக் கலிங்கத்துப் பரணியை எடுத்துக்கொள்ளலாம். கலிங்கநாட்டில் நடந்த போரைப் பாடியது அந்த நூல். ஆனால், அந்தப் போரில் தோற்றவர்கள் கலிங்க நாட்டார்தான்; வென்றவன் சோழ மன்னன். கலிங்கத்துப் பரணியைச் சோழன் அவையிலே அரங்கேற்றி அவன் தந்த பரிசும் சிறப்பும் பெற்றார் செயங்கொண்டார். ஆயினும், நூலின் பெயர் கலிங்கத்துப் பரணி என்பதுதான். கலிங்கத்துப் பரணி மட்டுமன்று; எல்லாப் பரணி நூல்களுமே தோற்றார் பெயரால்தான் வழங்கப்பெறும்.

இதற்குரிய காரணம் இதுதான் என்று பழைய உரையாசிரியர்களோ, நூலாசிரியர்களோ கூறவில்லை. நாமாக உய்த்தறிய வேண்டியதுதான். அவ்வாறு எண்ணும்போது, பின்வருமாறு சில காரணங்கள் கூறலாம்:

1. சிறந்த வீரப் புகழ் வாய்ந்தவர்களே எங்கள் மன்னனிடம் தோற்றார்கள்; கோழையரல்லர். எனவே, பெரிய வீரரையும் பணிய வைக்கும் பெற்றி வாய்ந்தவன் எங்கள் தலைவன் — என்ற கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்காகத் தோற்றோர் பெயரை நூலொடு சேர்த்து வழங்கியிருக்கலாம்.

2. பரணி என்பது போர்ப் பாட்டு. அந் நூலில் வரும் கதையமைப்பின் போக்கிலே தலைவியாக அமைபவள் காளி. இக்கன்னித் தெய்வமாகிய போர்த்தேவதைக்கு உரிய பரிவாரங்கள் பேய்களும் பூதங்களுமாம். ஆக, நூற்பொருளின் அச்சந்தரும் அமைப்பினுக்கு ஏற்ப, அச்சத்தால் நடுங்கிய தோற்றோர் பெயர் நூலுக்கு அமைத்திருக்கலாம்.

3. பேய்களின் ஆரவாரங்களும், போர் வீரர்களின் அட்டகாசங்களும் நிரம்பிக் கிடக்கும் பரணி நூலிலே காணத்தக்க மற்றொரு தன்மை உண்டு. பேய்களின் மாறாப் பசியும், அப்பசியால் அவை படும் துன்பமும், அத்துன்பத்தை நீக்க அவை போரை எதிர்நோக்கும் வேட்கையும், போர்கண்டவுடன் வேட்கையை ஆற்ற அவை புலப்படுத்தும் துடிதுடிப்பும் பரணி நூல்களிலே பெரும்பகுதியாக உள்ளதைக் காணலாம். வறண்டு உலர்ந்த பாழ் வயிறும், குழிவிழுந்து சுழலும் எரிகண்களும் படைத்த பேய்களின் பசியை நீக்குதற்குத் துணையாக அமைவது இறந்து விழும் வீரர்களின் உடல்களும், அவர்களுடைய கரி பரிகளின் உடல்களுமே யாகும். போர்க்களத்தில் பேய்களுக்கு உணவாவதில் தோற்றோரே பெரும் பங்கு பெறுகிறார்கள். எனவே, பரணிக் கதையில் தலைமை பெறும் பேய்களின் ஆர்வத்துக்குரிய தோற்றோர் பெயர் நூலுக்கு இயைபுடையதாயிற்று என்று கூறலாம்.

வறுமை, துன்பம், அச்சம், பசி, பிணி, கொலை, கொள்ளை என்று வழங்கும் இத்தகைய துயர்தரு காட்சிகளே நிரம்பிய பரணிக்கு வென்றோரின் பெயரினும் தோற்றோரின் பெயர் சாலப் பொருந்துவதல்லவா?

# சௌந்தரராஜா மில்ஸ்

லிமிடெட்,

## திண்டுக்கல்.

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

**லட்சுமண & கோ.,**

20-நெ. முதல் 40-நெ. வரை

ஒத்தை முறுக்கு நூல்கள் தயாரிக்கிறோம்.

இந்திய மூலதனம்

இந்திய உழைப்பு

இந்திய நிர்வாகம்

**G. T. நாராயணசாமி நாயுடு,**

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் செக்ரிடரீஸ் & பார்ட்னர்.

PHONE 130 GRAMS: ENERGY

## A. PERA NAIDU & SONS,

MILLSTORE FURNISHERS AND MACHINERY MERCHANTS.

5/329, AVANASHI ROAD,

COIMBATORE.

DEALERS IN TEXTILE WOODEN
BOBBINS, ENGLISH LEATHER BELTINGS
V ROPES OF ALL MAKES, ENGLISH & OTHER
ROLLER SKINS, MACHINERY CLOTH &
MACHINERY SPARE PARTS.

Telegrams: CHARITY.

Telephone: 58.

### பி. எஸ். ஜி.

### அறநிலைய அச்சகம்,

பூளைமேடு, கோவை.

அச்சிடுதல், ரூல் போடுதல்,
பைண்டிங் வரவு செலவு
கணக்கு ஏடுகள்
தயாரித்தல்
முதலியன செய்யப்படும்

மிகவும்
நேர்த்தியான பலநிற
அச்சு வேலைப்பாடுகள்!

### P. சுப்பு செட்டி,

294 ராஜ வீதி, கோயமுத்தூர்.

பேப்பர், போர்டு, இங்க்ஸ்
வியாபாரம்

புனலூர் பேப்பர் மில்லுக்கு
வேஸ்டு பேப்பர் & ரேக்
சப்ளை செய்பவர்.

புனலூர் பேப்பர் மில்ஸின்
டிஸ்டிரிபியூட்டர்.

## S. Karuppanna Gowder,

Bookseller, Stationer & Paper Merchant,
RAJA STREET, COIMBATORE.

*Stockist of:*

**Printing Paper, Printing Inks, Strawboards. Account Note Books, Stationeries, College & High School and all other students & Printers Requirements.**

## மதுரை மெர்க்கண்டைல் கார்பரேஷன்,

முத்துவிநாயகர் கோவில் தெரு,
கோயமுத்தூர்.

எங்களிடம் அச்சாபீசுக்கு வேண்டிய டைப் கேஸ்களும், எல்லாவித கலர் இங்குகளும், ரோலர் காம்போசிஷனும் மற்றும் அச்சாபீஸ்களுக்கு வேண்டிய சாமான்கள் ஆர்டரின்பேரில் குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

TO LET

## சேவையே எமது லக்ஷியம்.

THE PIONEER FIRE & GENERAL INSURANCE COMPANY LIMITED

# பயனீர்

## பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

**கம்பெனி, லிமிடெட்.,**

**தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்**

---o---

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து
முதலிய எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்
களும் ஏற்று வருகிறோம்.

செல்வாக்கும், திறமையும் வாய்ந்த ஏஜெண்டுகளும், ஆர்கனைசர்களும்
தாராளமான நிபந்தனைகளின் பேரில் தேவை.

விபரங்களுக்கு:

**தலைமை ஆபீசுக்கு எழுதுக.**

Grams: 'RENGSONS' Post Box No. 197.

# R. Ramalingaier & Bros.,

DIRECT IMPORTERS OF PAPER & BOARDS

*Distributors:*

For THE MYSORE PAPER MILLS, LIMITED,

*22/55 RAJA STREET, COIMBATORE.*

★ ALL VARIETIES OF PAPERS, CARD BOARDS AND STRAW BOARDS AVAILABLE ★

A TRAIL SOLICITED.

# ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட்,

லோகநாதபுரம், போத்தனூர்.

முதன் முதலாக செங்குந்தர்களால் நிறுவப்பட்ட மில்.

கோயமுத்தூரில் பெயர் பெற்ற மில்களின் வரிசையில் சேர்ந்த இந்த மில்
தக்க அனுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்பெற்று வருகிறது.

இந்த மில்லில் உயர்தரமான நூல்களும்,
பலரகமான துணிகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**14784 கதிர்களும், 176 தறிகளும்**
**வேலை செய்து கொண்டிருக்கின்றன.**

ஆரம்பித்த நாள் முதல் இன்று வரையிலும் பங்குதாரர்களுக்கு
நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடெரீஸ்

## V. S. செங்கோட்டையா & பிரதர்ஸ்,

பக்தி விலாஸ், ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

# தி நீலகிரி வெஜிடேபிள் மார்ட்,

புது மார்க்கெட், கோயமுத்தூர்.

H. O. புளுமவுண்டன் பொடேடோ Co., மேட்டுப்பாளையம்.

புத்தம் புதியதுமான நீலகிரி
காய் வகையருக்கள் முக்கியமாக உருளைக்
கிழங்குகள் பொது மக்களுக்கும், ஹாஸ்டல்கள் மில் கான்டின்கள்
ஆஸ்பத்திரிகள் இன்னும் இதர ஸ்தாபனங்களுக்கும்
சப்ளை செய்பவர்கள்.

தந்தி: "இராஜலெக்ஷ்மி" போன்: 82

## இராஜலெக்ஷ்மி மில்ஸ் நூல்கள்

உண்மைக்கும் உறுதிக்கும்
உழைப்பிற்கும்
பெயர் பெற்றவை.

# இராஜலெக்ஷ்மி மில்ஸ் லிமிடெட்.

உப்பிலிபாளையம், சிங்காநல்லூர் P. O.

**கதிர்கள் 26,592**

**19-ம் நெ. முதல்**
**60-ம் நெ. வரை**

**B. ரங்கசாமிநாயுடு அண்டு சன்ஸ்**

மானேஜிங் ஏஜண்ட்ஸ்,

உப்பிலிபாளையம், சிங்காநல்லூர் போஸ்ட்.

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A. M. I. E. E. (London) and Printed at the P. S. G.-Industrial Institute Press,

# ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்
# அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

ஆதரைஸ் ஆன மூலதனம், ரூ. 10,00,000 வசூல் செய்யப்பட்ட மூலதனம் ரூ. 7,51,250

**வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30.000**

2-ம் நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

## பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய

இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.

*Telegrams: PIONEER.* *Telephone: 160*

*The Mills are situated at Peelamedu, Coimbatore and are equipped with 19,280 spindles. The mills specialise in the spinning of yarns from counts 40s to 80s, carded and 100s combed.*




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAR 1949
MADRAS

*Registered Office:* **Peelamedu, Coimbatore.**

*Managing Director:* **G. R. Govindarajan.**

P. S. G. C. I. I. Press, Peelamedu, Coimbatore.